


லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ சந்தித்தேன்.. சிந்தித்தேன்... ★ முத்துலட்சுமி ராகவன்




முத்துலட்சுமி ராகவன்
சந்தித்தேன்.. சிந்தித்தேன்..
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ சந்தித்தேன்.. சிந்தித்தேன்... ★ முத்துலட்சுமி ராகவன்
லட்சுமி பாலாஜி பதிப்பகம்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# சந்தித்தேன் சிந்தித்தேன்

## 1

'மலைகளின் இளவரசி...' என்ற பெயருக்குரிய.. இளமை ததும்பும் கொடைக்கானல் மலை.. அதன்.. ஓங்கி உயர்ந்த யூகலிப்டஸ் மரங்களுடன் அழகாகக் காட்சி தந்தது.. எங்கும் சுற்றுலாப் பயணிகளின் தலைகள்..

'போன தலைமுறையை விட... இந்தத் தலைமுறையில் ஓய்வு நாள்களை ஊர் சுற்றிப் பார்த்து உல்லாசமாகச் செலவழிக்கும் வழக்கம் அதிகரித் திருக்கிறது..' என்று எண்ணிக் கொண்டான்... ஆதித்யன்...

சாலையோரமாக வரிசை கட்டியிருந்த கார்களின் பின்னால் தனது விலையுயர்ந்த வெளிநாட்டுக் காரை நிறுத்திவிட்டு.. காரைப் பூட்டிக் கொண்டு இறங்கி... சரிந்து... மரங்களுக்கிடையே நடந்தான்..

"சார்... சார்..." என்று அழைத்தபடி... ஆதித்யனின் பின்னாலேயே வேகமாக வந்தான் ஒருவன்..

சலிப்புடன் நின்று திரும்பிப் பார்த்தான் ஆதித்யன்..

"என்ன..?"

"உங்கள் கார் சாவி.... கதவிலேயே விட்டுவிட்டு வந்துவிட்டீங்களே.. நல்ல வேளையாய் நான் பார்த்தேன்.. வேறு யாராவது பார்த்திருந்தால் என்னவாகியிருக்கும்.."

"என்னவாகியிருக்கும்...?"

கேள்வி கேட்ட ஆதித்யனை வினோதமாகப் பார்த்தான் அவன்.

"என்ன சார் இப்படிக் கேட்டுட்டிங்க.. உங்க காரின் மதிப்பு ஒரு கோடியைக் தாண்டும் போல இருக்கே... இப்படி கேர்லெஸ்ஸாக இருக்கலாமா..? கார் திருடுகிற வங்க கண்ணில்பட்டால் கடத்திக் கொண்டு போயிருப்பாங்களே.."

அவன் சாவியைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டான். அசிரத்தையுடன் 'சூள்' கொட்டியபடி சாவியைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்ட ஆதித்யன்.. ஊசி மரக் காட்டுக்குள்.. மெதுவாக நடந்தான்..

'ஒரு கோடி...' மனம் கனத்தது..

இந்த ஒரு கோடியை வைத்து அவனுடைய பிரச்னைகளைச் சமாளித்து விட முடியுமா..? இத்தனை வருடங்களாகக் கட்டிக் காத்து வரும் அவனது தொழில் சாம்ராஜ்யம் அழிந்து விடாமல் காப்பாற்றி விடமுடியுமா...? கண்ணெதிரே சரிந்து கொண்டிருக்கும் அந்த சாம்ராஜ்யத்தின் சிதைவைக் காண முடியாமல்தானே... ஒரு கோழைபோல் புறமுதுகு காட்டி... கொடைக்கானலுக்கு அவன் ஓடி வந்திருக்கிறான்...

ஆதித்யன் பெருமூச்சு விட்டான்.. கனக்கும் மனச் சுமையைத் தாங்க இயலாதவனாய்.. அங்கிருந்த மரத்தின் மேல் சாய்ந்து நின்று கொண்டான்..

ஊசி மரக் காட்டுக்குள்ளே.. ஆங்காங்கே நின்று கொண்டிருந்த குதிரைகளின் மேலே... சவாரி செய்யப் போட்டா.. போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள்.. ஜனங்கள்..

ஆங்காங்கே தென்பட்ட காதல் ஜோடிகள்... குளிர் காற்றின் சுகத்தை அனுபவித்தபடி... ஒருவரையொருவர் இறுக்கியபடி நடந்து கொண்டிருந்தார்கள்..

'கவலையில்லாமல் இவர்களால் எப்படி இருக்க முடிகின்றது...?' ஆச்சரியத்துடன் மேலே நடந்தான் ஆதித்யன்..

'என்னால் ஏன் இவர்களைப் போல் சிரிக்க முடிய வில்லை.. இறக்கை விரித்துச் சிட்டுக் குருவியைப் போல் பறக்க முடியவில்லை... நான் மட்டும் ஏன் இப்படி இருக்கிறேன்...?'

கேள்விகளுக்கான விடைகளைத் தேடியது அவனுடைய மனம்... பதில் இல்லாத கேள்விகளை வாழ்க்கையில் தினம் தினம் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறான்...

அவன் பின்னால் கலாட்டா கலந்த உற்சாகமான கூச்சல் கேட்டது.. திரும்பிப் பார்த்தான்.. இளம் வயது இளைஞர்கள்

கூட்டம் ஒன்று அவனைக் கடந்து சென்றது..

அந்த மாணவர்களின் வயதில் சிரித்து வாழ்வதற்குப் பதில் சிந்தனையுடன் வாழ வேண்டிய கட்டாயம் ஆதித்யனுக்கு ஏற்பட்டது... சந்தோசத்தைத் துரத்திக் கொண்டு ஓட வேண்டிய வயதில்... அவன் பணத்தைத் துரத்திக் கொண்டு... பணத்தின் பின்னால் ஓடிக் கொண்டிருந்தான்.. அதன் பலனாக.. 'தென்னிந்தியாவின் முதன்மையான இளந்தொழிலதிபன்...' என்ற பெயரையும் பெற்றான்.

இன்று இந்தியாவின் முதல் பத்துத் தொழிலதிபர்களின் வரிசையில் அவன் பெயரும் இருக்கிறது.. அதைத் தக்க வைத்துக் கொள்ளத்தான்... அவன் அவனது இளமைக் காலம் முழுவதையும் பணையம் வைத்தான்..

'ஆதித்யா குரூப் ஆஃப் கம்பெனிஸ்...'

இந்தியாவின் அனைத்து நகரங்களிலும் கிளை விரித்திருக்கும் பல்வேறு தொழில் ஸ்தாபனங்கள்.. அதை நிறுவியவன்.. மிக இளம் வயதுடைய ஆதித்யன்...

ஆதித்யனின் பதினைந்தாம் வயதில் அவனுடைய தந்தை காலமாகி விட்டார்... படிப்புடன்.. தொழிலையும் கவனித்துக் கொண்டவன்.. தனிமையில் கணவனின் நினைவோடு போராடிக் கொண்டிருந்த தாயைக் கவனிக்காமல் விட்டுவிட்டான்..

விளைவு.. அவனுடைய பதினேழாம் வயதில் அவனின் தாயும் கண் மூடிவிட்டாள்.. வாழ்க்கையில் முதன் முறையாகத் தனிமையை உணர்ந்தவனுக்கு.. உட்கார்ந்து அழக்கூட நேரம் இல்லை..

ஆதித்யனின் தந்தை உருவாக்கியிருந்த.. 'ஆதித்யா இம்போர்ட்.. அன்ட் எக்ஸ்போர்ட்' கம்பெனி ஆட்டம் கண்டு கொண்டிருந்தது...

புயல் போல் கம்பெனியின் பொறுப்பை எடுத்துக் கொண்டு சுழன்றான் ஆதித்யன்.. தன் தந்தைக்கு நம்பிக்கையான நபர்களை முக்கியப் பொறுப்புகளில் அமர்த்தினான்.. கல்லூரிக்கு வாரத்தில் நான்கு நாள்கள் மட்டுமே சென்று வந்தான்.. வருகைப் பதிவேட்டில் மயிரிழையில் தப்பித்

தேர்வுகளை எழுதினான்.. பத்தொன்பது வயதில் டிகிரி முடித்தான்.. இருபத்தோரு வயதில் எம்பிஏ முடித்தான்..

அதன்பின் இருபத்து நான்கு மணி நேரமும் அவன் உழைத்த உழைப்பில் கம்பெனி அசுர வளர்ச்சியை அடைந்தது...

'ஆதித்யா இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட்' கம்பெனியாக இருந்தது.. 'ஆதித்யா குரூப் ஆஃப் கம்பெனிஸ்...' ஆகக் கிளை விரித்துப் பரந்தது...

இப்பொழுது ஆதித்யனுக்கு இருபத்தொன்பது வயது.. இன்றைக்கு அவனைத் தெரியாத மனிதர்கள் வியாபார உலகில் இல்லை... அவனுடைய வேகம்.. பல பேருக்கு.. வழிகாட்டியாக இருந்திருக்கிறது..

அப்படிப்பட்ட ஆதித்யன்.. அரை நொடி நேரம்.. கண்மூடி யோசிக்கக் கூட நேரம் கிடைக்காத ஆதித்யன்.. ஒரு பேச்சைப் பேசக்கூடக் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே பேசும் ஆதித்யன்.. யாருமில்லாத அநாதையாக.. கொடைக்கானலில் ஊசி மரங்களின் இடையே நடந்து கொண்டிருந்தான்...

"அங்கிள்... என்னுடைய பால்..."

அவன் மேல் பட்டுத் தெறித்து விழுந்தது.. வண்ண மயமான கெட்டி பலூனின் காற்றடைத்த பந்து ஒன்று..

"ஸாரி.. அங்கிள்.." என்றபடி அவன் முன் வந்து நின்றது அந்தப் பெண் குழந்தை..

ஆறு வயதிருக்கும்.. அழகான பிங்க் நிறக் கவுன்.. அடுக்கடுக்கான வரிசை ஃபிரில்களுடன் தைக்கப்பட்டு இருந்தது.. அழகான பெரிய கண்களை விரித்து அவனைப் பார்த்து.. 'ஸாரி..' சொன்னது.. அந்தக் குழந்தை...

அவன் குனிந்து பந்தை எடுத்துக் கொடுத்ததும்..

"தேங்க் யு..." என்றபடி ஓடிவிட்டது.

'குழந்தைகள் கடவுள் கொடுத்த வரம்...' என்று நினைத்துக் கொண்டான் அவன்..

அவன் குழந்தையாக இருந்தபோது அவனைக் கொஞ்சிப் பேசி.. சீராட்டி வளர்த்த அவனுடைய பெற்றோர் இப்போது

அவனுடன் இல்லை...

இதைப் போன்ற ஒரு குழந்தைக்குத் தகப்பன் ஆகி.. கொஞ்சி வளர்க்கும் பாக்கியம் அவனுக்குக் கிடைக்குமா..?

மனதில் பாறாங்கல் அமர்ந்தது.. அவன் மீண்டும் நின்றான்.. அவனைச் சுற்றியிருந்த அனைவரும்.. சிரித்துப் பேசிக் கொண்டு கவலையில்லாமல் இருப்பதைப் பார்த்தான்.

கண்ணதாசனின் பாடல் வரிகள் அவனுடைய அப்பாவிற்கு மிகவும் பிடிக்கும்.. அடிக்கடி கேட்பார்..

அந்தப் பாடல்களில் ஒன்றை அவன் அடிக்கடி இப்போது கேட்கிறான்..

"ஊரெல்லாம் தூங்கையிலே...

விழித்திருக்கும் என் இரவு...

உலகமெல்லாம் சிரிக்கையிலே...

அழுதிருக்கும் இந்த நிலவு..."

ஏன் இப்படி ஆனது...? எந்த நொடியில்.. அவனது தொழில் சாம்ராஜ்யத்தின் அடிக்கல் ஆட்டம் காண ஆரம்பித்தது...?

அவனால் அதை யூகிக்க முடியவில்லை.. அதற்கான கால அவகாசம் கடந்து விட்டது... ஆனாலும் போராளியான அவன் போராடித்தான் பார்த்தான்... கடைசியில் தோல்வியைச் சந்திக்கும் திராணியில்லாதவனாக.. கொடைக்கானல் வந்து விட்டான்.

அவனுக்குத் தெரியும்... இது ஒரு தப்பிக்கும் முயற்சி என்பது... பிரச்சனைகளைச் சந்திக்கத் தைரியமில்லாமல் ஓடி ஒளியும் கோழையல்ல அவன்... ஆனால் நிராயுத பாணியாய்ப் போர்க்களத்தில் எப்படி அவனால் நிற்க முடியும்...?

ஒன்றைச் சரி செய்யப் போனால்.. இன்னொன்று முளைத்து எழுந்தது... அதைத் தொட்டாலோ.. அதன் பின்னே ஆயிரம் சிக்கல்கள் முளைத்தன.. சரி செய்யப் போராடிப் போராடி இறுதியில் ஓய்ந்து போய் விட்டான்..

ஓடிக் களைத்தவனுக்கு ஓய்வு தேவைப்பட்டது... நிரந்தரமான ஓய்வு.. இனி ஓடத் தேவையிருக்காத ஓய்வு..

எல்லாவற்றையும் இழந்து நின்ற போதும்.. இமயமாய் நின்று போராடியவன் இன்று தன்னம்பிக்கையை இழந்து விட்டான்.

தைரிய லட்சுமி இல்லாத இடத்தில் மற்ற லட்சுமிகள் எப்படி நிற்கும்..? அஷ்ட லட்சுமிகளும் அவனை அரவணைத்து நின்ற காலம் போய்விட்டதோ... என்ற அவநம்பிக்கை அவன் மனத்தை அரிக்க ஆரம்பித்தது..

நாளை விடியும் விடியல் எப்படி அமையுமோ என்று ஒவ்வொரு நாளும் தூங்காமல் கழித்த இரவுகளின் இருள்.. மொத்தமாய் அவன் மனதில் சூழ்ந்தது...

அவன் சென்னையை விட்டு நீங்கினான்.. கொடைக் கானலுக்கு அன்று காலையில்தான் வந்து இறங்கினான்... நட்சத்திர ஹோட்டலில் தங்கியவன்.. ஊரைச் சுற்றிக் கொண்டு கிளம்பி விட்டான்...

ஏன் அவன் கொடைக்கானல் வந்திருக்கிறான் என்ற ரகசியம் அவனுக்கு மட்டும்தான் தெரியும்...

ஆதித்யன் ஓய்வெடுக்க முடிவெடுத்து விட்டான்.. நிரந்தர ஓய்வு.. உழைப்பதற்காக மீண்டும்.. எழுந்திருக்கத் தேவையில்லாத ஓய்வு...

"ஹாய்..." அவனெதிரே வந்த பெண்ணொருத்தி சிநேகமாய்ச் சிரித்தாள்...

அவள் கூட வந்த மற்றப் பெண்கள் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டு அவன் முகம் பார்த்தனர்.

அந்தப் பெண்ணின் காற்றாட விடப்பட்டிருந்த கையில்லாத பனியனும்.. இடுப்பை விட்டு இறங்கியிருந்த ஜீன்ஸும் அவன் முகத்தைச் சுழிக்க வைத்தன...

'இந்த குளிரில் எப்படி இவள் இதுபோன்ற டிரஸ்ஸைப் போடுகிறாள்...' என்று நினைத்தபடி அவளை ஏற இறங்கப் பார்த்தான் அவன்..

குளிருக்குப் போட வேண்டிய ஸ்வெட்டரை இடுப்பில் கட்டியிருந்தாள் அந்தப் பெண்.

பதில் பேசாமல் அவன் கடந்து செல்லவும்.. அந்தப் பெண்கள் கூட்டம்... அவனிடம்.. 'ஹாய்' சொன்ன

பெண்ணைக் கேலி செய்து சிரிப்பது அவன் காதில் விழுந்தது.

அவனுக்கு இது பிடிக்காது... ஆறடி உயரத்தில்.. மாநிறத்தில்.. கட்டான உடலமைப்புடன் இருப்பவனின் தோற்றத்தில் வசீகரிக்கப்பட்டு நிறையப் பெண்கள் அவனிடம் பழக முயல்வார்கள்.. அவன் ஒதுங்கிச் சென்று விடுவான்..

"இதுதான் 'குணா..' படத்தில் வரும் குகை..." என்று ஒருவர் சொல்லிக் கொண்டிருக்க.. எல்லோரும் அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க குகையை ஆவலுடன் எட்டிப் பார்த்தார்கள்..

அவன் அந்தக் குகைக்கு எதிர்ப்புறமாக.. கிடுகிடுவெனச் சரிந்து இறங்கிய பள்ளத்தாக்கில் இறங்கினான்.. மெல்ல மக்கள் கூட்டத்தின் பார்வையில் இருந்து மறைந்து... அந்தத் திட்டின் விளிம்பிற்கு வந்தான்.. கீழே பார்த்தான்... விழுந்தால் எலும்புகூட மிஞ்சாத கிடு கிடு பள்ளதாக்கு.. தாவிக் குதிக்கப் போனவனின் கையை யாரோ பற்றி பின்னுக்கு இழுத்தார்கள்.. கோபத்துடன் திரும்பிப் பார்த்தான்.

"சார்.... என்னைக் காப்பாற்றுங்கள்..." என்றாள் அந்த அழகிய பெண்...

# 2

'யாரை... யார் காப்பாற்றுவது...?'

சாகப் போகிறவனின் கையை இழுத்துப் பிடித்து நிறுத்தி...

'என்னைக் காப்பாற்றுங்கள்...' என்று கேட்ட அந்தப் பெண்ணை ஏற இறங்கப் பார்த்தான் ஆதித்யன்.

வெண்மை நிறத்தில்.. பொன் வண்ணக் கற்கள் பதிக்கப்பட்ட சுடிதார் அணிந்திருந்தாள்.. முடியை ஒற்றைப் பின்னலாகப் பின்னி விட்டிருந்தாள்.. முழங்காலைத் தொட்ட அந்தப் பின்னல் அவன் கவனத்தை ஈர்த்தது.. சிவந்த மேனியுடன்.. அழகான முக அமைப்புடன்

இருந்தாள்.. அவள் முகத்தில் கலவரத்திற்குப் பதில் வேறு ஏதோ ஒன்று இருந்தது...

"யார் நீ... உனக்கு என்னதான் பிரச்சனை...?" என்று வினவினான் அவன்...

"சார்... நான் கொடைக்கானலில்தான் இருக்கிறேன்.. மதர் தெரஸா யுனிவர்சிட்டியில் எம்சிஏ படித்துக் கொண்டிருக்கிறேன்.. வீக் என்ட்... ஊர் சுற்றிப் பார்க்க வந்தேன்.. ரவுடிகளிடம் மாட்டிக் கொண்டேன்..."

"தனியாகவா வந்தாய்..?"

"இல்லை சார்.. என் பிரண்டுடன்தான் வந்தேன்.."

"அவள் எங்கே... ஓடிவிட்டாளா..?"

அவன் இகழ்ச்சியாகக் கேட்டான்.. அவள் "சீச்சீ..." யென்று மறுத்தாள்.

"அவள் வீட்டிற்கு கெஸ்ட் வந்திருக்கிறாங்களாம்... போன் வந்தது.. போய் விட்டாள்."

"ம்ம்... அப்புறம் நீ எப்படி ரவுடிகளை மீட் பண்ணின...?"

"ஏன் சார்.. நான் என்னவோ.. அவர்களை மீட் பண்ண வரும்படி அழைத்து விட்டு வந்து மீட் பண்ணியது போல பேசுகிறீங்களே..."

"ஹலோ..."

"என் பெயர் நந்தினி..."

"ஓ... மிஸ் நந்தினி..."

"சொல்லுங்கள் சார்...."

"என் பெயர் கூட ஆதித்யன்..."

"இருக்கட்டும்.. வயதில் பெரியவர்.. உங்களைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது முறையாக இருக்காது.."

'என்னை என்ன இவள் தொண்டுக் கிழவன் என்கிறாளா..?'

நந்தினியை முறைத்தான் அவன்.. அதை உணராதவள் போல் அவள் நின்றாள்..

"ரவுடிகள் துரத்தினால்... வேறு யாரிடமாவது உதவி கேட்க வேண்டியது தானே.. என்னை ஏன் தேடிப் பிடித்து..

கையைப் பிடித்து இழுக்கிற..?"

"சார்... நான் உதவி கேட்டுக் கையைப் பிடித்து இழுத்தேன்..! நீங்கள் இப்படிச் சொன்னால் கேட்பவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்..? வயதுப் பெண்.. கல்யாணம் வேறு ஆக வேண்டும்..."

அவள் கண்களை அகல விரித்து இதைச் சொன்னதினுசில் அவன் சிரித்து விட்டான்.

'இப்படிச் சிரித்து எத்தனை நாள் ஆகிவிட்டது..'

அவன் தன் பிரச்சனைகளை மறந்து அவளுடைய பிரச்சனையைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினான்...

"யார் அந்த ரௌடி...?"

"ரௌடி இல்லை சார்... ரவுடிகள் நான்கைந்து பேர் இருந்தார்கள்..."

"அவர்கள் ஏன் உன்னைத் துரத்தினார்கள்..."

"ஏன் சார்... பார்க்க இவ்வளவு ஸ்டைலாய் இருக்கறீங்க.. நிச்சயம் பெரிய சிட்டியிலிருந்துதான் வந்திருப்பீங்க..."

"சென்னையிலிருந்து வருகிறேன்..."

"ம்ம்.. அப்படியிருக்க.. இப்படி ஒரு கேள்வியைக் கேட்கறீங்களே.. நானே வயதுப் பெண்..."

"ஓஹோ..."

"ஏன் சார்.. அப்படி ஆராய்ச்சியாய்ப் பார்க்கிறீங்க..."

"அடிக்கடி.. நான் வயதுப்பெண்.. நான் வயதுப் பெண்ங்கிறாயே... அப்படி.. நீ எத்தனை வயதிருக்கும் பெண்ணென்று பார்த்தேன்..."

"அதெல்லாம் பார்வையிலே தெரிந்து விடுமா..?"

"ஏன்.. தெரியாதா..?"

"நீங்க வேற சார்.. இப்போதெல்லாம் ஆண்டிஸ் கூட மேக்கப் பண்ணிக்கொண்டு ஸ்வீட் ஸிக்ஸ்டீன் போல இருக்கிறாங்க.. வெளித் தோற்றத்தைப் பார்த்துப் ஏமாந்து போகாதீங்க.."

"ம்ம்... தேவைதான் எனக்கு... வழியோடு போகிறவனின் கையைப் பிடித்து இழுத்து... ஏமாளிங்கிறாயா..?"

"ம்ஹூம்... எனக்குக் கையைப் பிடித்து இழுத்தவள்ன்னு பட்டமே கொடுத்து விட்டிங்களா.. சரிதான்.. ஆமாம்.. நீங்கள் என்ன வழியில் நடந்து போய்க் கொண்டா இருந்தீங்க.. அந்தப் பள்ளத்தாகை எட்டிப் பார்த்துக் கிட்டு இருந்தீங்க.. தள்ளி நில்லுங்க சார்... விழுந்து... கிழுந்து வைத்துவிடப் போகிறீங்க...."

'விழத்தான் வந்தேன்.. எங்கே... நீதான் நிம்மதியாய்க் குதிக்க விட மாட்டேங்கிறாயே...'

"என்ன சார் பேசாமல் இருக்கீங்க...?"

"எனக்கும் சேர்த்துத்தான் நீ பேசிக் கொண்டிருக்கிறாயே.."

"அதுதான் சார்.. நான் பாட்டுக்கு வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேனா..."

"எதில் வந்த... எதில் கிளம்பின...?"

"வரும் போது பிரண்டின் ஸ்கூட்டியில் வந்தேன்.. போகும் போது... ஏதாவது ஆட்டோ பிடித்துப் போய் விடலான்னு கிளம்பினேன்..."

"ம்ம்.. இப்போது நீ சொல்ல வந்த கதையைத் தொடரு..."

"ஏன் சார்... அது உங்களுக்குக் கதை மாதிரி இருக்கா...?"

"பின்னே... இல்லையா...?"

"இதுதான் சார்.. இப்படிப்பட்ட சிந்தனையால்தான் சார்.. நம் இந்தியா இப்படி இருக்கிறது..."

"ஓஹோ..."

"மற்றவர்களின் துன்பத்தைத் தன் துன்பமாக யாரும் பார்ப்பதில்லை..."

"அப்படியா..?"

"எல்லோருமே சுயநலவாதிகள்..."

"நானும் அந்த லிஸ்டில் உண்டா...?"

"இல்லைன்னு சொல்வேன்னு நினைத்தீங்களா..?"

"நீயாவது.. இல்லைன்னு சொல்வதாவது.. இதை விட்டு விட்டு ரவுடிகளின் கதைக்கு வருகிறாயா...?"

"இவ்வளவு சொல்லியும் திரும்பவும் கதை என்கிறீங்களா..?"

"தப்பு.. தப்பு.. தப்பு.. கன்னத்தில் போட்டுக்கிட்டேன்.. போதுமா..."

"போதாது..."

"வேறு என்ன செய்ய வேண்டும்..."

"கடைசி வரைக்கும் என்னைக் கைவிடாமல் காப்பாற்ற வேண்டும்.."

"என்ன சொல்கிற...?"

அவனுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது.. அவளை நன்றாகப் பார்த்தான்.. அகன்ற விழிகளில் ஓர் அறியாமை யுடன் அவனைப் பார்த்தாள் அவள்..

'நான் இவளை ஏன் கையைப் பிடித்து இழுத்தாய்ன்னு கேட்டால் தப்பாம்.. இவள் என்னிடம் கைவிடாதீங்கன்னு கேட்டால் அது மட்டும் தப்பில்லையாம்..'

அவன் இதழ்களில் புன் முறுவல் மலர்ந்தது.. அவளைப் பேசவிட்டுக் கேட்பது அவனுக்குப் புதிதாக இருந்தது.. இதுவரை அவனிடம் பேசியவர்கள்.. அவன் முன்னிலையில் ஓரிரு வார்த்தைகளுக்கு மேலே பேசத் தயங்குவார்கள்..

இவளோ.. தங்கு தடையின்றித் தயங்காமல் பேசுகிறாள்.. அதுவே அவனுக்குப் புதிதாக இருந்தது...

"ஓகே.. நான் உன்னைக் கைவிடவில்லை.. போதுமா..?"

"இப்படிச் சொன்னால் போதுமா...?"

"வேறு எப்படி உன்னை நான் கைவிட மாட்டேன் என்பதை புரூவ் செய்ய வேண்டும் என்கிற...?"

"என் வீடு வரை துணைக்கு வந்து.. என் வீட்டில் என்னை விட்டு விட வேண்டும்.."

"உன் வீட்டிற்கா..?"

"ஏன்.. என் வீட்டிற்கு வந்தால் என்ன...? வீடு வரை வர முடியாதவர்தான் கடைசி வரை கைவிடமாட்டேன்னு வாக்குறுதி கொடுத்தீங்களா...?"

"வாக்குறுதி கொடுத்தேனா... எப்போது...?"

"இப்போதுதானே நீங்கள் உன்னைக் கைவிட மாட்டேன்னு சொன்னீங்க...?"

"ஆமாம்.. அது வாக்குறுதியா..?"

"அது வாக்குறுதியில்லாவிட்டால்... வேறு எதுதான் வாக்குறுதி...? நானெல்லாம்.. ஒரு சொல்... ஓர் வார்த்தையில் நிற்பவளாக்கும்..."

சாகப் போனவனின் கையைச் சட்டமாகப் பிடித்து இழுத்து நிறுத்தி வைத்துக் கொண்டு பேசிக் கொண்டி ருந்தவளைப் பார்த்தபடி.. அவன் முன்னே ஒரு எட்டு வைத்தான்...

"இது எல்லாம் சரிதான்.. அந்த ரவுடிகள் கதையைத் தான் பாதியில் விட்டு விட்டாய்..."

"கதையா...?" என்று முறைத்தவள்..

"வீட்டுக்கு வாங்க... மீதிக் கதையைச் சொல்கிறேன்.." என்றாள்.

"உன் வீட்டுக்கு என்னை வர வைக்காமல் விட மாட்டாய் போல..." அவன் மெல்ல... மேலே ஏறினான்..

"ஹலோ சார்.. இதுதான் நீங்கள் கை விடாமலிருக்கும் லட்சணமா...?" அவள் கீழே நின்று கொண்டு குரல் கொடுத்தாள்..

அவன் திரும்பிப் பார்த்து,

"என்ன...?" என்று வினவினான்..

"நான் எப்படி மேலே ஏறுவது... கைகொடுக்க வேண்டாமா...?"

அவளது அதட்டலை ரசித்தபடி அவளுக்குக் கை கொடுத்தான் அவன்.. கைப் பிடித்து மேலே வந்தவளிடம்..

"இவ்வளவு வாயடிக்கிறாயே.. இந்த மேட்டில் ஏற முடியாதா..?" என்று கேட்டான்..

"ஹய்யோ.. இதில் போய் என்னால் எப்படி சார் ஏற முடியும்..?"

"இறங்க மட்டும் முடியுமா..?"

"அது செம ஈஸி சார்... சும்மா.. சறுக்கு மரத்தில் சறுக்குவது போல் சறுக்கிட்டே இறங்கி விடலாம்..."

என்று சிரித்தவளின் முகத்தையே குறுகுறுவெனப் பார்த்தான் அவன்...

"ஏதோ சொல்ல நினைக்கிறாய்.. போல... அது என்னவென்று சொல்லி விடு..."

"ம்ம்.. இல்லை வேண்டாம்..."

"சும்மா சொல்லு... சொல்ல நினைப்பதைச் சொல்லாமலிருப்பது உனக்கு எவ்வளவு கஷ்டம்ன்னு எனக்குத் தெரியாதா...?"

அவன் குறும்பாகக் கூறவும்... அவள் ரோசத்துடன் அவனை முறைத்தாள்...

"உங்களுக்கு அந்த ரௌடிகளே மேல்..."

"அப்படியென்றால் அவர்களைக் கூப்பிடவா...?"

"அவன்கள் எல்லாம் அப்போதே ஓடி விட்டான்களே.."

"அப்புறமும் ஏன்.. என்னைத் துணைக்குக் கூப்பிடுகிற..?"

"ஒளிந்து கொண்டிருந்து விட்டுத் திடீர்ன்னு வந்து விட்டால் என்ன செய்வது..?"

"கெட்டிக்காரிதான்... பிழைத்துக் கொள்வாய்..."

அவள் மீண்டும் அவனைப் பார்த்து விட்டுப் பேசாமல் நடந்தாள்..

"இதோ பார்... உன்னால் பேசாமலிருக்க முடியாதே.. ஏன் வீணாய் ரிஸ்க் எடுக்கிற... சொல்ல வந்ததைச் சொல்லி விடு..."

"வாழ்க்கையிலும் இறங்குவது ஈஸி சார்.. ஏறுவது தான் கஷ்டம்.. உங்களைப் பார்த்தால்... நீங்கள் சளைக்காமல் மேலே ஏறுகிறவர் போலத்தான் தெரிகின்றது.."

"இதையேன் இப்போது நினைக்கிற...?"

"சும்மா...மா..."

அவன் கண் சிமிட்டிச் சிரித்தாள்.. அவனுக்கு அவளது செயல்களைக் கண்டு வியப்பாக இருந்தது...

முன்பின் பார்த்து அறியாதவனிடம்.. வெகுகாலம் பழகியது போல் பேசிச் சிரிக்கிறாள்.. சற்று முன் ரவுடிகள் துரத்தியதாகக் கூறுகிறவள் அதைப்பற்றிய பதட்டமோ... பயமோ இல்லாமல் இயல்பாகப் பேசிக் கொண்டு வருகிறாள்.. யார் இவள்...?

சாலையில் ஏறியதும்... அவனது காரைத் தேடிக் கதவைத் திறந்து விட்டான் அவன்..

"ஏறு..." என்றான்..

"இது உங்கள் காரா சார்...?" அவள் ஆச்சரியமாகக் கேட்டாள்..

"ஆமாம்... ஏன்...?"

"ஹய்யோ.. இது எவ்வளவு அழகாக இருக்கிறது...!"

"ஈஸிட்...?"

"என்ன விலை சார்...?"

"இரண்டு கோடி தான்.. வாங்கிக் கொள்கிறாயா..."

"அது சரி... ஒரு ஓட்டை ஸ்கூட்டி வாங்கித் தருவதற்கே இங்கே வழியைக் காணோம்.. காரை வாங்கித் தந்து விட்டுத்தான் என் அப்பா வேறு வேலை பார்ப்பார்.."

"உன் வீட்டில் கார் இல்லையா...?"

"ம்ம்.. ஒரு ஓட்டைக் கார் இருக்கிறது..."

"உன் வீட்டில் எல்லாமே ஓட்டைதானா...?"

அவன் காரில் ஏறி அமர்ந்து ஓட்டிய வண்ணம் கேட்டான்.. அவள் அவனது கேள்வி புரியாமல் அவனைப் பார்த்தாள்.

# 3

"ஏன் அப்படிப் பார்க்கிற...?"

"எங்கள் வீட்டில்.. வேறு எது ஓட்டை...?"

"இல்லை.. உனக்கு ஓட்டை வாயாயிற்றே... அதைத்தான் சொன்னேன்.." அவன் அடக்க மாட்டாமல் சிரித்தான்.. அவள் முகம் சிணுங்கியது...

"என்னது.. என்னை ஓட்டை வாய்ன்னு சொல்கிறீங்களா..."

"ஹா.. ஹா... நந்தினி... எனக்கென்னவோ அப்படித்தான் தோன்றுகிறது..."

"தோன்றும்.. தோன்றும்..."

அவள் உதட்டைச் சுழித்து அழகு காட்டிவிட்டு.. அவனது காரில் இருந்த சிடிக்களைக் கலைத்துப் பார்த்தாள்..

"எல்லாம் பழைய பாட்டாவே இருக்கே..."

"ம்ம்..."

"இதையா கேட்பீங்க..."

"ம்ம்ம்...!"

"அதுதான் இப்படி அழுது வடிகிறீங்களா...?"

"என்ன சொல்கிற..."

கோபத்துடன் அவளைத் திரும்பிப் பார்த்தவனுக்குக் கோபம் வரவில்லை.. பகபகவென்று சிரிப்புத்தான் வந்தது..

"பழைய பாட்டைக் கேட்டால் அழுது வடிவாங்கன்னு யார் சொன்னது...?"

"ஏன்.. நான்தான் சொல்கிறேன்.."

"எதை வைத்து அப்படிச் சொல்கிறாய்...?"

"எதை வைத்தா... ம்ம்.. இதை வைத்துத்தான்..."

நந்தினி ஒரு சிடியை எடுத்துப் போட்டு விட்டாள்.. பாடல் ஒலிக்க ஆரம்பித்தது...

"என் வேதனையில்...
உன் கண்ணிரண்டும் என்னோடு...
அழுவதேன் கண்ணா..."

"கடவுளே..." என்றபடி பாடலை ஓட விட்டு.. வேறு பாடலைப் போட்டு விட்டாள் நந்தினி..

"உன் கண்ணில் நீர் வழிந்தால்...

என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி..."

"இதிலும் கண்ணீர்தானா.." என்றபடி வேறு பாடலுக்கு மாற்றி வைத்தாள் நந்தினி..

"சொல்லி அழுதால் தீர்ந்து விடும் - அதைச்

சொல்லத்தானே வார்த்தையில்லை.."

என்று பாடல் வந்தது..

"அட.. சட்.." என்றபடி பிளேயரை அணைத்து விட்டாள் நந்தினி..

"ஏன் சார்.. இந்த அழுவாச்சி பாடல்களைத்தான் தினமும் கேட்கறீங்களா.. விளங்கினாப்புலதான்.."

"உனக்கு செலக்டிவ்வாய் பாட்டுக் கேட்கத் தெரிய வில்லை.. இப்போது பார்.." என்றபடி ஆதித்யன் பாடலைப் போட்டு விட்டான்...

"வாழ நினைத்தால் வாழலாம்...

வழியா இல்லை பூமியில்...

ஆழக் கடலும்.. சோலையாகும்...

ஆசையிருந்தால் நீந்தி வா..."

என்று பாடல் ஒலித்தது...

"கேட்டாயா..?"

"ம்ம்.. கேட்டேன்.. கேட்டேன்.. உங்களைப் பார்த்தால் இது போலப் பாட்டைக் கேட்பவர் போல் தெரியவில்லை..."

"கண்ணுக்குத் தெரிவதெல்லாம் உண்மையான தோற்றமில்லை..."

"இதை நீங்கள் எனக்குச் சொல்கிறீங்களா...?"

"ஏன்.. நீ மிகப் பெரிய அறிவாளியா..?"

"நீங்கள் நினைப்பது போல முட்டாளுமில்லை..."

"நான் உன்னை முட்டாள்ன்னு சொன்னேனா...?"

"சொல்லவில்லை.. நினைத்துக் கொண்டிருக்கிறீங்க.."

"ஹா... ஹா..."

"பார்த்து சார்.. பல் சுளுக்கி விடப் போகிறது..."

"ஓ.. நந்தினி.. ஸ்டாப்.. இதற்கு மேல் என்னால் சிரிக்க முடியவில்லை.. வயிறு வலிக்கிறது.."

"இதுதான் நாம் இறங்க வேண்டிய ஸ்டாப்... கொஞ்சம் வீட்டிற்குள் காரை விடுகிறீங்களா...?"

கொடைக்கானலின் அடையாளமான மலர்த் தோட்டத்தின் மத்தியில் அழகாகத் தெரிந்த அந்த வீட்டை நோக்கி... காரைச் செலுத்தினான் ஆதித்யன்...

"ஒன் மினிட் சார்.."

நந்தினி ஓடிப் போய் காம்பவுண்டு கேட்டைத் திறந்து விட்டாள்.. கார் உள்ளே நுழையவும்.. கேட்டைப் பூட்டி விட்டு... மீண்டும் வந்து காரில் ஏறிக் கொண்டாள்...

"அதுதான் உன் வீட்டிற்குப் பத்திரமாய் வந்து விட்டாயே.. இனி நான் போகிறேனே.. என் துணை இனி உனக்குத் தேவையில்லையே..."

"நன்றாக இருக்கிறதே... ரவுடிகளிடம் மாட்டித் தப்பித் பிழைத்திருக்கிறேன்.. என்னைக் காப்பாற்றிய மாவீரன் நீங்கள் வேறு கூட வந்திருக்கிறீங்க.."

"மாவீரன்னு யாரைச் சொன்னாய்..?"

"ஏன் உங்களைத்தான் சொன்னேன்..."

"கிழிஞ்சது போ.. இது உனக்கே கொஞ்சம் ஓவராய்த் தெரியவில்லையா..?"

"தெரியலையே..."

"அது சரி.. உனக்கு எதுதான் ஓவராகத் தெரியப் போகிறது...?"

"கிரிக்கெட்டில் மட்டும் ஓவர்... ஓவராய்த் தெரியும்.."

"ஹா.. ஹா..."

ஆதித்யன் மீண்டும் சிரித்தான்.. நந்தினி அவசரமாய் கார் கண்ணாடிகளை ஏற்றி விட்டாள்..

"ஏன்...?"

"இப்படியா சார் சிரிப்பீங்க.. எங்கள் வீட்டிலிருக் கிறவங்க பயந்து விட மாட்டாங்களா...?"

"நீயே பயப்பட மாட்டாய்.. உன் வீட்டிலிருக்கிறவங்க மட்டும் பயந்து விடுவாங்களா...?"

"போங்க சார்... எனக்கா பயமில்லை..? ரௌடிகளைப் பார்த்துப் பயந்தவள்தானே நான்..."

"என்னவோ நந்தினி.. நீதான் ரௌடி.. ரௌடின்னு வெறும் வாயால் சொல்கிற...."

"வேறு எப்படி சார் சொல்ல வேண்டும்.. சூயிங்கம் மென்று கொண்டே சொல்ல வேண்டுமா...?"

"ஹாஹா.. நந்தினி.. சிரிப்பு மூட்டாதே.. ஹா.. ஹா.."

"பின் நீங்க ஏன் அப்படிச் சொன்னீங்க..."

"கடைசி வரைக்கும் ரௌடிகளை நீ கண்ணில் காட்டவேயில்லையே.."

"அவனுக மூஞ்சியில்.. எந்த மூஞ்சியும் பார்க்கிறது போல இல்லை சார்.. நீங்கள் அவன்களைப் பார்க்காமல் இருந்ததே நல்லது.."

ஆதித்யன் அப்படியே ஸ்டியரிங்கில் கவிழ்ந்து சிரிக்க ஆரம்பித்து விட்டான்.. அவன் ஒரு வழியாய்ச் சிரித்து முடித்துக் கண்களில் நீரோடு நிமிர்ந்தான்...

"தேங்க்ஸ் நந்தினி.."

"எனக்கு எதற்கு சார் நீங்கள் தேங்க்ஸ் சொல்லனும்..? நான்தான் உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லனும்.."

"என்னவோ.. நான் சினிமாப்பட ஹீரோ மாதிரி ஏழெட்டு ரவுடிகளுடன் சண்டை போட்டு உன்னைக் காப்பாற்றியது போல இவ்வளவு பில்ட் அப் கொடுக்கிறாயே.."

"அது நிஜம்தானே சார்..."

"என்னவோ போ.. நான் இப்படி மனம் விட்டுச் சிரித்ததே இல்லை.. வருடக் கணக்கா என் சிரிப்பைத் தொலைத்திருந்தேன்.."

"ஏன்...?"

நந்தினியின் கேள்விக்குப் பதில் சொல்ல வாயெடுத்த ஆதித்யன்.. வீட்டுக்குள்ளேயிருந்து.. ஒரு நடுத்தர வயதுப் பெண்மணியும்.. இரண்டு சிறுவர்களும் வருவதைக்

கண்டு.. கார் கதவைத் திறந்தான்.. மறுபக்கம் கதவைத் திறந்து கொண்டு நந்தினி இறங்கினாள்..

"என்ன நந்து.. காரில் வந்து இறங்குகிறாயே.. யாருடைய கார் இது...? நம்ம கார் போல் இல்லையே..."

"இது வேறு நினைப்பா உங்களுக்கு..? இது கார்.. நம் வீட்டில் இருப்பது கார் போல இருக்கும் தகர டப்பா..."

மகள் பேசுவதற்குப் கடிந்து பதில் சொல்ல வாயைத் திறந்த மலர்விழி ஆதித்யனைக் கண்டதும் வாயை மூடிக் கொண்டாள்..

"யாருக்கா இது..."

"முதலில் நீங்க இரண்டு பேரும் யாருன்னு இவர் கிட்ட சொல்லி விடுகிறேன்டா.. ஆதித்யன் சார்... இவங்க என் அம்மா.. என் அப்பா.. மிஸ்டர் மகேந்திரன் இந்தக் கொடைக்கானலில் ஹோட்டல் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறார்.. அந்த ஹோட்டலைக் கூட இருந்து பார்த்துக் கொள்வது என் சித்தப்பா தெய்வேந்திரன்.. என் சித்தி.. மிஸஸ் ஆனந்தி தெய்வேந்திரன் வீட்டிற்குள்ளே வேலையாக இருக்கிறாங்க.. இந்த வாண்டூஸ் இரண்டு பேரும் என் சித்தப்பா பையன்கள்.. வருண்... அன்ட்.. தருண்..."

"பேசி முடிச்சிட்டியா.. ஏன்க்கா... நீ வாயைத் திறந்தால் மூடவே மாட்டாயா..?"

"ஹா... ஹா..."

"நீ முதலில் உன் வாயை மூடுடா.. ஏன் சார்.. இவனையெல்லாம் ஒரு பெரிய மனிதன்னு.. இவன் பேசுவதை ரசித்துக் சிரிக்கிறீங்களே.."

"உண்மையைச் சொல்வதில் பெரியவன் என்ன. சின்னவன் என்ன.." என்ற ஆதித்யனை வருணுக்கு மிகவும் பிடித்து விட்டது.

"ஹலோ சார்.. ஐ லைக் யு வெரி மச்..." என்று கை கொடுத்தான்..

"என்ன நந்தினி.. உனக்கு எதிர்ப்பாகப் பேசினால்.. இந்த வாண்டுகளுக்கு மிகவும் பிடிக்கும் போல இருக்கே.."

"ஏன் சார்.. என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீங்க.. முதலில் நீங்க உள்ளே வாங்க.. அம்மா.. இவர்தான் ஆதித்யன்.."

இப்படி ஒரு அறிமுகத்தை மகேந்திரனிடம் செய்து வைத்திருந்தால் அவர் உடனே ஆதித்யன் யாரென்று அடையாளம் கண்டு கொண்டிருப்பார்.. ஆனால் வீட்டுப் பறவையான மலர்விழி ஆதித்யன் யாரென்று தெரியாமல் திருதிருவென்று விழித்துக் கொண்டு...

"வணக்கம் வாங்க.." என்று ஒரு மரியாதைக்குச் சொல்லி விட்டு வீட்டுக்குள் விரைந்தாள்..

"வாங்க.. அட வாங்க சார்..."

ஆதித்யனின் கையைப் பிடித்து இழுக்காத குறையாக இழுத்துக் கொண்டு நந்தினி வீட்டுப்படியேறினாள்..

"யாருன்னு தெரியலை ஆனந்தி.. நம்ம வீட்டு சுனாமி.. இன்றைக்கு இழுத்துக் கிட்டு வந்திருக்கிற பிரச்சனை இதுதான் போல.." என்று சத்தமாய் மலர்விழி.. ஆனந்தியிடம் பேசிக் கொண்டிருந்தாள்..

ஆதித்யனின் முகம் சுருங்கியது.. அதைக் கவனித்த நந்தினி..

"டேய் தருண்.. ஒடிப் போய் நம்ம வீட்டு லவுட் ஸ்பீக்கர் இரண்டையும் ஆஃப் பண்ணி வை.. சார் பயந்து கொண்டு வீட்டுக்குள் வராமல் ஓடிப் போய் விடப் போகிறார்.." என்று சின்னவனை வீட்டுக்குள் விரட்டி விட்டாள்..

உள்ளே போன தருண்.. "உஷ்..." என்று வாயில் விரலை வைத்துத் தன் பெரியன்னையையும்.. அன்னையையும் எச்சரித்தான்..

"என்னடா..."

"சுனாமி கோபப்படுது..."

"அவள் கோபப்பட்டால் எனக்கென்ன வந்தது.. அவள் என்ன பெரிய இவளா.." என்று சத்தமாய்க் கூறிக் கொண்டிருந்த மலர்விழி.. ஆதித்யனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வீட்டுக்குள் வந்த நந்தினியைக் கண்டதும்.. 'கப்சிப்...' பென்று அடங்கிப் போனாள்..

தாயை முறைத்தவாறு.. ஆதித்யனை சோபாவில் தோளைப் பிடித்து உட்கார வைத்த நந்தினி.. ஆனந்தியைப் பார்த்து...

"சித்தி.. இவர் பெயர் ஆதித்யன்.." என்றாள்..

"வணக்கம்.." என்று மரியாதையுடன் கை குவித்தாள் ஆனந்தி...

"சித்தி.. உங்கள் அக்காவிடம் சொல்லி விடுங்கள்.. இவர் யாரோ ஒரு ஆள் இல்லை.. என்னை ரவுடி களிடமிருந்து காப்பாற்றியவர்.."

'இந்தக் கதையையே திரும்பத் திரும்பச் சொல்கிறாளே.. நான் எந்த ரவுடிகளிடமிருந்து இவளை எப்போது காப்பாற்றினேன்...?'

ஆதித்யன் யோசித்துக் கொண்டிருந்த போது... மலர் விழி பதறிப் போய் மகளருகில் வந்தாள்..

"என்னடி சொல்கிறாய்.. நீ எப்போது.. யாரிடம் மாட்டிக் கொண்டாய்..."

"அதுவாம்மா.." என்று நந்தினி ஆரம்பிக்கும் போதே.. வாசலில் கொர.. கொரவென்று ஒரு சத்தம் கேட்டது..

"ம்ம்.. ரோடு ரோலர் வந்து விட்டது.." என்றாள் சலிப்புடன்..

"ரோடு ரோலரா...?"என்று ஆச்சரியமாய்க் கேட்டான் ஆதித்யன்..

"எங்கள் வீட்டுக் காரைத்தான் சொன்னேன் சார்..."

"காரையா அப்படிச் சொல்கிற..?"

"என்ன சார் செய்வது..? எனக்கும் அதை ரோல்ஸ் ராய்ஸ்ன்னு சொல்ல ஆசைதான்.. ஆனால் உண்மையைத் தானே சொல்லனும்.."

அதற்குள் ஹாலுக்குள் வந்து விட்ட நந்தினியின் அப்பா மகேந்திரன்..

"என்ன மலர்.. நம்ம வீட்டு காம்பவுண்டிற்குள் பாரின் கார் நிற்குது..." என்று ஆச்சரியமாய்க் கேட்டார்...

"அது இவருடைய கார் அப்பா.." என்றாள் நந்தினி..

அவள் கை காட்டிய ஆதித்யனைப் பார்த்த மகேந்திரனும்.. அவர் பின்னாலேயே வந்த நின்ற தெய்வேந்திரனும்

ஆச்சரியப்பட்டுப் போயினர்..

# 4

"நீங்கள் ஆதித்யா குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்டி ஆதித்யன் இல்லை.. நீங்கள் எப்படி என் வீட்டிற்குள்..? வாட் எ பிளஸென்ட் சர்ப்ரைஸ்... கிளாட் டு மீட் யு சார்.." மகேந்திரன் ஆச்சரியத்தில் வார்த்தைகள் வராமல் தடுமாறியபடி ஆதித்யனிடம் கை கொடுக்கக் கை நீட்டினார்..

கணவரின் வார்த்தைகளைக் கேட்ட மலர்விழி ஆனந்தியின் காதில்,

"நம்ம வீட்டு சுனாமி ஏதோ பெரிய மனுசனைத்தான் கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கு போல இருக்கு ஆனந்தி.." என்று கிசுகிசுத்தாள்...

"ஆமாக்கா.. ஆனால்.. நம்ம மாமா இப்படிப் பரவசப் பட்டுப் போகிற அளவிற்கு இவர் இவ்வளவு பெரிய ஆளா.." என்று பதிலுக்குக் கூறினாள் ஆனந்தி...

மனைவியும்.. அண்ணன் மனைவியும்.. பேசிக் கொள்வதைக் கேட்ட தெய்வேந்திரன்...

"என்னடி இப்படிக் கேட்கிற.. இவர் இந்தியாவிலேயே பெரிய பிஸினெஸ் மேன்டி.. இவர் எப்படி நம்ம வீட்டுக்கு வந்தார்.." என்று மனைவியிடம் மெதுவாகக் கேட்டார்..

"எல்லாம் உங்க அண்ணன் மகள்தான் இழுத்துக் கொண்டு வந்தாள்..."

"இழுத்துக் கொண்டு வந்தாளா...?"

"ஆமாங்க.. அவரின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டுதான் வந்தாள்..."

"என்னது.. இத்தனை பெரிய மனிதரின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தாளா...?"

தெய்வேந்திரன் நந்தினியைப் பார்க்க.. அவளோ அவரைக் கவனிக்காமல் மகேந்திரனிடம் கதை சொல்லிக்

கொண்டிருந்தாள்...

"காவ்யாவும் நானும் சும்மாதான்.. ஒரு டிரைவிங் போனோம்பா..."

"ஏம்மா.. அதற்கு ஏன் அவ்வளவு தூரம் போகனும்..?"

"அங்கேதான் குதிரைச் சவாரி செய்ய முடியும்..."

"ஏன்.. லேக்கைச் சுற்றிக் குதிரைச் சவாரி செய்தால் ஆகாதா...?"

"போங்கப்பா.. வரவரக் கொடைக்கானலில் டிராபிக் ஜாம் அதிகமாகி விட்டது.. லேக்கைச் சுற்றி காரும்... வேனும்.. பறந்துக்கிட்டே இருக்குது.. இதில் குதிரை மிரண்டு நடுரோட்டில் பாய்ந்து விட்டால்.. என் கதி என்ன ஆவது..? அதுதான்.. காரும் வேனும்

மாதிரி நாலு சக்கரங்கள் வராத இடத்தில் குதிரைச் சவாரி செய்யலாமின்னு... ஊசி மரக் காட்டிற்குள் போனோம்..."

"போனவள் குதிரைச் சவாரி செய்து விட்டுப் பேசாமல் வருவதற்கு என்ன..? ரவுடிகளிடம் ஏன் வம்பிற்குப் போனாய்..?"

மகேந்திரன் கேட்ட கேள்வியில் ஆதித்யனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.. அவனை முறைத்தவாறு..

"அப்பா..." என்று அழ மாட்டாத குறையாய்த் தந்தையை அடக்கினாள் நந்தினி..

"ஏன்ப்பா.. நான் என்ன வேண்டுமென்றா அவர்களிடம் வம்புக்குப் போனேன்..? அவனுகளே பொறுக்கிகள்.. அவனுகதான் என்னிடம் வம்புக்கு வந்தார்கள் அப்பா..."

"தனியா இருக்கும் பெண்ணிடம் பொறுக்கிகள் வம்புக்கு வராமல் என்ன செய்வார்கள்..?"

"நல்லா இருக்குப்பா உங்க நியாயம்..? முதலில் ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள்.. நான் தனியாக இல்லை.. என்னைச் சுற்றி நிறைய ஜனநடமாட்டம் இருந்தது.. இரண்டாவதாக.. அவன்கள்.. ஜனக்கூட்டத்தின் மத்தியிலேயே என்னிடம் வம்பு வளர்த்தார்கள்..."

"உன் பிரண்ட் என்ன பண்ணினாள்..."

"அவள்தான் வீட்டுக்கு வந்து விட்டாளே..."

"நீயும் வீட்டுக்கு வர வேண்டியதுதானே.."

"அதற்குள்.. குதிரைச் சவாரி பண்ணி விடலாம்ன்னு ஆசைப்பட்டேன்..."

"ஓகே.. குதிரைச் சவாரி பண்ணிவிட்டு வந்திருக்கலாமே.."

"அவனுகதான் குதிரையிலிருந்து என்னை இறங்க விடவில்லையே..."

"என்ன செய்தார்கள்...?"

"குதிரையை மிரள வைத்து ஓட வைத்து விட்டார்கள்.."

"ஓ... காட்..."

"நானும் கடவுளைத்தான் கூப்பிட்டேன்.. உடனே குதிரை நின்று விட்டது.. நானும் தரையில் இறங்கி விட்டேன்.."

"அப்பாடி..."

"நிம்மதியாய் இருக்க முடியாமல்.. அந்த ரௌடிகள் என்னைத் துரத்திக் கொண்டு வந்து விட்டான்கள் அப்பா.. நான் வேறு ஜனக்கூட்டத்திலிருந்து விலகி வந்து விட்டேன்.."

"அப்புறம்..."

"அங்கே மனிதர் யாரும் இல்லையேன்னு பயந்து போனபோது.. இவர் தலை தெரிந்தது.. ஓடிப்போய் இவர் கையைப் பிடித்துக் கொண்டேன்..."

'கையைப் பிடித்தாயா..? கையைப் பிடித்து இழுத்தாய்..' என்று ஆதித்யனின் விழிகள் கூறுவதைக் கவனிக்காமல் தொடர்ந்தாள் நந்தினி..

"இவரைப் பார்த்தவுடன் அந்த ரௌடிகள் பின் வாங்கிட்டானுக.. இவர் தான் என்னை ரவுடிகளிடமிருந்து காப்பாற்றினார் அப்பா.. இவர் மட்டும் இல்லைன்னா.. என்னை நீங்கள் உயிரோடு பார்த்திருக்கவே முடியாது.."

அவள் மட்டும் கையைப் பிடித்து இழுக்காம லிருந்தால் அவனை இவர்கள் உயிரோடு பார்த்திருக்க முடியாது என்று ஆதித்யன் அப்போது நினைத்துக் கொண்டிருந்தான்...

"இவர் என்னைக் காப்பாற்றியவர் அப்பா.. என்னைப் பத்திரமாய் வீட்டில் விட வந்தார்.. நான்தான் நம் வீட்டில் அவர் ஒரு வாரம் தங்கியிருக்க வேண்டும்னு கேட்டுக்கிட்டு அவரை வீட்டிற்குள் அழைத்து வந்தேன்.. நான் செய்தது சரிதானே அப்பா.."

ஆதித்யனின் முன் அப்படிக் கேட்பவளிடம் எப்படித் 'தவறு' என்று சொல்வார் மகேந்திரன்.. வேறுவழியின்றி..

"நல்ல காரியம் செய்தாய் நந்தினி." என்று பாராட்டினார்.

குடும்பத் தலைவர் அப்படிக் கூறிய பின் யாரும் அங்கே மறுபேச்சுப் பேசவில்லை.. ஆதித்யனுக்கு ஏனோ.. அந்த வீட்டில் தங்கியிருக்க வேண்டும் போல் தோன்றியது..

இன்றைக்கு இந்த உலகை விட்டுப் போவதை.. கொஞ்சம் தள்ளி வைத்து.. ஒரு வாரம் கழித்துப் போனால் என்ன என்று அவன் நினைத்தான்..

அவனது சிறு வயதில் பெற்றோர்களுடன் பாதுகாப்பாக இருந்த காலத்தை நினைவூட்டும்.. வருண்.. தருண்.. சிரிக்கச் சிரிக்கப் பேசிய நந்தினி.. அவனது அன்றையக் குடும்பச் சூழலை நினைவு படுத்தும் ஓர் குடும்பச் சூழல்...

இதில் ஒரு வாரம் பிணைந்தால் என்ன என்று அவனும் மனமார நினைத்தான்..

"பட்... என் லக்கேஜ் ஹோட்டலில் இருக்கிறதே சார்.."

"நோ பிராப்ளம்.. தெய்வா.. சாருடன் போய் ஹோட்டல் ரூமைக் காலிபண்ணி விட்டு.. கூப்பிட்டுக் கொண்டு வந்துவிடு.. மலர்.. இந்த ஒரு வாரமும் சமையல் அமர்க்களமாக இருக்கணும்.. சார்.. நீ நினைப்பதை விடவும் பெரிய ஆள்..."

மகேந்திரன் சொல்படி... ஆதித்யனுடன் போய்.. அவனது பெட்டிகளுடன் திரும்பி வந்தார் தெய்வேந்திரன்..

"இன்னும் கொஞ்சம் புலாவ் போட்டுக்கங்க தம்பி.."

"போதும் ஆன்ட்டீ... இப்பவே வயிறு புல்லாகிடுச்சு.."

"அங்கிள்.. என்னோடு கேரம் விளையாட வர்றீங்களா.."

"ஓ... எஸ்..."

"அங்கிள்..! உங்களுக்கு டென்னிஸ் விளையாடத் தெரியுமா...?"

"தெரியுமே.. உங்கள் வீட்டில் டென்னிஸ் கோர்ட் இருக்கிறதே, யார் விளையாடுவாங்க.."

"ம்ம்.. நாங்க எல்லோருமே விளையாடுவோம்..."

"நாங்களில் உங்க நந்தினி அக்காவும் சேர்த்திதானே."

"ஆமாம்..."

"என்னோடு மோத அவள் தயாரா...?"

ஆதித்யன்.. இதமான மாலைப் பொழுதில் நந்தினியை வம்புக்கு இழுத்தான்.. அவள் சிலிர்த்துக் கொண்டு எழுந்தாள்..

"வருண்.. என்னையொன்னும் ஈஸியாக நினைக்க வேண்டாமின்னு சொல்லு..."

"உங்க அக்காவை ஈஸியாக நினைக்க முடியுமா..? யார் அவள்...?"

"அதைத்தான் இன்னும் எங்கள் யாராலும் கன்ஸிடர் பண்ணவே முடியவில்லை அங்கிள்..."

"ஹா... ஹா..."

"உன்னை.. மட்டையிலேயே.. மண்டையில் ஒரு போடு போட்டு விடுவேன்டா.. ஓடிப் போய்விடு.."

"நான் சின்னப்பையன் அக்கா... ஓடிப் போகும் வயது எனக்கு இன்னும் வரவில்லை.."

நந்தினி செய்வதறியாவது தருணை முறைத்துக் கொண்டு நிற்க, ஆதித்யன்..

"ஹா.. ஹா.. என்று நகைத்தான்.."

"நந்தினி.. உன் தம்பிகள் எப்படி அப்படியே உன்னைப் போலவே இருக்கிறார்கள்..?"

"என் நிலைமையைப் பார்த்தால் உங்களுக்குச் சிரிப்பு வருகிறதா...?"

அவள் கோபத்துடன் பந்தை அடித்தாள்.. ஆதித்யன் தாவி அந்தப் பந்தை எதிர் கொண்டாள்.. வருணும்.. தருணும்..

ஆளுக்கொரு பக்கம் கட்சி பிரிந்து கொண்டு.. அவரவர் தரப்பைக் கத்தி உற்சாகப்படுத்தினார்கள்..

"அக்கா.. விடாதே... அடி.. அப்படித்தான்..."

"அங்கிள்.. செம ஷாட்.. விட்டுக் கொடுத்துடாதீங்க."

போகப் போக அந்த விளையாட்டில் தீவிரமாய் ஆழ்ந்து விட்ட ஆதித்யன் ஒன்றைப் புரிந்து கொண்டான்..

நந்தினி.. டென்னிஸ் விளையாடுவதில் மிகவும் திறமைசாலியாய் இருந்தாள்..

'இந்தச் சுட்டிப் பெண்ணுக்குள் இவ்வளவு திறமையா..!'

இறுதியில் வெற்றி தோல்வியின்றி அன்றைய விளையாட்டு முடிந்து விட்டது..

"என்ன அங்கிள்.. இப்படி டிராவில் முடித்து விட்டீங்க.. நீங்களாவது இவளை ஜெயிப்பீங்கன்னு பார்த்தால்.. இப்படி ஏமாத்திட்டீங்களே..."

"ஏன்.. நீங்கள் யாருமே இவளை ஜெயித்ததில்லையா.."

"எங்கே அங்கிள்.. அந்த மட்டில் ஒரு சந்தோசம்.. நீங்கள் இவளை ஜெயிக்கவிடவில்லை.. நாங்க எல்லோரும் தோத்துத்தான் போவோம்.. பெரியப்பா ஒரு தரம் வெறும் ஜீரோ ஸ்கோர்தான் வாங்கினார்..."

"அடேங்கப்பா.. உன் அக்கா பெரிய விளையாட்டு வீராங்கனைதான்.."

ஆதித்யன் பிரியமுடன் நந்தினியைப் பார்த்தான்.. அவள் தோளைக் குலுக்கியவாறு வீட்டுக்குள் போய் விட்டாள்.

அன்று இரவு.. அந்த வீட்டின் மாடி ஹாலில்.. ஸ்வெட்டருடன் அமர்ந்து.. தனியே ஆதித்யன் யோசித்துக் கொண்டிருந்தான்..

"ஹலோ... சார்..." என்று அவன் முன் விரல் சொடுக்கினாள் நந்தினி..

"ம்ம்.. என்ன..?"

"பால்.. அம்மா கொடுத்து விட்டாங்க.."

"தேங்க்ஸ்..."

"எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்தப் பலத்த யோசனை..."

"ம்ம்.. கோட்டையையெல்லாம் கோட்டை விட்டாச்சு.. விட்டது எதையும் இனிப் பிடிக்க முடியாது நந்தினி.."

விரக்தியுடன் கூறியபடி பாலை அருந்திக் கொண்டிருந்தவனைக் கூர்மையுடன் பார்த்தாள் அவள்..

"உங்களைப் போல கஜினி முகம்மது நினைத்திருந்தால்... அவரால் ஜெயித்திருக்கவே முடியாது சார்..."

"என்ன.. என்ன.. சொல்கிற..?"

"கஜினி முகம்மதுவைப் பற்றிச் சொன்னேன்.. தோல்விகளை வெற்றியாக மாற்றக் கூடிய வித்தை அவருக்குத் தெரிந்திருந்தது... அவர் செய்ததெல்லாம் விடாமல் முயற்சி செய்ததுதான்.."

"நந்தினி.."

"நீங்கள் அப்படி என்ன முயற்சி செய்தீர்கள் சார்.. விளையாட்டில் காட்டும் குணத்தை வாழ்க்கையில் நீங்கள் காட்ட வேண்டாமா..? உங்களிடம் காலையிலேயே நான் என்ன சொன்னேன்.. சறுக்குவது சுலபம்.. ஏறுவதுதான் கஷ்டம்ன்னு சொன்னேனா.. இல்லையா...?"

அவன் எதிரே பேசிக் கொண்டே அமர்ந்தாள்.. விளையாட்டுப் பெண்ணாய்த் தோற்றமளித்தவளின் இன்னொரு முகம் கண்டு அவன் திகைத்துப் போய் அமர்ந்திருந்தான்..

# 5

"ஜெயிப்பதுதான் எல்லோருக்கும் பிடிக்கிறது... நீங்கள் ஏன் வித்தியாசமாய்த் தோல்வியை விரும்பக் கூடாது சார்..? தோல்வியை ஏன் உங்களுக்குப் பிடிக்காமல் போனது..?"

"என்ன சொல்கிற நந்தினி.. தோற்பவனின் இடத்திலிருந்து பார்த்தால் உனக்கு அந்தக் கஷ்டம் புரியும்."

"அதுதான் ஏன்..? தோல்வியை வெற்றியாக மாற்றுவதில் தானே உங்கள் திறமையை நிரூபிக்க முடியும்..!"

அவள் கூறிய இந்தப் புதிய கோணம் அவனுக்குள் சிந்தனையைத் தூண்டியது...

'இப்படிக் கூட இவளுக்குப் பேசத் தெரியுமா..?'

"அந்தச் சிலந்தியைப் பாருங்கள் சார்.. ஒரு கோடாய் நூல் இழுப்பதற்குள்.. ஓராயிரம் முறை விழுந்து எழுந்திருக்கிறது.. நீங்கள் ஓர் முறை விழுந்து எழுந்திருக்க யோசிக்கிறீங்களே..."

"விழுபவனுக்குத் தெரியும் நந்தினி.. அந்த வலியும்.. வேதனையும்..."

"யாருக்குத்தான் அந்த வலியும்.. வேதனையும் இல்லை..? இந்த உலகத்தில் ஜீவித்த அனைத்து ஜீவராசி களுக்கும் ஏதோ ஒரு வகையில் இடைஞ்சல் இருந்து கொண்டுதான் இருக்கிறது..."

"இது கையாலாகாதவர்கள் சொல்லும் வார்த்தை..."

"தோல்வியை வெற்றியாய் மாற்ற முடியாதவன்தான் கையாலாகாதவன்..."

"நீ என்னைச் சொல்வது போல் இருக்கிறது..."

"இல்லை சார்.. நான் பொதுவாய்ச் சொன்னேன்.. காலுக்குச் செருப்பில்லை என்று கவலைப்படுவதை விட.. நமக்கு நடப்பதற்கு ஆரோக்கியமான கால்கள் இருக்கிறதேன்னு சந்தோசப்படலாமே சார்..."

"கெட்டிக்காரத்தனமாய்ப் பேசுகிறாய்.. பிரச்சனையின் வெளியே இருந்து பேசுவதற்கு... வாய் என்ன.. வலிக்கவா போகிறது.."

"பிரச்சனைக்கு உள்ளே இருந்து.. எதுவும் செய்யாமல் ஏன் இருக்கிறீங்கன்னுதான் நான் கேட்கிறேன்.. தப்பித்து ஓடுவது சரியான தீர்ப்பில்லை சார்... நின்று பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டும்.. அதுதான் பிரச்சனைகளைத் தீர்க்கும்..."

"ச்சு.. உனக்குத் தெரியாது நந்தினி.. நான் ஓய்ந்து போய் நிற்கிறேன்.. சொல்லி அழக்கூட எனக்கென்று யாரும் இல்லை.. என்னைப்போல் யாருக்கும் இவ்வளவு துன்பங்கள் தொடர்ந்து வந்திருக்காது.."

"ம்ம்.. நீங்கள் கண்ணதாசன் பாடல்களைக் கேட்பீர்கள்தானே சார்..."

"ம்ம்ம்..."

"இந்தப் பாட்டைக் கேட்டிருக்கிறீங்களா...?"

"எந்தப் பாட்டு...?"

"மயக்கமா... கலக்கமா...?
மனதிலே குழப்பமா...?
வாழ்க்கையில் நடுக்கமா...?"

நந்தினி மெல்லிய குரலில் பாட... ஆதித்யனுக்கு 'ஆமாம்' என்று கூவ வேண்டும் போல் இருந்தது...

"வாழ்க்கையென்றால் ஆயிரம் இருக்கும்...
வாசல்தோறும்.. வேதனை இருக்கும்...
வந்த துன்பம் எதுவென்றாலும்...
வாடி நின்றால் ஓடுவதில்லை...
உனக்கும் கீழே.. உள்ளவர் கோடி..
நினைத்துப் பார்த்து... நிம்மதி நாடு...."

அந்தக் குளிர் நிறைந்த இரவில் மெல்லிய நீலக்கலரில் நைட்டி அணிந்து அவள் பாடியதைக் கேட்கும்போது ஆதித்யனுக்கு ஏதோ ஒரு வகையான ஆன்மிகப் பலம் கிடைப்பது போல இருந்தது...

"குட் நைட் சார்..."

அன்று இரவு ஆதித்யன் அயர்ந்து தூங்கினான்.. இந்த மாதிரி அவன் தூங்கி வெகுநாட்களாகி இருந்தன.. காலையில் காபியோடு வந்த நந்தினி.. அவன் தூங்குவதைப் பார்த்து விட்டுக் காபியோடு திரும்பிப் போய்விட்டாள்...

"என்னடி நந்து.. அந்தப் பையனுக்குக் காபி கொடுக்கவில்லையா...?"

"ஏன்ம்மா.. இத்தாம் பெரிய அப்பாவே.. அவருக்கு எழுந்து நின்று சல்யூட் வைக்கிறார்.. நீங்க என்னடா வென்றால் அவரை ஸ்கூல் பையன் போல.. பேசுகிறீங்களே."

"போடி வாயாடி.. உனக்கு வாய் பேசுவதென்றால் அல்வா சாப்பிடுவது போல... போய் இந்தக் காபியைச் சித்தப்பாவிற்குக் குடு.."

"அவருக்கு வேறு காபி போடுங்கம்மா..."

"ஏன்டி.."

"எனக்குத் திரும்பவும் ஒரு கப் குடிக்க வேண்டும் போல இருக்கு..."

நந்தினி காபியை ரசித்துக் குடிக்க ஆரம்பித்து விட்டாள்.. சற்று நேரம் கழித்துத் திரும்பவும் காபியோடு ஆதித்யாவைத் தேடிப் போனாள்.. அவன் எழுந்து அமர்ந்திருந்தான்...

"காபி..."

"தேங்க்ஸ் நந்தினி.. தேங்க்ஸ் காபிக்கு மட்டுமில்லை.."

"வேறு எதற்கு...?"

"நேற்று நீ பேசிய பேச்சிற்கு..."

நந்தினி பதில் சொல்லாமல் புன்னகைத்தாள்.. அன்று தான் பூத்த புது மலர்போலப் பொலிவுடன் இருந்தவளைப் பார்த்தபடி காபியை மெல்லப் பருகினான் ஆதித்யன்...

"உன்னை விளையாட்டுப் பெண்ணுன்னு நினைத்தேன்.."

"அது நிஜம்தானே..."

"என்னடா இது... அதிசயமாய் இருக்கு..."

"ஏன்.. என்ன அதிசயத்தைக் கண்டு விட்டீங்க.."

"இதை நீயும் ஒப்புக் கொள்கிறாயே..."

"நீங்கள் உண்மையைத்தானே சொல்கிறீங்க சார்.. நான் டென்னிஸ் விளையாடும்.. விளையாட்டுப் பெண்தானே.."

"ஓ.. அதுதானே பார்த்தேன்.. நீ அப்படி வருகிறாயா..?"

ஆதித்யன் சிரித்துக் கொண்டே குளிக்கப் போனான்.. சாப்பிட்டு முடித்தவுடன் தருணுடன் கேரம் விளையாடிக் கொண்டிருந்தவனிடம் வந்தாள் நந்தினி...

"சார்.. எனக்கு இந்த வாரம் முழுவதும் லீவ்.."

"அப்படியா...?"

"நேற்றுத்தான் நான் ஊர் சுற்றுவதை அந்த ரவுடிகள் வந்து கெடுத்தார்கள்.."

"எந்த ரௌடிகள்..?"

"அதுதான் சார்.. நேற்று என்னைத் துரத்திக் கொண்டு வந்தார்களே.. நீங்கள் கூட என்னைக் காப்பாற்றினீர்களே.."

"இப்படியே சினிமாக் கதை சொல்லிக் கொண்டிரு.."

"நீங்கள் எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்.. இன்றைக்கு என்னை ஊர் சுற்றிப்பார்க்க அழைத்துக் கொண்டு போக முடியுமா.. முடியாதா...?"

தன்னிடம் சட்டமாகக் கேட்டவளை ஆச்சரியத்துடன் பார்த்தான்.. இவன் யாரென்று தெரியாமல் இருந்த போது அவள் இப்படிப் பேசியதில் அவன் ஆச்சரியப்படவில்லை.. யாரென்று தெரிந்த பின்னாலும் இப்படி அதிகாரமாய் அதட்டியதில் அவன் ஆச்சரியப் பட்டுப் போனான்...

"ஏன் அப்படிப் பார்க்கறீங்க...?"

"ஒன்றுமில்லை.. சும்மாதான் பார்த்தேன்..."

"சும்மா பார்த்தீங்களா.. நான் என்ன.. நீங்கள் சும்மா.. சும்மா பார்க்கிற அளவுக்கு அவ்வளவு அழகாகவா இருக்கிறேன்..?"

ஆதித்யனை மீண்டும் ஆச்சரியம் பற்றிக் கொண்டது.. இந்தக் கேள்வியைக் கேட்டவளின் முகத்தில் நாணச் சிகப்பு இல்லை.. மாறாகக் குறும்பு கூத்தாடியது...

ஆதித்யனின் இதழ்களில் புன்னகை அரும்பியது..

"நான் பல வெளிநாடுகளில் சுற்றியவன்..."

"பாரப்பா.. பெருமையை..."

"ம்ம்ம்.. பெருமை பீற்றிக் கொள்ள உனக்குத்தான் தெரியுமா..? இல்லை.. பெருமை என்பது உனக்கு மட்டும்தான் சொந்தமா..?"

"அடேங்கப்பா.. உரிமைப் போராட்டம் நடத்துகிறீங்களா.. நடத்துங்கள்.. நடத்துங்கள்.. பல வெளிநாடுகளில் சுற்றியதை என்னிடம் ஏன் இப்போது சொல்கிறீங்க..?"

"நான் பார்க்காத அழகியா...?"

"நான் பழகாத அழகியின்னுதானே நீங்கள் சொல்லணும்.."

சொன்னவளின் விழிகளில் மீண்டும் குறும்பு தவழ்ந்தது.. அவன் ரசித்துச் சிரித்தான்..

"ஊஹீம்.. பார்ப்பதுதான்.. இன்னும் எந்த அழகியிடமும் பழகிப் பார்த்ததில்லை.."

"பொய் சொல்லுகிறீங்களே..."

"பொய்யா...?"

"ஆமாம்.. என்னுடன் இப்போது பழகிக் கொண்டுதானே இருக்கறீங்க..."

"நான் அழகியிடம் பழகியதில்லைன்னுதானே சொன்னேன்.."

இப்போது அவன் விழிகளில் குறும்பு உதித்திருந்தது.. அவள் செல்லக் கோபத்துடன் அவனை முறைத்தாள்...

"அப்போ.. நான் அழகில்லையா...?"

"அதை என் வாயால் சொல்லணுமா...?"

"ஸோ.. என்னை.. என் அழகை ரசிப்பதற்காக நீங்கள் பார்க்கவில்லைன்னு சொல்கிறீங்க.."

"புரிந்து கொண்டால் சரி... வா.. போகலாம்..."

"எங்கே...?"

"ஊர் சுற்ற..."

"நான் ஒன்றும் வர மாட்டேன்.. எனக்கு உங்கள் பேச்சு காய்..."

எம்சிஏ படித்துக் கொண்டிருக்கும் பெண்.. முதல் நாளிரவில் அவ்வளவு தீவிரமாய் அவனிடம் வழிகாட்டி போல் வாதாடிய புத்திசாலி.. இப்போது 'காய்' விட்டுக் கோபித்துக் கொள்கிறாள்...

இப்படி ஒவ்வொரு நேரமும்.. ஒவ்வொரு குணாதிசயத்துடன் காட்சி தருபவளை.. ஆச்சரியத்துடன் பார்த்தான் ஆதித்யன்...

"ஓகே... நான் உன் கெஸ்ட்... என்னுடன் போய் நீ டூ விடலாமா.. வா.. பழம் விட்டுக் கொள்ளலாம்..."

"ம்ம்.. ஓகே.. பழம்.. வாங்க, போகலாம்..."

'வெளிநாட்டு கான்ட்ராக்டைக் கைப்பற்றிய போது கூட இப்படி ஒரு சந்தோசம் எனக்குக் கிடைத்தில்லை..' ஆதித்யன் தன் அருகில் அமர்ந்து கொண்டவளின் முகத்தில் இருப்பது குழந்தைத் தனமா.. இல்லை, புத்திசாலித்தனமா.. என்ற யோசனையுடன் அவளையே பார்த்தான்..

"ஏன் சார்.. அடிக்கடி இப்படியே என்னைப் பார்த்தால்.. நான் என்னவென்று எடுத்துக் கொள்வது..? நான் அழகான்னு கேட்டால் இல்லைங்கறீங்க.. பின்.. வேறு எதற்காக என்னை இப்படிப் பார்க்கறீங்க..?"

"ப்ளீஸ்... ப்ளீஸ்.. நந்தினி.. வெறும் பார்வைக்குப் போய் இவ்வளவு கோபமா...?"

"வெறும் பார்வையா..? சரிதான்.. அதில் ஆயிரம் அர்த்தங்கள் உண்டு சார்..."

"அதைப் பற்றிச் சொல்லு முன்னால்.. நீ எங்கே போகணுமின்னு சொல்லு... காரை ஓட்டிக் கொண்டே பேசலாம்..."

"எனக்கு நீங்கள் என்ன டிரைவரா...?"

"ஏன் கேட்க மாட்டாய்..? ஆதித்யா குரூப்பின் எம்.டி.யை உனக்குக் கார் ஓட்ட வைத்து விட்ட சந்தோசமா..?"

"ம்ம்.. நான் ஒன்று சொல்லவா...?"

"சொல்லேன்..."

"நீங்கள் பிறக்கும் போதே ஆதித்யா குரூப் ஆப் கம்பெனியின் எம்.டியாகத்தான் பிறந்தீர்களா...?"

"ம்ம்.. இதை எதற்காகச் சொல்கிற.."

"அது உங்களின் அடையாளம்.. நீங்கள் போராடிப் பெற்ற வெற்றி.. அதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டாமா..?"

ஆதித்யனின் கை கார் சாவியைத் திருகுவதை நிறுத்தியது.. அவன் புருவங்கள் சிந்தனையுடன் உயர்ந்தன..

'யார் இவள்.. வானத்திலிருந்து வந்த யட்சிணியா..? என் நிலையை உணர்ந்தவள் போல் பேசுகிறாளே...'

"என்ன சார்.. திரும்பவும் என்னைப் பார்க்கறீங்க.. காதல்.. கீதல் வந்து விட்டதா...?"

"ஏய்ய்..."

ரசித்துச் சிரித்தான் ஆதித்யன்.. சற்று முன் அவ்வளவு கனமான வார்த்தைகளைப் பேசியவள் இவள்தானா என்பது போல் அவள் விளையாட்டாய்ச் சிரித்துக் கொண்டிருந்தாள்...

# 6

"லேக்குக்குப் போங்க சார்..."

"ம்ம்.. போகலாம்.. அதை ஏன் நோண்டுகிறாய்.. பழைய பாட்டுக்கள்ன்னா உனக்குத்தான் பிடிக்காதே..."

"நீங்கள் என்ன பாட்டுக்களைத் தான் கேட்கறீங்கன்னு நான் தெரிந்து கொள்ள வேண்டாமா...?"

"அதைத் தெரிந்தால் என்ன தெரிந்து விடும்...?"

"உங்கள் மெண்டாலிட்டி தெரிந்து விடும்..."

"என் மெண்டாலிட்டியைத் தெரிந்து உனக்கு ஆகப்போவதென்ன...?"

"எத்தனையோ ஆகலாம்..."

"உதாரணத்திற்கு ஒன்று சொல்லேன்..."

"உங்களை சைட் அடிக்க எனக்கு ஆசை வரலாம்.."

"ஹா.. ஹா..."

ஆதித்யன் அவளைப் பார்த்துச் சிரித்தான்.. இப்படி ஒரு பெண் பேசினால்.. அவளை உற்றுப் பார்க்கத்தான் தோன்றும்.. மனம் விட்டுச் சிரிக்கத் தோன்றாது.. அப்படியொரு உணர்வைத் தருகின்ற அந்தப் பெண்.. அவனுக்கு எல்லா வகையிலும் ஆச்சர்யகரமாய்த் தோன்றினாள்..

"ஏன்.. அதைக் கேட்டுத்தான்.. என்னை சைட் அடிக்க நீ முடிவு பண்ண வேண்டுமா...?"

"பின் வேறு எதைவைத்து அப்படியொரு டேஞ்சரான முடிவை எடுக்க முடியும்...?"

"டேஞ்சர்...? ஹா... ஹா.. நந்தினி.. என் அழகைப் பார்த்துக் கூட உனக்கு சைட் அடிக்க ஆசை வரலாமில்லையா.."

"போங்க சார்.. இல்லாத ஒன்றை.. இருப்பதாக நினைத்துக் கற்பனை பண்ணிக் கொண்டிருப்பதே உங்களுக்கு வேலையாகப் போய்விட்டது..."

அவள் சிரிக்காமல் சொன்னாள்.. அவன் பாதையோரமாக காரை நிறுத்திவிட்டு.. விழுந்து... விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்...

"ஹய்யோ.. இப்படிப் பேச எப்படி உன்னால் மட்டும் முடிகின்றது நந்தினி.. ஐ லைக் யு வெரிமச்..."

"அப்படியா..."

அவன் என்னமோ சாதாரணமாக ஐஸ்கிரீம் சாப்பிடப் பிடித்திருக்கிறது என்று சொல்வதைப் போல அவள் சாதாரணமான முக பாவனையுடன் ஒரு சிடியை எடுத்துப் போட்டு விட்டாள்...

"ஓராயிரம் பார்வையிலே...

உன் பார்வையை நானறிவேன்...

உன் காலடி ஓசையிலே...

நம் காதலை நானறிவேன்..."

பாடலைக் கேட்டதும் நந்தினி ஆதித்யனைக் 'கேட்டாயா..?' என்பது போல பார்த்தாள்.. அவன் 'என்ன' வென்று புருவம் உயர்த்தினான்...

"பார்வையைப் பற்றிக் கேட்டீங்களே.. இப்போது புரிகிறதா..." அவள் பாடலை ஓட விட்டு.. வேறு ஒரு பாடலை ஒலிக்க விட்டாள்...

"உன் பார்வையில்.... ஓராயிரம்..

கவிதை நான்.. எழுதுவேன்..

காற்றில் தானே..."

"இது எப்படியிருக்கு சார்...."

"இப்படியெல்லாம் கூட நீ ஆராய்ச்சி பண்ணுவாயா..?"

"இதுக்கே இப்படிச் சொன்னால் எப்படி.. கொஞ்சம் இந்தப் பாட்டையும் கேளுங்க..."

நந்தினி வேறு பாடலை மாற்றினாள்..

"பார்த்த ஞாபகம் இல்லையோ...
பருவ நாடகம் தொல்லையோ...
வாழ்ந்த காலங்கள் கொஞ்சமோ...
மறந்ததே என் நெஞ்சமோ..."

"பென்டாஸ்டிக் சார்..."

"இது எனக்கு ரொம்பவும் பிடிக்கும்..."

"பிடித்து என்ன பிரயோஜனம்..? வெறும் பார்வை தானேன்னு ஒரு வார்த்தை கேட்டுட்டிங்களே சார்..."

"ச்சோ.. ச்சோ.. அதற்கு இவ்வளவு வருத்தப் படுகிறாயா..? இந்தா கர்ச்சீப்..."

"வேண்டாம்... நான் அடுத்தவரின் கர்ச்சீப்பை யூஸ் பண்ணுவதில்லை.. நோ தேங்க்ஸ்..."

"ஹா... ஹா..."

ஏரிக்கரையில் கார் நின்றது.. அவர்கள் இறங்கி... போட்டிங் போக உள்ளே நுழைந்தார்கள்.. காலை நேரத்திலேயே கூட்டம் அதிகமாக இருந்தது.. ஒருவழி யாய்த் துடுப்புப் படகில் ஏறிக் கொண்டார்கள்.. ஆதித்யன் துடுப்புப் போட்டுக் கொண்டிருக்க.. நந்தினி அவனுக்கு எதிரே அமர்ந்து ஜாலியாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள்..

"கெட்டிக்காரி நீ..."

"அதுதான் இந்த ஊருக்கே தெரிந்த விசயமாச்சே.."

"வீட்டிலிருந்து உனக்கு என்னைக் காரோட்ட வைத்தாய்.. இங்கே படகுக்குத் துடுப்பு போட வைக்கிறாய்.."

"இதிலிருந்து என்ன தெரிகிறது...?"

"நீ சத்தமில்லாமல் என் தோளில் சவாரி செய்கிறாய்ன்னு தெரிகிறது.."

"ஊஹீம்... எதையும் செலுத்தும் திறமை உங்களிடம் மட்டும்தான் இருக்கிறது என்பது தெரிகிறது.. அது காராக இருந்தாலும் சரி.. படகாக இருந்தாலும் சரி.. இல்லை.. உங்களால் உருவாக்கப்பட்ட உங்களின் தொழில் சாம்ராஜ்யமாக இருந்தாலும் சரி.."

ஆதித்யன் துடுப்புப் போடுவதை நிறுத்தினான்.. படகு நீரில் நிதானமாய் மிதக்க ஆரம்பித்தது...

"இதை ஏன்.. என்னிடம் சொல்கிறாய்...?"

"சும்ம்ம்... மா..."

அவள் கண் சிமிட்டிச் சிரித்தாள்.. அவன் குழப்பத்துடன் படகைச் செலுத்த ஆரம்பித்தான்.. அவர்கள் கரைக்குத் திரும்பினார்கள்.. இரண்டு இளைஞர்கள்..

"நந்தினி...!" என்று அழைத்தபடி எதிரே வந்தார்கள்..

"ஹாய் ஜார்ஜ்.. ஹாய் பவன்..." என்ற நந்தினி..

"இவங்க என் கிளாஸ் மேட்ஸ்..." என்று ஆதித்யனிடம் அறிமுகப்படுத்தினாள்..

அவர்களில் 'பவன்' என்று அழைக்கப்பட்டவன் நந்தினியை முறைத்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்..

"சார் யாருன்னு எங்களுக்கு அறிமுகப்படுத்த வில்லையே.." என்று விரைப்பாகக் கேட்க வேறு செய்தான்..

"சார்தான் ஆதித்யன்.. ஆதித்யா குரூப் ஆப் கம்பெனிஸ்ன்னு கேள்விப்பட்டிருக்கிறாயா.. நீயெங்கே அதையெல்லாம் கேள்விப்பட்டிருக்கப் போகிறாய்.. அதை யெல்லாம் பெரிய பிஸினெஸ் மேன்கள் தான் கேள்விப் பட்டிருப்பார்கள்.. அந்தக் கம்பெனிகளின் எம்டி சார் தான்.."

பவன் பல்லைக் கடித்தபடி நந்தினியை உறுத்துப் பார்த்தான்.. நந்தினியின் முகத்தில் அலட்சியம் வந்திருந்தது..

"சார் உனக்கு ரிலேடிவ்வோ..."

"அப்படிக் கூட வைத்துக் கொள்ளலாம்.. இப்போதைக்கு சார் எங்கள் வீட்டில் கெஸ்டாக ஒரு வாரம் தங்கியிருப்பார்.."

அந்தப் பவனின் கண்களில் வெளிப்படையாகப் பொறாமை தெரிந்தது.. அவன் ஆதித்யனைப் பார்த்த பார்வையில் ஆத்திரம் தெரிந்தது.. கோபத்துடன் அருகிலிருந்த ஜார்ஜிடம் ஏதோ முணுமுணுத்தான்...

"நீ வெளியே வரவே மாட்டாயே நந்தினி.. இன்றைக்கு சார் கூட வந்திருக்கிறாயே..." என்று ஜார்ஜ் கேட்டான்..

பவன் சொல்லி அவன் கேட்கிறான் என்பது வெளிப் படையாகத் தெரிந்தது..

"ம்ம்.. எங்கள் வீட்டிற்கு வந்திருக்கும் கெஸ்டிற்கு ஊரைச் சுற்றிக் காட்டுகிறேன் ஜார்ஜ்.." நந்தினி பவனைப் பார்ப்பதைக் கவனமாகத் தவிர்த்தபடி ஜார்ஜிற்குப் பதில் சொன்னாள்..

ஜார்ஜ் பவனை ரகசியமாய்க் கடிந்து கொள்வது நந்தினி.. ஆதித்யன் இருவருக்குமே புரிந்தது.. அவர்கள் இருவரும் போய் விட்டார்கள்.. ஆதித்யன் காரைக் கிளம்பினான்..

"என்ன சார்.. பேசாமல் வருகிறீங்க.."

"அந்தப் பவனை பார்த்தால் வெறும் கிளாஸ் மேட் போல் எனக்குத் தெரியவில்லை.."

"எப்படித் தெரியும்...? அவன்தான் ரோட்டோர ரோமியோ போல் என்னை சைட் அடித்துக் கொண்டிருக்கிறானே..."

"உன்னை சைட் அடித்தால்.. அவன் ரோட்டோர ரோமியோவாகத்தான் இருக்க வேண்டுமா..? ஹா.. ஹா.."

"இதில் சிரிப்பதற்கு என்ன சார் இருக்கிறது..."

"அவனுக்கு உன்னைப் பிடித்திருக்கிறது..."

"அதற்காக.. என்னைக் கட்டுப்படுத்த நினைப்பதா..?"

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்...?"

"நான் அவனைத் தவிர வேறு யாரிடம் பேசினாலும்.. அவர்களுடன் சண்டைக்குப் போவான்..."

"உன்னை விட்டு விடுவானா..? பரவாயில்லையே.."

"என்னிடம் பேசினால் தெரியும்..."

"அதுதானே பார்த்தேன்..."

"அதனால் என்னிடம் ஏதும் வைத்துக் கொள்ள மாட்டான்.."

"பாவம்.. உன்னிடம் தெரியாத்தனமாய்ப் பேசும் அப்பாவிகள்தான் மாட்டுவார்கள் போல்..."

"கிண்டலா...?"

"சேச்சே.. ஹா.. ஹா..."

"ம்ம்.. உங்களைப் பிறகு கவனித்துக் கொள்கிறேன்."

"ஏன் நந்தினி.. அந்த ஜார்ஜ் உன்னிடம் பேசுவதை மட்டும் எப்படி அவன் பொறுத்துக் கொண்டான்..?"

"அது ஒரு கதை சார்..."

"ரவுடிகள் கதை போலவா...?"

"இது வேறு மாதிரியான கதை..."

"கதை சொல்லி ஆகி விட்டாய்.. சொல்லு.. சொல்லு.."

"ஒரு நாள் பவனின் முன்னால் ஜார்ஜின் கையில் ராக்கி கட்டி விட்டேன்.."

"அதனால் அவனை உன் சகோதரன் கணக்கில் வைத்துப் பேசாமல் விட்டு விட்டானா.. ஹா.. ஹா..."

"வேறு என்ன சார் செய்வது...? இவன் என்னடா வென்றால் என்னிடம் பேசுபவர்களையெல்லாம் போட்டு நொறுக்குகிறான்.. இந்த ஜார்ஜ் நன்றாகப் படிப்பான்.. எக்ஸாம் சமயத்தில் அவனிடம்தான் நான் சந்தேகம் கேட்பேன்.."

"எக்ஸாம் ஹாலுக்கு வெளியிலேயா.. இல்லை உள்ளேயா..?"

"இரண்டு இடத்திலும்தான்..."

"நீ பயங்கரமான விவரம்.. பிழைத்துக் கொள்வாய்.."

"இதை நீங்கள் தெரிந்து கொள்ள இரண்டு நாள்கள் ஆகியிருக்கின்றன.. ம்ஹீம்.. இதில் நீங்கள் பெரிய படா பிக் மேன்.. இன்டஸ்ட்ரியலிஸ்ட்ன்னு பெருமை வேறு பேசிக்கிறாங்க.."

"நான் பேசிக் கொள்வதில்லை..."

"அதை ஏன் செய்வதில்லை...?"

"என்ன சொல்கிறாய்.. என்னைப் பெருமை பேசிக் கொள்ளச் சொல்கிறாயா..?"

"பெருமை பேசலாம்.. தப்பில்லை..."

"எப்படிப் பெருமை பேசச் சொல்கிறாய்..?"

"ம்ம்.. நான் நல்லவன்.. வல்லவன்.. எந்தப் பிரச்சனை வந்தாலும் எதிர்த்து நின்று ஜெயிப்பவன்.. கோழை போல் ஓடி ஒளிந்து கொள்ளாதவன்.. இப்படித்தான்.."

அவள் இயல்பாகக் கூறுவதுபோல் கூறினாள்.. ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த ஆதித்யனின் விரல்கள் நடுங்கின..

இவள் சொல்வதுபோல்.. அவன் தைரியமானவனா..? பிரச்சனைகள் வந்தால் நேருக்கு நேர் நின்று அதைச் சந்திக்கத் தயங்காதவனா..? இல்லையே.. அவன் மனம் மறுகியது..

"என்ன சார் பதிலைக் காணோம்..."

"என்ன பதிலைச் சொல்ல...?"

"உங்களைப் பார்த்தால் வில்பவர் நிறைந்த தில் மேன் போல் தோன்றுகிறது.. உடனே பதில் கொடுக்க வேண்டாமா...?"

"நந்தினி.."

"போங்க சார்.. நீங்கள் என்னை ஏமாற்றி விட்டிங்க.."

"உன்னை ஏமாற்றி விட்டேனா..?"

"பின்னே இல்லையா.. எல்லாத்துக்கும் பதில் சொன்னவர்.. இதற்கு எபெக்டிவாய்ப் பதில் சொல்வீங்கன்னு நினைத்தால்.. சொதப்பிட்டிங்களே.."

நந்தினி கோபமாய்க் கூறுவது போல் கூறினாள்..

# 7

சூடான கணப்பு எரிந்து கொண்டிருந்தது.. அதன் அருகில் டேபிளைச் சுற்றி நான்கு நாற்காலிகள் போட்டு கேரம்

விளையாடிக் கொண்டிருந்தார்கள்..

"ஏன் நந்தினி.. உன் வீடு கொஞ்சம் அந்தக் காலத்து டைப்பாகத் தோன்றுகிறதே..."

"எதை வைத்து அப்படிச் சொல்கிறீங்க..."

"உயரமான மேற்கூரை.. அதில் தொங்கும் அந்தக் காலத்து லஸ்தர் விளக்கு.. ஹாலின் ஓரமாய்க் கணகண வென்று எரியும் கணப்பு..."

"பரவாயில்லையே.. விட்டால் விடிய விடிய இந்த வீட்டை வர்ணிப்பீங்க போல இருக்கே.. நீங்கள் சொல்வது சரிதான் சார்.. இந்த வீடு கொஞ்சம் அந்தக் காலத்து டைப் வீடு இல்லை.. ரொம்ப.. ரொம்ப அந்தக் காலத்து டைப்..."

பழமையைப் பறைசாற்றும் அந்த வீட்டை மீண்டும் ஒரு தரம் சுற்றிப் பார்த்தான் ஆதித்யன்...

"எனக்கு இந்த வீடு ரொம்ப பிடித்திருக்கிறது..."

நந்தினி அவனை விசித்திரமாய் பார்த்தாள்..

"ஏன் அப்படிப் பார்க்கிறாய்...?"

"நிச்சயம் நீங்கள் அழகாய் இருக்கறீங்கன்னு பார்க்கலை.. இப்படி ஒரு புராதன காலத்து வீட்டைப் போய்ப் பிடித்திருக்கிறது என்கிறீங்களே.. உங்களை மியூசியத்தில்தான் கொண்டு போய் நிறுத்த வேண்டும்.."

"உனக்கு இந்த வீட்டின் அருமை தெரியவில்லை.."

"தெரிந்து விட்டாலும்... டேய் வருண்..! கள்ளாட்டம் ஆடாதே..."

"அங்கிள்.. இவளுக்கு இந்த வீடு பிடித்தால் என்ன.. இல்லை.. பிடிக்காவிட்டால் என்ன.."

"ஏன் தருண் அப்படிச் சொல்கிறாய்..?"

"இவளே வேறு வீட்டில் போய் வாழப் போகிறவள்.."

இதைச் சொன்ன தருண் தலையில் ஒரு குட்டு வாங்கினான்..

"பிசாசே.. ஏன்டி என்னைக் குட்டினாய்..?"

"ஏன்டா.. நான் வேறு வீட்டுக்கு வாழப் போனால்.. இந்த வீட்டில் யார் வாழ்வார்களாம்..?"

"என்னையும்.. வருணையும் கல்யாணம் பண்ணிக் கொண்டு இந்த வீட்டுக்கு வரும் எங்கள் பெண்டாட்டிகள் வாழ்வார்கள்..."

"என்னடா சொன்னாய்.. முளைத்து மூன்று இலை விடவில்லை.. இந்த விடாசு பேசும் பேச்சைப் பார்த்தீங்களா சார்.."

"ஹா... ஹா..."

"அக்கா.. நீ தப்பாகச் சொல்கிறாய்..?"

"ஏன்டா... அவனுக்கு நீ வக்காலத்தா..? இரண்டு பேரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தானேடா.."

"சும்மாயிருக்கா.. யார் பேசினாலும் பேசுவதைக் கேட்கத்தானே முடியும்.. பார்க்க எப்படி முடியும்..?"

"ஹா.. ஹா.. சபாஷ் வருண்.."

ஆதித்யன் அந்த இரண்டு சிறுவர்களையும் அணைத்துக் கொண்டு சிரிக்க.. நந்தினி.. கோபமாய் வேக மூச்சு விட்டாள்.. அப்போது அவர்களைச் சாப்பிடக் கூப்பிட வந்த ஆனந்தி.. நந்தினியின் கோபம் கண்டு விழித்தாள்..

"என்ன நந்து.."

"சித்தி.. இந்தச் சுண்டைக்காய்த் தடியன்கள் என்னை என்ன சொல்கிறாங்கன்னு தெரியுமா..?"

"என்ன சொல்கிறாங்க..?"

"இந்த வீடு இவனுகளுக்குத்தான் சொந்தமாம்.. எனக்குச் சொந்தமில்லையாம்..."

"ஏன்டா.. அக்காவைப் பார்த்து அப்படியா சொன்னீங்க..?"

"இல்லவே இல்லைம்மா.."

"பொய் சொல்கிறான் சித்தி.."

"நிஜம்தான் அம்மா. வேண்டுமானால் வருணைக் கேட்டுப் பாருங்க..."

"நீ சொல்லுடா வருண்.. அக்காவை என்ன சொன்னனீங்க.."

"இந்த வீடு எங்களுக்குச் சொந்தம்ன்னு சொல்லலைம்மா..."

"பின்னே அக்கா ஏன் அப்படிச் சொல்கிறாள்..."

"எங்க பெண்டாட்டிகளுக்குச் சொந்தம்ன்னு சொன்னேன்ம்மா.."

இதைச் சொன்ன தருண் பன்னிரண்டு வயதுச் சிறுவன்.. அவனுக்கு ஆமாம் போட்ட வருண் பத்து வயதுச் சிறுவன்..

மகன்களின் பேச்சைக் கேட்டதும்.. வாய் பொத்தி.. கண் விரித்து.. ரசித்த ஆனந்தி..

"டேய்.. என்ன பேச்சுப் பேசுகிற.. உன்னை.. சாப்பிட ஓடுடா.. அப்பாவும்.. பெரியப்பாவும் கூப்பிடறாங்க.."

அவர்கள் இருவரும் ஓடியதும்.. பெருமையுடன் ஆதித்யனைப் பார்த்துச் சிரித்தபடி...

"செம வாலுகள்..." என்றாள்..

"ஸ்மார்ட் பாய்ஸ்..." என்றான் ஆதித்யன்..

அவ்வளவு பெரிய மனிதன்.. தன் மகன்களை 'ஸ்மார்ட்' என்று கூறிவிட்ட சந்தோசத்தில்...

"சாப்பிட வாங்க.. நந்து! சாரைக் கூப்பிட்டுக் கொண்டுவாம்மா..." என்று கூறிவிட்டு ஆனந்தி சென்று விட்டாள்.. அவள் போனதுமே...

"ஏன் சார்... நீங்கள் எனக்கு சப்போர்ட்டா.. இல்லை அந்த வாண்டுகளுக்கு சப்போர்ட்டா.." என்று சண்டைக்கு வந்தாள் நந்தினி..

"அடடா.. நீ என் பிரண்டாச்சே, நந்தினி.."

"அதெல்லாம் சும்மா..."

"இல்லை... நிஜம்மா.."

"பொய்..."

"மெய்..."

"எனக்கு நம்பிக்கையில்லை.. நீங்கள் படே கில்லாடி.."

"உன் வாயால் இதைக் கேட்கும்போது எவ்வளவு சந்தோசமாக இருக்கிறது தெரியுமா..!"

"ம்ம்.. ஸேம்சைட் கோல் போடுகிறீங்களா..?"

"யார் நானா..?"

"நீங்கள்தான்.. வேறு யாராம்..."

"நான் அறியாப் பிள்ளை நந்தினி..."

"எல்லாம் அறிந்த பிள்ளைதான்.."

"ம்ஹீம்.. நான் யார் மனதையும் புண்படுத்தியதில்லை."

"அடேங்கப்பா.. அன்றைக்கு அந்தப் பெண் 'ஹாய்'ன்னு சொன்னப்போ.. என்னவோ.. கல்லையும்.. மண்ணையும் பார்க்கிறது போலப் பார்த்துக்கிட்டுப் போன ஆள் தானே நீங்க.."

"என்னைக்கு..."

"அதுதான்.. அந்த ரவுடிகள் கிட்ட இருந்து என்னை நீங்கள் காப்பாற்றினீங்களே.. அன்றைக்கு.."

நந்தினியின் கண்கள் சிரித்தன.. "ரவுடி" என்று சொல்லும்போதே அவள் முகத்தில் ஏன் இந்த ரகசியப் புன்னகை மலர்கிறது.. என்று நினைத்துக் கொண்டான் ஆதித்யன்..

"ஆரம்பித்து விட்டாயா..? உன் ரவுடி புராணத்தை நீ விடவே மாட்டாயா..?"

"மறக்கக் கூடிய புராணமா சார் அது..."

"அன்றைக்கு மட்டுமில்லை.. என்றைக்குமே நான் பெண்களிடம் நெருங்கிப் பழகியது கிடையாது.."

"அதற்காக.. ஒரு 'ஹாய்' கூடவா சொல்லக் கூடாது..?"

"முன்பின் தெரியாத என்னிடம் ஏன் அந்தப் பெண் 'ஹாய்' சொல்ல வேண்டும்...?"

"இது என்ன சார் வம்பாப் போச்சு.. பார்த்தா பச்சக்குன்னு மனசில் பதியற மாதிரி இப்படி ஒரு ஹேன்ட்சம் ஹீரோவா இருக்கீங்க.. பவன் உங்களைப் பார்த்த பார்வையில் அனல் தகிச்சது.. உங்க உயரமும்.. உங்க மீசையும்.. வாவ்.. பத்தாததுக்கு.. இந்தியாவிற்கே தெரிந்த விஐபி அந்தஸ்து வேற.. உங்களைப் பார்த்தால் எந்தப் பெண்ணும் மயங்க மாட்டாளா...?"

இதைச் சொன்னவள் கண்களில் ஏன் மயக்கமில்லை என்று யோசித்தான் ஆதித்யன்..

இப்படி ஒரு பெண்ணைத் தன் வாழ்நாளில் இதற்கு முன்னாலும் சந்தித்தது இல்லை.. இதற்குப் பின்னாலும் சந்திக்கப் போவது இல்லை என்று அவனுக்குப் அந்த நொடியில் தோன்றியது...

"என்ன சார்.. என்னையே பார்க்கறீங்க.."

"சும்ம்ம்... மா.."

அவன் சொன்னதை அவளுக்கே திருப்பிச் சொல்லி விட்டுக் கண் சிமிட்டிச் சிரித்தான் ஆதித்யன்..

"நந்து..."

சாப்பாட்டு அறையிலிருந்து மகேந்திரனின் குரல் கேட்டது..

"இதோ வந்து விட்டோம்பா.." என்று பதிலுக்குக் குரல் கொடுத்தாள் நந்தினி..

"வாங்க சார்.. சாப்பிடப் போய் விடலாம்..."

"அதை ஏன் இப்படிப் பயந்து கொண்டே சொல்கிற..?"

"இல்லாவிட்டால் அப்பா எழுந்து வந்து விடுவார்.."

"வந்தால் என்ன.."

"உங்களுக்கு ஒன்றுமில்லை.. எனக்குத்தான் எல்லாமும்.."

"ஏன்.. உனக்கு என்ன..?"

"நீங்கள் வேற சார்.. எல்லாத்துக்கும் நேரம் காலம் தெரியாமல் விளக்கம் கேட்பீங்க. அவர் எழுந்து வந்தால் ஒரு மணி நேரம் பெரியவர்களின் வார்த்தையை மதிக்கணுமின்னு அட்வைஸ் பண்ண ஆரம்பித்துவிடுவார்."

"அடப் பாவமே..."

"என்னைத்தானே சார் சொல்கிறீங்க.."

"இல்லை.. உன் அப்பாவை.. சொல்கிறேன்.."

"அப்பாவைப் போய்.. அடப்பாவமே.. அடக்கடவுளே.."

"பின்னே.. நீயே அட்வைஸ் பண்ணுவதில் மன்னி.. உனக்குப் போய் அட்வைஸ் பண்ணுகிறாரே..."

நந்தினி பேச வார்த்தைகளைத் தேடிக் கோவையாய் அவற்றைக் கோர்த்துக் கொண்டிருந்த போது.. ஆதித்யன் அவளை முந்திக் கொண்டு சாப்பாட்டு அறைக்குச் சென்று விட்டான்.

"நந்தினி எங்கே சார்..?"

"வருகிறாள்..."

"நந்தினி...!"

"வந்துட்டேன்ப்பா.."

"ஏம்மா நந்தினி.. உனக்காக இத்தனை பேரைக் காக்க வைக்கலாமா..?" என்று மகேந்திரன் பேச ஆரம்பிக்கவும்.. நந்தினி நடுங்கிப் போனாள்...

"அப்பா.. பசிக்குதுப்பா..."

"பசித்தால் சாப்பிடு.."

"சாப்பிட்டால் 'ஊம்' கொட்ட முடியாதே..."

"நீ எதற்கு 'ஊம்' கொட்ட வேண்டும்..."

"நீங்கள் அட்வைஸ் பண்ணினால் நான் 'ஊம்' கொட்ட வேண்டாமா..?"

ஆதித்யன் மரியாதையின் பொருட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.. மகேந்திரன் மகளை ஒரு பார்வை பார்த்து விட்டு ஆதித்யனிடம் மரியாதையாய் வினவினார்..

"இந்த வீடு உங்களுக்கு வசதியாக இருக்கிறதா..?"

"பிரச்சனையே இல்லையாம்பா.. இந்த வீட்டைப் போய் அவருக்கு ரொம்பப் பிடித்திருக்கிறதாம்..."

மீண்டும்.. மகளை ஓர் பார்வை பார்த்தவர்.. ஆதித்யனிடம் தொடர்ந்து பேசினார்..

"உங்களுக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும்... அதற்கு நடுவில் எங்கள் வீட்டில் ஒரு வாரம் தங்குவதற்கு நீங்கள் ஒப்புக் கொண்டதில் எங்களுக்கெல்லாம் அவ்வளவு சந்தோசம்..."

"அதெல்லாம் அவருக்கு நேரம் இருக்கிறதுப்பா.. விட்டால் ஒரு வாரம் என்ன..? ஒரு வருசம் கூட நம் வீட்டில் தங்குவார்..."

"ஏம்மா.. உனக்குப் பசிக்கிறது என்றாயே.."

"ஆமாம்ப்பா..."

"எனக்கு 'ஊம்' போட்டால் உன்னால் சாப்பிட முடியாது என்றாயே.."

"ஆமாம்ப்பா.."

"இப்போது சாரிடம் நான் பேசினால்.. அவரைப் பேச விடாமல் அவருக்குப் பதில் நீ பேசுகிறாயே.. இப்போது மட்டும் உன்னால் சாப்பிட முடியுமா..?"

"ஹி... ஹி..."

நந்தினி சமாளிப்பாய்ப் புன்னகைத்தபடி ஆதித்யனைப் பார்த்தாள்.. அவன் சிரிப்பை அடக்கப் படாதபாடு பட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.. செய்வதறியாத கோபத்துடன் அவனை முறைத்து விட்டு.. சாப்பாட்டு பிளேட்டில் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

# 8

"சந்தித்த வேளையில்...

சிந்திக்கவே இல்லை...

தந்து விட்டேன் என்னை..."

காரில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.. அதை ரசித்துக் கேட்டபடி நந்தினியை ஓர் பார்வை பார்த்துக் கொண்டே காரை ஓட்டிக் கொண்டிருந்தான் ஆதித்யன்..

"என்ன பார்வை.. உந்தன் பார்வை..."

"அட.. உனக்குப் பாட்டெல்லாம் பாடத் தெரியுமா..?"

"எனக்குத் தெரியாதது எதுவும் இல்லை.. ஆனால், உங்கள் பார்வைக்குத்தான் அர்த்தம் தெரிய மாட்டேன் என்கிறது.."

"தெரிந்துதான் என்ன செய்யப் போகிறாய்..?"

"அதைச் சொல்லுங்கள்.. எல்லாம் தெரிந்தவர்களே.. கைகட்டி காரை ஓட்டிக் கொண்டிருக்கும் போது.. நான் இதைத் தெரிந்து என்ன செய்யப் போகிறேன்...?"

'இவள் அடிக்கடி இப்படி மறைபொருளில் பேசுகிறாள்..'

"என்ன சார் பேச்சைக் காணோம்..."

"நீ பேசும் இடத்தில் வேறொருவரின் பேச்சுக் காணாமல்தானே போகும் நந்தினி.."

"ஜோக்கு...? ம்ம்.. சுத்தமாய்ச் சிரிப்பு வரவில்லை..."

"உனக்குச் சிரிக்கத் தெரியவில்லைன்னு சொல்லு.."

"நிச்சயமாய் சார்.. உங்களை மாதிரி இந்தக் கொடைக் கானல் மலையே கிடுகிடுப்பது போல்.. 'ஹா.. ஹா..' ன்னு சிரிக்க எனக்குத் தெரியாது.."

"ஹா... ஹா..."

"ஆரம்பித்து விட்டீங்களா.. உங்களை நம்பி வந்த அபலைப் பெண் சார் நான்..."

"ஹா.. ஹா.. ஹா..."

"இப்படி நம்பி வந்தவளைச் சிரித்துப் பயமுறுத்துவது நியாயமா சார்.. நீங்களே சொல்லுங்கள்.."

"போதும் நந்தினி.. சும்மா சிரிப்பு மூட்டாதே.. இன்றைக்கு எங்கே ஊர் சுற்றப் போகிறோம்.. சொல்லு.."

"ஊம்.. எங்கே போகலாம்.. பில்லர் ராக்ஸ் போகலாமா..?"

"போகலாம்.."

காரை பார்க் செய்து விட்டு.. பரபரப்பில்லாமல் மெதுவாய் இருவரும் நடந்தார்கள்.. வழியில் விற்றுக் கொண்டிருந்தவைகளை வாங்கி நந்தினி வயிற்றுக்குள் தள்ளிக் கொண்டிருக்க... ஆதித்யன் பணம் கொடுத்துக் கொண்டிருந்தான்..

"எனக்கு ஒரு சந்தேகம் நந்தினி.."

"சொல்லுங்கள்.."

"இங்கே நீ ரசிக்க வந்தாயா.. இல்லை, சாப்பிட வந்தாயா..?"

"இரண்டிற்கும்தான்.. அந்த பிரட் ஆம்லெட்டை வாங்கித் தாங்க.."

"ம்ஹீம்.. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவன் உனக்குத் தின்பதற்கு வாங்கிக் கொடுத்தே

ஓய்ந்து போகப் போகிறான்.."

"அது அவன்பாடு சார்.. உங்களுக்கென்ன கவலை.."

ஆதித்யன் சட்டென்று அவளது முகம் பார்த்தான்.. பளிச் சென்று சோப்பு விளம்பரத்திற்கு வரும் விளம்பர மாடல் பெண் போல இருந்தாள்.. அவனது பார்வைகளுக்குப் பழகி போயிருந்தவள் இயல்பாகச் சிரித்தாள்..

"ம்ம்.. வா.. இப்போதாவது இயற்கையை ரசிக்கலாம்."

"இருங்க சார்.. இன்னும் ஒன்று பாக்கியாயிருக்கு.."

"நீ தின்பதிலேயே குறியாய் இரு..."

"நீங்களும் தின்பதுதானே.. யார் தடுத்தாங்க...?"

"ஏம்மா.. பசிக்க வேண்டாமா..? விருந்தாளியைக் கவனிக்கிறேன்னு சொல்லி.. உன் அம்மாவும்.. சித்தியும் போட்டி போட்டுக் கொண்டு என் தட்டில் அள்ளி வைத்தது ஜீரணமாகவே இன்னும் மூன்று நாள் ஆகும்..."

"என்ன சார் இப்படிச் சொல்கிறீங்க.. இன்றைக்கு மதியம் சிக்கன் பிரியாணியும்.. வறுவலும் ரெடியாகிக்கிட்டு இருக்கிறது.. அதற்காக இப்போதிருந்தே நான் வயிற்றைக் காயப் போட்டுக் கொண்டிருக்கிறேன்..."

"யார்..? நீ..? வயிற்றை வாடப் போட்டுக் கொண்டிருக்கிற.."

"ஆமாம்.." என்றவளின் வாயில் பிரட் ஆம்லெட் அரை பட்டுக் கொண்டிருந்தது..

ஆதித்யன் தலையில் அடித்துக் கொண்டான்..

"தின்று முடித்து விட்டாயா...?"

"ஊம்.. வாங்க போகலாம்..."

"வீட்டிற்குத்தானே..."

"இல்லை.. பில்லர் ராக்ஸைப் பார்க்க.."

"ஏம்மா.. நீ வந்த வேலைதான் முடிந்து விட்டதே..."

"அட நீங்க வேற.. வாங்க சார்.. பக்கத்தில் போய்ப் பார்க்கலாம்..."

அவர்கள் இருவரும்.. தூண் வடிவத்தில் தெரிந்த பாறைக்கு அருகில் போய் நின்று பார்த்தார்கள்.. அங்கிருந்த புல்

திட்டில் அமர்ந்து கொண்டாள் நந்தினி.. ஆதித்யனும் அருகே அமர்ந்தான்..

"இந்தப் பாறையை நான் பிறந்ததில் இருந்து பார்க்கிறேன் சார்.."

"அப்படியா.. இது ஒரு விசயம்ன்னு என்னிடம் சொல்லுகிறாயா..?"

"என் அப்பாவும் அப்படித்தான் பார்க்கிறாராம்..."

"உன் தாத்தாவும்.. தாத்தாவுக்குத் தாத்தாவும் கூடப் பார்த்திருப்பார்கள்.."

"தூண் போல எல்லாத்தையும் தாங்கி நிற்பதால் தான் இதற்குத் தூண்பாறைன்னு பெயர் வந்ததாம்..."

"இந்தக் கதையை எத்தனை முறைதான் கேட்பது..?"

" ஏன் சார்..."

"சொல்லு.."

"உங்களுடைய கம்பெனிகளுக்கும்.. நீங்கள்தானே தூண்...?" ஆதித்யன் பேச்சிழந்தான்.. இவளுடைய கேள்விக் கணை எந்த நேரம்.. எந்த ரூபத்தில் தன்னைத் தாக்கக் கூடும் என்பதை அறிய முடியவில்லையே என்று ஸ்தம்பித்துப் போனான்..

"ஏன் இப்படிக் கேட்கிறாய்..?"

"தோன்றியது, கேட்டேன்..."

"இப்படிப்பட்ட சீரியஸான சிந்தனைகளும் உனக்குத் தோன்றுமா நந்தினி..."

"வீரர்கள் கோழை ஆகும் போது.. விளையாட்டுத் தனமாய் இருப்பவர்கள் சீரியஸாகவும் ஆவார்கள் சார்..."

திரும்பவும் மறை பொருளில் பேசுகிறாள்.. இவள் பேச்சில் ஏதோ உள்ளது.. எல்லாம் அறிந்தவள் போல்.. தெரிந்தவள் போல் பேசுகிறாளே..

"போகலாமா சார்..."

நந்தினி எழுந்து கொண்டாள்.. வீட்டுக்குத் திரும்பிய போது கலகலப்பாகப் பேசிக் கொண்டே வந்தாள்... அன்று இரவு வரை வழக்கம் போல அவனுடன் அரட்டை அடித்தாள்..

தம்பிகளுடன் சண்டை போட்டாள்.. 'குட்நைட்' சொல்லி விட்டுத் தூங்கப் போய் விட்டாள்..

நான்காம் நாள் அவர்கள் போன இடம் பூங்கா.. வண்ண... வண்ண மலர்களுக்கு நடுவில்.. தானும் ஓர் மலர் போல் இருப்பதை உணராமல்.. பேசிச் சிரித்துக் கொண்டே வந்தாள் நந்தினி...

பெண்கள் கூட்டம் ஒன்று ஆதித்யனைப் பார்த்து.. தங்களுக்குள் பேசிக்கொண்டது.. அதைத் திரும்பிப் பார்த்த நந்தினி..

"சார்.. அந்த கேர்ள்ஸ் எல்லாம் உங்களையே சைட் அடிக்கிறாங்க..." என்றாள்..

"உனக்கு வேறு வேலையே இல்லையா...?"

"நிஜம்தான் சார்.. நீங்கள் வேண்டுமானால் திரும்பிப் பாருங்களேன்.."

"அதைத் திரும்பி வேறு பார்க்க வேண்டுமா..?"

"பார்த்தால் குறைந்தா போவீங்க.."

"ஸ்ஸ்.. நந்தினி.. எனக்கு இதில் இன்ட்ரெஸ்ட் இல்லை.."

"என்னை மட்டும்.. சும்மா.. சும்மா பார்க்கறீங்களே.."

சொன்னவளைக் கூர்ந்து பார்த்து விட்டு மலர்ந்து சிரித்தான் ஆதித்யன்..

"பேசாமல் வா நந்தினி.."

"ஊஹூம்.. என்னால் அது முடியாது சார்..."

"எது...?"

"பேசாமல் வருவது.. என்னை உண்ணா விரதம் இருக்கச் சொன்னால் கூட நாள் கணக்கில் இருந்து விடுவேன்.. மௌன விரதம் இருக்கச் சொன்னால்.. ஒரு மணி நேரம் கூட இருக்க மாடேன்.."

"அதுதான் இந்த ஊருக்கே தெரியுமே..."

"முதலில் உங்களுக்கு இது தெரிய வேண்டும் சார்.."

"நான் அனுபவசாலிம்மா.. எனக்கு அது நல்லாத் தெரியும்..."

ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அவர்கள் அமர்ந்தனர்.. நந்தினி லேசாய் ஹம் பண்ணிக் கொண்டிருந்தாள்.. ஆண்டாண்டு காலமாய்ப் பழகியது போல் அவள் காட்டிய நெருக்கமும்.. ரத்த சம்பந்தமுடைய சொந்தக்காரர்கள் போல் அவள் வீட்டினர் அவனிடம் காட்டிய பாசமும்.. அவனது நெஞ்சை நெகிழச் செய்தன..

"நந்தினி..."

"ஏதோ பாடுவது போல் உன் வாய் அசைகிறதே..."

"இந்தக் கிண்டல்தானே வேண்டாம் என்கிறது..."

"ஏன்.. என்னவாச்சு..."

"நான் பாடிக் கொண்டுதான் இருந்தேன்..."

"ஏன் அதை வாயைத் திறந்து பாட மாட்டேன் என்கிற.. நான் ஓடிப்போய் விடுவேன் என்றுதானே..."

"ஆல்ரெடி.. நீங்கள் ஓடித்தானே வந்திருக்கிறீங்க.. இனிமேல் புதிதாகவா ஓடப் போகிறீங்க.."

'சுளீர்...' என்று அவளது வார்த்தைகள் சாட்டையில் அடித்தது போல அவன் மேல் விழுந்தன.. அவன் அதிர்ச்சியுடன் நிமிர்ந்தான்...

"என்ன சொல்கிற...?"

"நீங்கள் சென்னையிலிருந்து கொடைக்கானலுக்கு வந்திருப்பதைத்தான் சொன்னேன்.. ஏன்.. என்ன விசயம்..?"

அவள் மிக இயல்பாக வினவினாள்.. இப்படிக் கேட்பவளிடம் எப்படி விசாரிப்பது...?

"ஒன்றுமில்லை..." என்றான் ஆதித்யன்..

மெதுவான சங்கீதம் ஒலிக்க ஆரம்பித்தது.. பூங்காவின் நடுமையத்திலிருந்து நீரூற்று அழகாய்ப் பாட்டின் இசைக்கேற்ப நடனம் ஆட ஆரம்பித்தது...

"வாவ்..."

"இது உங்களுக்குப் பிடிக்குமா சார்...?"

"யெஸ்... நான் எப்போது வந்தாலும் இதை ரசிக்காமல் இருக்க மாட்டேன்..."

"இப்போது மட்டும்.. இதை ரசிக்க மறந்து ஓடப் பார்த்தீங்களே.." ஆதித்யனின் முகம் சுருங்கியது...

"வாட் டு யூ மீன்..?" என்று இப்போது நேரடியாகவே கேட்டான்..

"இல்லை.. அவசரமாய் ஊருக்குப் போகப் பார்த்தீங்களே.. அதைத்தான் சொன்னேன்..."

'இப்போது இவள் இயல்பாகத்தான் சொல்கிறாள்..' ஆதித்யன் நிம்மதியுடன் நீரூற்றை ரசிக்க ஆரம்பித்தான்.. நந்தினி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.. தற்செயலாய்த் திரும்பிய ஆதித்யன் புருவம் உயர்த்தினான்..

"ஒன்றுமில்லை சார்.. அந்தப் பெண்கள் அப்படி சைட் அடித்தாங்களே.. அப்படி என்ன நீங்க பெரிய ஆணழகனான்னு பார்த்துகிட்டு இருந்தேன்..."

ஆதித்யனின் இதழ்களில் சிரிப்பு உதித்தது...

"எப்படித் தோன்றுகிறது உனக்கு..? நான் தேறுவேனா..?"

"என்னவோ சார்.. எனக்கு ஒன்றும் உங்களை சைட் அடிக்கத் தோன்றவில்லை..."

'ஏன் தோன்றவில்லை..?' என்ற நினைவை நெஞ்சில் புதைத்துக் கொண்டான் ஆதித்யன்..

'அதற்கு இது நேரமல்ல...' ஒரு விரக்திப் பெருமூச்சு அவனது நாசியில் இருந்து வெளியேறியது...

"என்ன சார்.. எனக்கு சைட் அடிக்கத் தோணலைன்னா இப்படி மூட் அவுட் ஆவிங்களா..?"

நந்தினியின் கேள்வியில் தூக்கி வாரிப் போட்டு அவளைப் பார்த்தான் ஆதித்யன்..

இவள் தன் முகத்தை வைத்தே உணர்வுகளை எடை போட்டு விடுகின்றாள் என்று அவனுக்குத் தோன்றியது.. இவளுக்கு முன்னால் யோசிப்பதைக் கூட இவள் கண்டுபிடித்து விடுவாளென்றும் அவனுக்குத் தோன்றியது.

ஐந்தாம் நாள் அவர்கள் ஊர் சுற்றக் கிளம்பிய போது வழக்கம் போல் அவன் எங்கே போக வேண்டுமென்று கேட்டான்..

"இந்தக் கொடைக்கானலின் மிகப் புராதனமான ஒரு இடத்திற்கு உங்களைக் கூப்பிட்டுக் கொண்டு போகப் போகிறேன் சார்..."

"அது எந்த இடம்...?"

"சஸ்பென்ஸ்..."

"இப்படிச் சொன்னால் எப்படிப் போவது...?"

"வழி சொல்லத்தான் நான் இருக்கிறேனே..."

அவள் கிழக்கு.. மேற்கு.. வடக்கு.. தெற்கு.. என்று அனைத்துக் திசைகளிலும் அவனைக் காரோட்ட வைத்து.. ஒரு வழியாய்.. காரை நிறுத்தச் சொன்னாள்...

"இங்கே எங்கே.. அந்தப் புராதனமான இடமிருக்கு..?"

"அதோ அங்கேதான்..."

அவள் கைகாட்டிய திசையில் மலை மேட்டில்.. ஒரு பழமையான கட்டடம் தென்பட்டது.. அவர்கள் மேட்டின் மீது நடந்தார்கள்.. சாலையில் நிறைய கார்களும்... இரு சக்கர வாகனங்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன...

"இது என்ன கட்டடம் நந்தினி...?"

"போய்ப் பார்த்தால்தானே தெரியும்..."

"நிறையக் கூட்டம் இருக்கின்றதே.."

"அது அப்படித்தான்.. கோக்கர்ஸ் வாக்ஸில் கூட்டம் இருக்கிறதோ இல்லையோ.. இங்கே கூட்டம் அதிகமிருக்கும்..."

"ஏன் அப்படி.."

"அது அப்படித்தான்... இங்கே கை மணம் அப்படி எல்லோரையும் இழுக்கிறதாம்..."

"கை மணமா..."

அப்போதுதான் அந்தக் கட்டடத்தின் மேலேயிருந்த பெயர்ப் பலகையைப் படித்தான் ஆதித்யன்..

"'நந்தா உணவகம்'.. ஓ.. இது ஹோட்டலா..?"

"ஆமாம்.. நீங்கள் வேறு என்னன்னு நினைத்தீங்க.."

"நந்தாங்கிற பெயரை எங்கேயோ கேள்விப்பட்டது போல் இருக்கே.. உனக்கு இதைப் பற்றி ஏதாவது தெரியுமா..?"

"தெரியாது..."

அவன் தலை முடியைப் பிய்த்துக் கொள்ளாத குறையாய் யோசிப்பதைக் கண்டு.. அவளுக்குச் சிரிப்பு வந்தது..

"ஹலோ ஆதித்யன் சார்.. வெல்கம் டு அவர் ஹோட்டல்..." ஆர்ப்பாட்டமாய்க் கை விரித்து அவனை வரவேற்றார் மகேந்திரன்.. அவன் நந்தினியைத் திரும்பிப் பார்த்தான்..

"இது உங்க ஹோட்டலா...?"

"ஆமாம்..."

"அதுதான் 'நந்தா உணவகம்'ன்னு பெயர் இருக்கிறதா.."

"புத்திசாலி.. கண்டு பிடித்து விட்டீர்களே.."

"ஏதோ கிண்டலாய்ச் சொல்வது போல இருக்கிறதே.."

"அப்படியெல்லாமில்லைன்னு சொல்ல ஆசைதான்.. ஆனால் பொய் சொல்ல மனம் வரவில்லை..."

"என்ன ஒரு பெருந்தன்மை..."

"இருக்காதா..? இல்லை, இருக்கக் கூடாதா...?"

"இருக்கலாம்.. இருக்கலாம்.. கூடாதுன்னு நான் உன்னிடம் சொல்லி விட்டு.. இந்தக் கொடைக்கானலை விட்டுத் தப்ப முடியுமா...?"

"அது... அந்தப் பயம் நெஞ்சில் இருக்கட்டும்..."

"ம்ஹீம்.. சில சமயம் அச்சு அசல் நீ பூலான் தேவியே தான்.."

"என்ன... என்ன சொன்னீங்க.."

"ஒன்றுமில்லை.. அங்கே உன் அப்பா கூப்பிடுகிறார்ன்னு சொன்னேன்.. வா போகலாம்.." மகேந்திர னுக்கும்.. தெய்வேந்திரனுக்கும் அவ்வளவு சந்தோசம்.. ஆதித்யன் தங்களுடைய ஹோட்டலைப் பார்வையிட வந்ததில் மகிழ்ந்து போயிருந்தனர்...

அவனை அழைத்துக் கொண்டு போய்.. எல்லா இடங்களையும் சுற்றிக் காண்பித்தனர்...

"கட்டடம் அழகாக இருக்கிறது சார்..."

"எங்கள் தாத்தா காலத்துப் பங்களா சார் இது.. பழமை மாறாமல்.. அப்படியே ஹோட்டலாக்கி விட்டோம்.. ஆனால் இதில் நந்தினிக்குத்தான் விருப்பமே இல்லை..."

"ஏனாம்...?"

"அவளுக்கு அல்ட்ரா மாடர்ன் ஸ்டைலில் ஒரு ரெஸ்டாரன்ட் நாங்கள் கட்ட வேண்டுமென்று ஆசை.. ஆனால் எங்களுக்கு இதை இடிக்க மனமில்லை.."

"நீங்கள் செய்தது சரிதான்.."

அவர்கள் காரில் திரும்பும் போது...

"அப்பாவுக்கு சப்போர்ட்டாய்ப் பேசினீங்களே.." என்றாள் நந்தினி..

"என் மனதிற்குப் பட்டதைச் சொன்னேன், நந்தினி.. ஆக்குவது எவ்வளவு கஷ்டம்.. ஒரு நொடியில் அதை இடிப்பதா..?"

நந்தினி பதில் சொல்லாமல் பொருள் பொதிந்த புன்னகையொன்றைப் பூத்தாள்..

"இந்தச் சிரிப்பிற்கு என்ன அர்த்தம்...?"

"சரிதான்.. எது எதற்கு அர்த்தம் கேட்பது என்பதே இல்லையா.. கடைசியில் சிரிப்பதற்குக் கூட அர்ததம் கேட்க ஆரம்பித்து விட்டிங்களே.."

"அடடா.. சும்மா கேட்டேன் நந்தினி.."

"இதுவரை சும்மாதான் என்னைப் பார்ப்பதாகச் சொன்னீங்க.. இப்போது சும்மா கேள்வியும் கேட்க ஆரம்பித்து விட்டிங்களா...?"

"என்னம்மா இது..? யதார்த்தமாய்க் கேட்டதற்குக் கூடச் சண்டைக்கு வருகிற...?"

"யார்.. நான் உங்களுடன் சண்டைக்கு வருகிறேனா..?"

"ஓகே.. விடு.. இனி இப்படிக் கேட்கிறேன்.."

"எப்படி..?"

"உன் புன்னகை என்ன விலை...?"

அவன் மென்குரலில் பாடினான்.. அவள் சிரித்துக் கொண்டே பதிலுக்குப் பாடினாள்..

"என் இதயம் சொன்ன விலை.."

வீடு வந்து விட்டது.. அவர்கள் சிரித்துக் கொண்டே இறங்கி வீட்டிற்குள் சென்றார்கள்.. அன்று இரவு தூங்கும் போது ஆதித்யனின் மனம்.. ததும்பியது..

ஆறாம் நாள் காலையில் அவர்கள் சுற்றுவதற்காகச் சென்று இறங்கிய இடம்.. கோக்கர்ஸ் வாக்.. வழியெல்லாம் உண்பதற்கு உணவுப் பொருட்கள் விற்றுக் கொண்டிருக்க.. அதைச் சட்டை செய்யாமல் யோசனை யுடன் நடந்து கொண்டிருந்தாள் நந்தினி..

"என்ன நந்தினி.. நீ எவ்வளவு சாப்பிட்டாலும் என் பர்ஸ் தாங்கும்.. சாப்பிடு நந்தினி, சாப்பிடு.. நீ சாப்பிடும் அழகைக் காண்பதற்குத்தானே ஓடோடி வந்திருக்கிறேன்.. என்னை ஏமாற்றி விடாதே..."

அவள் பதில் சொல்லாமல் மெல்லச் சிரித்தாள்.. அவளுடன் சேர்ந்து சிரித்தபடி.. மலையின் சரிவைப் பார்த்தவனுக்குச் சிரிப்பு அப்படியே உறைந்து விட்டது..

கிடுகிடு பள்ளத்தாக்கு.. அவன் குதிக்க இருந்து.. கடைசி நொடியில் நந்தினி கைப் பிடித்து இழுத்ததால் குதிக்காமல் விட்ட பள்ளத்தாக்கு.. நாளை அவன் குதிக்கப் போகும் பள்ளத்தாக்கு..

இந்த ஒரு வாரமும்.. இவ்வளவு சீக்கிரம் ஓடிப் போய் விட்டதே என்ற ஏக்கத்துடன் அவன் நந்தினியைப் பார்த்தான்.. அப்போது அவளும் அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்..

"தேங்க்ஸ் நந்தினி.."

"எதற்கு..?"

"இந்த ஒரு வாரமும் நான் சந்தோசமாக இருந்தேன்.. நாளைக்கு நான் கிளம்ப வேண்டும்.."

"எங்கே கிளம்ப வேண்டும் சார்.. சென்னைக்கா..? இல்லை, திரும்பவும் தற்கொலை செய்து கொள்வதற்கா..?"

நந்தினி நிறுத்தி நிதானமாக இந்தக் கேள்வியைக் கேட்டாள்.. அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது... அவனது சந்தேகம் உண்மைதான்.. இவளுக்கு எல்லாமே தெரிந்திருக்கிறது..

"நந்தினி.. இது உனக்கு எப்படித் தெரியும்..?"

அவன் குரல் நடுங்கக் கேட்டான்.. அவள் அமைதியாய் அவனுக்குப் பதில் சொன்னாள்..

"தெரியும்.. அன்றைக்கே எனக்கு இது தெரியும்..."

"அந்த ரவுடிகள் உன்னைத் துரத்தி வந்தது...?"

"நான் சொன்ன கற்பனைக் கதை..."

"பொய் சொன்னாயா...?"

"ஆமாம்..."

"எதற்காக...?"

"உங்களைத் தற்கொலை பண்ணிக் கொள்ளாமல் தடுப்பதற்காக அந்தப் பொய்யைச் சொன்னேன்.. அதற்குப் பின்னால் என் வீட்டில் உங்களை விருந்தாளியாய் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அந்தப் பொய்யை அப்படியே தொடர்ந்து சொன்னேன்..."

"ஆனால்.. உனக்கு மட்டும் எப்படி நான் தற்கொலை பண்ணிக் கொள்ளப் போனது தெரியும்...?"

"போன மாத பிஸினெஸ் வீக்லியில் உங்களைப் பற்றி ஒரு கவர் ஸ்டோரி போட்டிருந்தார்கள் சார்.. அதில் உங்களைப் பற்றியும்.. நீங்கள் உருவாக்கியிருக்கும் தொழில் சாம்ராஜ்யத்தைப் பற்றியும் எழுதியிருந்தார்கள்.. கடைசியாக.. அந்த ஸ்தாபனங்கள் சரியும் நிலையில் இருப்பதைப் பற்றியும்.. அது வீழ்ந்து விடாமலிருக்க நீங்கள் போராடிக் கொண்டிருப்பதைப் பற்றியும் சொல்லியிருந் தார்கள்.. அதைப் படித்த பின்பு எனக்கு மனமே சரியில்லை சார்.."

"எதற்காக நந்தினி..."

"நீங்கள் யாரோ.. எவரோ.. எனக்கு அப்போது எதுவுமே உங்களைப் பற்றித் தெரியாது சார்.. ஆனால்.. அப்படிப் பட்ட பெரிய கம்பெனிகளை உருவாக்கிய நீங்கள்.. அது சரிந்து விடாமலிருக்கப் போராடும் நிலை வந்திருப்பதைப் படித்தவுடன் ஏனோ என் மனதிற்கு அது மிகவும் கஷ்டமாக இருந்தது சார்..."

"நந்தினி.."

"அன்றைக்கு என் பிரண்டுடன்... குதிரைச் சவாரி செய்யப் போன போது.. ரோட்டில் காரை நிறுத்தி விட்டு நீங்கள் இறங்கி வருவதைப் பார்த்தேன்.. என் பிரண்டை வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டு நான் உங்களை பாலோ பண்ணினேன்..."

"ஏன்...?"

"எனக்கே தெரியாது சார்.. உங்களுடைய சோர்ந்த முகமும்.. தளர்ந்த நடையும்.. என்னை மிகவும் பாதித்தது.. நான் பயந்தது போலவே.. நீங்கள் ஜனக் கூட்டத்திலிருந்து பிரிந்து தனியாகப் போனீர்கள்.. நான் உங்களைப் பின் தொடர்ந்தேன்.. நான் நினைத்தது போலவே குதிக்கப் போனீர்கள்.. நான் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினேன்.."

"எதற்காக என்னைக் காப்பாற்றினாய் நந்தினி...?"

"எதற்காக நீங்கள் அந்த முடிவிற்கு வந்தீர்கள் சார்..?"

"எனக்கு வேறு வழி தெரியவில்லை.. என் கண் முன்னால் நான் உருவாக்கிய என் தொழில் சாம்ராஜ்யம் சிதைந்து தரை மட்டமாவதைப் பார்க்கும் சக்தி எனக்கில்லை நந்தினி.. என்னால் அதைக் கண் கொண்டு பார்க்க முடியாது.. என் தொழில்களின் அழிவைச் சந்திக்க என்னால் முடியாது.."

"ஏன் முடியாது...?"

அழுத்தம் திருத்தமாய் அந்தக் கேள்வியைக் கேட்டாள் நந்தினி..

"சொல்லுங்கள் சார்.. ஏன் அது உங்களால் முடியாது..? நீங்கள் பிறக்கும் போது இந்தத் தொழில் சாம்ராஜ்யம் உங்களுக்குச் சொந்தமானதாக இருந்ததா..?"

"இல்லை.. நான் பிறந்த போது என் அப்பா சாதாரண நிலையில் இருந்தார்... நான் வளரும் போது சிறிதாக ஒரு தொழில் தொடங்கினார்.. அது நல்ல லாபம் கொடுத்தது.. அதுதான்.. 'ஆதித்யா இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட் கம்பெனி..'"

"ம்ம்.. அப்புறம்..."

நந்தினி அவனைப் பேசவிட்டு மெதுவாக நடக்க ஆரம்பித்தாள்.. அந்த அழகான மலைச்சாரல்.. நீண்டு செல்லும் நடைபாதை.. கண்ணுக்குக் குளுமையாய்த் தெரியும் மலர்க்கூட்டங்கள்.. மனதை வருடும் இயற்கைக் காட்சிகள்.. அருகே இதமாகப் பேசிக் கொண்டு.. அவனது சுமைகளைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு ஜீவன்.. அவளுடன் இணைந்து நடந்த ஆதித்யன் தன் மனதைத் திறந்து.. தன் மனச் சுமைகளைக் கொட்ட ஆரம்பித்தான்..

"என் பதினைந்தாம் வயதில் அப்பா இறந்து விட்டார்.. அடுத்து இரண்டு.. மூன்று வருடங்களில் அம்மாவும் அப்பாவைப் பின்பற்றி விட்டாங்க.. நான் தனியானேன்.."

"கடவுளே.."

"படிப்பையும் விடவில்லை.. தொழிலையும் விட வில்லை.. இரண்டிலும் வெற்றி பெற்றேன்.. எம்பிஏ பட்டமும் பெற்றேன்..."

"ம்ம்ம்..."

"அதற்குப் பின்னால் தொழில்.. தொழில்.. தொழில் தான்.. கண்மூடித்தனமாக அதில் குதித்தேன்.. எனக்கென்று குடும்பம் இல்லை.. காத்திருக்க ஆளில்லை.. தேடுவாரற்ற தனிமையை வேலையில் தொலைத்தேன்.."

"சார்..."

"'ஆதித்யா இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட் கம்பெனி' வளர ஆரம்பித்தது.. அத்தோடு சேர்ந்து தொடர்ச்சியாகப் பல கம்பெனிகளைத் தொடங்கினேன்.. விரல் விட்டு எண்ண

முடியாத அளவிலான பல தொழில்கள்.. என் கம்பெனி.. 'ஆதித்யா குரூப் ஆஃப் கம்பெனிஸ்' ஆக வளர்ச்சியடைந்தது.. வெளி நாட்டுக் கம்பெனிகள் என்னுடன் வியாபார ஒப்பந்தம் போடப் போட்டா போட்டி போட்டனர்.."

"ம்ம்..."

"வெற்றிகளின் பின்னால் ஓடிக் கொண்டிருந்த என்னைத் தோல்வி துரத்த ஆரம்பித்தது..."

"எப்படி...?"

"என் வெளிநாட்டு ஒப்பந்தகளில்.. ஒன்று சறுக்கி விட்டது.. அந்தத் தொழிலில் ஏற்பட்ட சரிவை ஈடுகட்ட என் வேறொரு கம்பெனியில் கை வைத்தேன்.. அது அதைப் பாதித்து விட்டது.. ஆதித்யனுக்குப் பிரச்சனை என்ற செய்தி வெளியே கசிய ஆரம்பித்தது.. என் திறமையான ஸ்டாப்கள் சிறிது.. சிறிதாக வேறு கம்பெனிகளுக்குப் போக ஆரம்பித்தார்கள்..."

"ச்ச்ச்..."

"அவர்கள் மாறிய இடங்களில் உடனடியாய்ப் புது ஆள்களை நியமித்தேன்.. இருந்தும் வேலை பாதித்தது..."

"பாதிக்கத்தானே செய்யும்..."

"ஒரு பக்கம் பணமுடை.. இன்னொரு பக்கம் ஆள்கள் விலக ஆரம்பித்தது.. இரண்டும் ஒன்று சேர்ந்த போது.. கம்பெனியின் சரிவு ஆரம்பித்து விட்டது..."

"உங்களால் அதைச் சரி செய்ய முடியவில்லையா..?"

"முடியும்.. முடிந்திருக்கும்.. ஒருமுனைத் தாக்குதலாக மட்டும் அது இருந்திருந்தால்.. அப்பா இறந்து போன போது சரிய ஆரம்பித்த என் கம்பெனியை நான் தூக்கி நிறுத்தவில்லையா..? இது பல முனைத் தாக்குதல்.. இதிலிருந்து நான் தப்பிப்பது எப்படி...?"

"அதற்காக இப்படி ஒரு முடிவை எடுக்கலாமா...?"

"நான் வேறு என்ன செய்வது..? போர்க்களத்தில் போர் புரிய ஒரு ஆயுதமாவது வேண்டாமா..? நிராயுத பாணியாய் நான் எப்படிப் போர் புரிவது...?"

"இதைச் சொல்வது தி கிரேட் ஆதித்யன் என்று நினைக்கும் போது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.. உங்களுக்குப் போராட ஆயுதம் எதற்கு? மன வலிமை போதாதா...?"

"அதுதான் பலகீனமாகி விட்டதே..."

"அதைத்தான் ஏனென்று நானும் கேட்கிறேன்.. சார்.. நீங்கள் வெற்றியின் ருசியை மட்டுமே அனுபவித்து விட்டு.. தோல்வியின் சுமையைத் தாங்க இயலாமல் கோழை போல் ஓடி ஒளிகிறீர்கள்.. இதை யார் வேண்டுமானாலும் செய்யலாம்.. நீங்கள் செய்யக் கூடாது.."

"நானும் மனிதன் தானே.. என் மனமென்ன இரும்பா..? அதுவும் வலியில் துடிக்கும்.. தோல்வியில் துவளும்.."

"இருக்கும்.. நான் இல்லையென்று சொல்ல வில்லை.. அந்த மாதிரிச் சமயங்களில் நீங்கள் பிரச்சனைகளில் இருந்து விலகி நில்லுங்கள்.. உங்கள் மனதை அமைதிப்படுத்திக் கொள்ளுங்கள்.."

"துரத்தும் நினைவுகளைப் பற்றி உனக்குத் தெரியாது நந்தினி.."

"உண்மைதான்.. எனக்குத் தெரியாது தான்.. ஆனால் ஜெயிக்கும் ஆதித்யனைப் பற்றி எனக்குத் தெரியுமே.."

முதன் முதலாய்த் தன் பெயரை அவள் உச்சரித்ததும் ஆதித்யனின் நடை நின்று விட்டது.. அவள் முகத்தையே அசையாது பார்ததான்.. எல்லையற்ற கருணையுடனும்.. தாய்மையுடனும் அவளது முகம் பிரகாசித்தது.. இருட்டில் நிற்பவனுக்கு.. கண்முன் அகல் விளக்கு தோன்றி வழிகாட்டுவது போல.. அவள் அமைதியாகப் பேசிக் கொண்டிருந்தாள்..

"சரியப்போகிறது.. சரியப் போகிறது என்கிறீர்களே.. அது சரிவு தானே.. முழு இழப்பில்லையே.. அப்படியே அது இழப்பாக இருந்தாலும்.. அது நீங்கள் உருவாக்கிய சாம்ராஜ்யம் தானே.. நீங்கள் நினைத்தால் அதை மீண்டும் உருவாக்க முடியாதா...?"

"அதற்கான மன வலிமை என்னிடம் இல்லையே..."

"இருக்கிறது.. உங்களுக்குள் அது இருக்கிறது.. நீங்கள் நினைத்தால் அதை மீண்டும் கொண்டு வரலாம்.."

"எப்படி..."

"இந்த ஒரு வாரமும்.. எல்லாவற்றையும் மறந்து எப்படி உங்களால் நிம்மதியாகவும்.. சந்தோஷமாகவும் இருக்க முடிந்தது..? அப்படித்தான் ஆதித்யன்.."

'திரும்பவும் அவன் பெயரைச் சொல்கிறாள்..' அவன் மனம் துள்ளியது.. அதை அவளது கூர் விழிகளும் கண்டு கொண்டன.. அவனது முக ஒளிர்வைக் கவனித்தபடி அவள் பேச்சைத் தொடர்ந்தாள்..

"சொல்லுங்கள்.. இப்போது மட்டும் சோர்வில்லாமல் உங்களால் எப்படி இருக்க முடிந்தது..?"

"இப்படிப்பட்ட ஓர் குடும்ப வாழ்வு.. என் அப்பா இறப்பதற்கு முன் வரைதான் எனக்குக் கிடைத்தது... அதன் பின்னே நான் தன்னந்தனியானேன்.."

அவன் முகம் கனிந்தது...

"இல்லை ஆதித்யன்.. இந்த உலகில் யாரும் தனி கிடையாது..."

"அது இத்தனை நாள் எனக்குத் தெரியாதே.."

"இப்போது தெரிந்து கொண்டீர்கள் தானே..."

"ம்ம்.. அழகான ஒரு குடும்பம்.. அதில் சிரிப்பும்.. அரவணைப்புமாக வாழும் குடும்பத்தார்.. அந்தக் குடும்பத்தில் நானும் ஒருவனாக வாழும் வாய்ப்பை எனக்குக் கொடுத்தாய்.. அதற்கு என் மனமார்ந்த நன்றி நந்தினி.."

"இந்தக் குடும்பத்தில் என்றைக்குமே நீங்களும் ஒருவர்தான் ஆதித்யன்..."

"நீ எனக்காகச் சொல்கிறாய்..."

"உண்மைதான்.. ஆனால் இதை உண்மையாகச் சொல்கிறேன்.."

ஆதித்யன் மௌனமாக.. அங்கிருந்த மலையின் சுற்றுச் சுவரில் சாய்ந்து நின்றான்.. அவன் முகத்தையே

பார்த்தவாறு.. காற்றில் முன்பக்கக் கூந்தல் அலைபாய நந்தினி நின்றிருந்தாள்...

"சொல்.. இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிறாய்..."

"உங்கள் இடத்திற்குத் திரும்பி போங்க, ஆதித்யன்.."

"போய்...?"

"போராடுங்கள்.."

"தோற்றுவிட்டால்...?"

"போராட்டத்தைத் தொடருங்கள்.. 'சிவாஜி' படம் பார்த்திருக்கிறீர்களா...? அதில் எல்லாவற்றையும் இழந்த ரஜினியின் கையில் வெறும் ஒரு ரூபாய் நாணயம்தான் இருக்கும்.. அதை வைத்து அவர் இழந்ததை மீட்டு விடுவார்.. ஜீரோவிலிருந்து ஹீரோ ஆவதுதான் அந்தக் கதையின் மெஸேஜ்.. அதை நீங்களும் செய்யுங்கள்.. தோற்றுப் போய் உயிரை மாய்த்துக் கொள்வது வீரமில்லை.. அந்தத் தோல்வியைத் தாங்கி நின்று வெற்றி பெற்றுக் காட்டுவதுதான் வீரம்..."

அவள் அழகாக அவனது சிந்தனையைத் தூண்டினாள்.. தவித்து நின்றவனின் கைப் பிடித்து.. துயரத்திலிருந்து மீட்டு வெளிக்கொணர்ந்தாள்.. கண் முன் பாதை தெரியாத கானகத்தில் ஓர் வழிகாட்டியாய் நின்று அவனை அழைத்துச் சென்றாள்.. அவன் கண்மூடி நின்றான்..

'யார் இவள்... வனாத்துத் தேவதையா...? இந்தப் பரந்த உலகில் நான் பழகிய ஜீவன்கள் பல ஆயிரம்.. அவர்களில் ஒருவருக்குக் கூட என் மேல் அக்கறை இல்லை.. ஆனால் நான் முகமறியாத.. ஊர் பேர் அறியாத ஒருத்தி.. என் கைப் பிடித்து மரணத்தின் விளிம்பிலிருந்து என்னைக் காப்பாற்றுகிறாள்.. ஏதும் அறியாத சிறு பெண் போல் என்னைச் சிரிக்க வைத்து உரையாடுகிறாள்.. சொந்தம் என்று சொல்லிக் கொள்ள ஒரு ஆள் இல்லாத என்னைத் தன் சொந்தக்காரன் போல் தன் குடும்பத்துடன் சேர்த்து வைக்கிறாள்.. இவள் எங்கிருந்து வந்தாள்..? இவளின் கருணைப் பார்வை என் மேல் விழ.. நான் என்ன தவம் செய்தேன்...?'

அவன் கண் விழிக்கும் வரை அவள் அமைதியாகக் காத்திருந்தாள்.. அவன் கண் திறந்ததும் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தாள்...

"போராடுங்கள் ஆதித்யன்.. உங்களால் அது முடியும்.. முதலில் உங்கள் தோல்விகளைக் கண்டு பயப் படாதீர்கள்.. சிரித்துக் கொண்டே எதிர்த்து நில்லுங்கள்.. தோல்வியுடன் சமரசம் செய்து கொண்டு விலகிப் போகச் சொல்லுங்கள்.. உங்களுக்கு வெற்றி நிச்சயம்..."

ஆதித்யன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்...

"தோற்றுப் போனவராக உங்களை நான் நினைத்தும் பார்த்ததில்லை, ஆதித்யன்.. நீங்கள் ஜெயிக்கப் பிறந்தவர்.. முடியாது என்பது முட்டாள்களின் அகராதி.. நீங்கள் முட்டாளில்லை, ஆதித்யன்..."

வாழ்க்கையென்பதை குரு க்ஷேத்திரமாகக் கண்டாhன் ஆதித்யன்.. அவனை அர்ஜுனனாக உருவகித்துக் கொண்டான்.. எதிரே பெண் வடிவத்தில் நிற்பது கிருஷ்ணன்.. அவர் கீதை சொல்லிப் பாதை காண்பித்துக் கொண்டிருக்கிறார்.. அவன் விழி விரியக் கேட்டுக் கொண்டிருக்கிறான்...

தன்னைக் குருவாக அவன் நினைப்பதை அறியாத வளாய் நந்தினி தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தாள்..

"எல்லாவற்றையும் விட்டு நீங்கள் போய் விட்டால்.. உங்கள் கம்பெனியைக் காப்பாற்ற ஆளில்லை, ஆதித்யன்.. அதற்கு இருந்து போராடுங்கள்.. ஒரு செங்கலாவது மிஞ்சுமல்லவா..? அந்தச் செங்கலை வைத்துத் திரும்பவும் அடியிலிருந்து ஆரம்பியுங்கள்.. உருவாக்குவதில் உள்ள சந்தோசத்தை ருசித்தவர் நீங்கள்.. உங்களால் உருவாக்க முடியும் என்பதைத் திரும்பவும் இந்த உலகிற்கு நிரூபியுங்கள்.."

நந்தினி தடையின்றிப் பேசிக் கொண்டிருந்தாள்.. ஆதித்யன் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்..

"உங்களுக்கென்று உங்கள் கம்பெனிகளில் ஒரு விசுவாசி இல்லாமல் போய் விட மாட்டார்கள்.. அவர்களை

ஆங்காங்கே ஒன்று திரட்டுங்கள்.. உங்களால் பலனடைந் தவர்கள் பலர் நிச்சயம் இருப்பார்கள்.. அவர்களின் நன்றியுணர்வைத் தூண்டி விடுங்கள்.. எதை வைத்து யாரை ஜெயிக்க வேண்டும் என்பதை எம்பிஏ படிக்கும் போதே படித்திருப்பீர்கள்.. அதை இப்போது பயன் படுத்துங்கள்.. உங்களை ஒரு முதலாளியாக நினைத்துக் கொள்ளாதீர்கள் ஆதித்யன்.. முதலாளிதான் தன் நாற்காலி பறி போனதைப் பற்றி நினைத்துக் கவலைப்படுவான்.. தொழிலாளியாக நினைத்துக் கொள்ளுங்கள்.. அப்போது கட்டாந்தரையில் படுத்துக் கொண்டாவது.. தொழிலைத் தூக்கி நிறுத்த வேண்டும் என்று நினைக்கத் தோன்றும்.."

எண்ணெய் ஊற்றி... திரியைத் தூண்டி விட்டால்... விளக்கு சுடர் விட்டு எரியாதா என்ன...?

# 11

"அந்தப் பார்த்திபன் கேட்க
கீதை சொன்னான்...
அந்தக் கீதையில் நமக்கும்
பாதை சொன்னான்...
கடன்களைப் புரிந்து
கவலை விடு...
வரும் பலன்களை
இறைவன் கையில் கொடு..."

காரிலிருந்து பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.. ஆதித்யன் தெளிந்த மனத்துடன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.. நந்தினி பேசியவரை போதும் என்று எண்ணம் கொண்டவள் போல்.. வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தாள்...

ஆதித்யனின் மனம் சிந்திக்க ஆரம்பித்தது.. நந்தினி பேசிய ஒவ்வொரு வார்த்தையும்.. ஆணியடித்தது போல் அவன் மனதில் பதிந்திருந்தது...

'நீ பிழைத்திருந்தால் ஒரு செங்கலாவது மிஞ்சாதா..? அந்த ஒரு செங்கல்லை அடிக்கல்லாய் நாட்டி.. திரும்பவும் உன் தொழில் சாம்ராஜ்யத்தைக் கட்ட ஆரம்பி...' அவள் பேசிய வார்த்தைகளின் சாராம்சம் அவன் மனதில் எதிரொலித்தது...

'முடியாது என்பது.. முட்டாள்களின் அகராதி.. நீ முட்டாளில்லை...' ஆதித்யனின் உடலில் ஒரு உத்வேகம் பிறந்தது... அவன் மனம் அவனுடைய ஒவ்வொரு கம்பெனியையும் வரிசைப்படுத்தி.. அவற்றின் கிளைகள் எங்கெங்கே இருக்கின்றன என்று வரிசைப் படுத்த ஆரம்பித்தது..

அந்தக் கிளைகளில் அவனுக்கு நம்பகமான ஆட்களைக் கணக்கெடுக்க ஆரம்பித்தான்.. பத்திற்கு ஆறு நபர்கள் ஒவ்வொரு கிளையிலும் தேறினார்கள்.. அவனின் மனதில் உற்சாகம் பிறந்தது...

'எதை வைத்து யாரை ஜெயிக்க வேண்டும் என்று நீ படித்ததில்லையா...?' என்று கேட்டாளே.. அந்தக் கேள்வி.. ஆதித்யனை எதிர்த்து நின்ற தடைகளை.. எதை வைத்து ஜெயிக்கலாம் என்று சிந்திக்க வைத்தது.. அவன் மௌனமாகி விட்டான்.. அவன் முகத்தில் சிந்தனை ரேகைகள் பரவ ஆரம்பித்திருந்தன..

"என்ன சார்.. நாளைக்குத்தானே நீங்கள் போவதாக இருந்தீர்கள்.. இன்றைக்கே கிளம்பி விட்டீர்களே.." மகேந்திரன் கேட்டார்...

"ஐ ஹேவ் மெனி அர்ஜென்ட் வொர்க்ஸ்.. நான் உடனே போயாக வேண்டும் சார்.. தேங்க்ஸ்.. இந்த வீட்டில் ஆறு நாள்கள் என்னை உங்களுடைய குடும்பத்தில் ஒருவனாக இணைத்துக் கொண்டதற்கு...!" என்று மனப்பூர்வமாகக் கூறினான் ஆதித்யன்..

"என்ன சார்.. நீங்கள் போய் இப்படிச் சொல்கிறீங்க.. உங்களைப் போன்ற பெரிய மனிதர்.. என் வீட்டில் ஆறு நாள்கள் தங்கியதை.. நான் பெரும் பாக்கியமாக நினைக்கிறேன் சார்..." மகேந்திரன் ஆதித்யனின் கையைப் பிடித்துக் கொண்டார்..

"ஹாய் வருண் அன்ட் தருண்.. அங்கிள் கிளம்பப் போகிறேன்.. போய் வரவா..?" அந்த சிறுவர்களின் உயரத்திற்குச் சரியாக மண்டியிட்டுப் பேசினான் ஆதித்யன்.

"நிஜமாகவே போகப் போகிறீங்களா அங்கிள்...?" என்று கவலையுடன் கேட்டான் வருண்..

"நிஜமாகத்தான்.. இதிலெல்லாம் பொய் சொல்லுவாங்களா.." ஆதித்யன் சிரித்தான்..

"எங்களுடன் கேரம் விளையாட இருக்க மாட்டீங்களா..?" என்று சோகப்பட்டான் தருண்..

"அதற்குத்தான் உன் அக்கா இருக்காங்களே.. அப்புறமும் ஏன் கவலை தருண்..."

"போங்க அங்கிள்.. அவள் கூட யார் விளையாடுவது..?"

"ஏன்.. நீதான் விளையாட வேண்டும்.."

"அவளுக்குக் கோபம் வந்தால் குட்டுவாள்.."

"நீயேன் அவங்களைக் கோபப் படுத்துகிறாய்..?"

"அதெல்லாம் இந்த மகாராாணிக்குப் பயந்து வாயடக்கி இருக்க முடியாது அங்கிள்.."

"ஹா... ஹா..."

ஆதித்யன் வாய் விட்டுச் சிரித்தவாறு எழுந்து கொண்டான்.. அவ்வளவு பெரிய தொழிலதிபர்.. தன் மகன்களுக்கு இணையாக மண்டி போட்டுப் பேசியதைக் கண்ட தெய்வேந்திரனின் முகம் மலர்ந்து விட்டது..

"உங்கள் பையன்கள்.. ரொம்ப கெட்டிக்காரர்கள்..!" ஆதித்யன் உண்மையாகக் கூறினான்...

"தேங்க்ஸ் சார்..." என்று மகிழ்ந்து போனார் தெய்வேந்திரன்..

"ஆன்ட்டி.. போய் வரட்டுமா..?" மலர் விழியிடம் கை கூப்பி வணங்கி விடைபெற்றான்..

"அடிக்கடி வந்து விட்டுப் போங்க.. உங்களைப் பார்த்தால் வேற்று மனிதர் போலவே எங்களுக்குத் தெரியவில்லை.. எங்க சொந்தக்காரர் போலவே இருந்தது.. கொடைக்கனால்

வந்தால்.. நம்ம வீட்டில்தான் நீங்க தங்கணும்.. ஸ்டார் ஹோட்டல்களுக்குப் போய் விடக் கூடாது.."

இத்தனை நீளமாக மலர்விழி பேசி இன்றுதான் கேட்கிறான் ஆதித்யன்.. அமைதியாய் வளைய வந்த பெண்மணியின் மனதில் இவ்வளவு பாசமா.. என்று இருந்தது அவனுக்கு...

"ஸ்டார் ஹோட்டல்களில் வசதி கிடைக்கும்.. பாசம் கிடைக்குமா..? அது இங்குதான் எனக்கு கிடைத்தது ஆன்ட்டி.. எனக்கு அம்மா இல்லை.. உங்கள் கையால் சாப்பிட்டது என் அம்மா கையால் சாப்பிட்டது போலவே இருந்தது.."

ஆதித்யன் நெகிழ்ந்த குரலில் சொன்னதும்.. மலர் விழி கண் கலங்கி விட்டாள்.. புடவை முந்தானையில் கண்களைத் துடைத்துக் கொண்டே...

"என்னையும் உங்க அம்மாவாகவே நினைத்துக்குங்க." என்று கனிவுடன் கூறினாள்...

"வருகிறேன் சிஸ்டர்.." என்று ஆனந்தியிடம் சொல்லிக் கொண்டான்..

"அக்கான்னு சொல்லலாம்...!"அவள் வாத்சல்யமாய்க் கூறினாள்..

"தேங்க்யு அக்கா.."

ஆதித்யனின் கண்கள் நந்தினியைத் தேடின.. அவள் அங்கு இல்லை..

"நந்தினி எங்கே..."

"மொட்டை மாடியில் இருக்கிறாள்.. ஒரு வாரமாய் ஒட்டுப்புல் போல உங்களுடன் சுற்றிக் கொண்டிருந்தாளில் லையா.. இப்போது நீங்கள் கிளம்பவும்.. அவளுக்கு வெறிச்சென்று இருந்திருக்கும்.. அதுதான்.. மூட் அவுட்டாகி விட்டாள் போல.."

"ஓ..."

"அவள் இப்படித்தான் சார்.. மூட் அவுட்டாகி விட்டால்.. மொட்டை மாடிக்குப் போய் விடுவாள்.. சின்ன வயதிலிருந்தே.. இது போலத்தான்.. வீட்டிற்கு வரும் விருந்தாளிகள் கிளம்பி விட்டால் உம்மென்று

ஆகிவிடுவாள்.. இது கொடைக்கானல் பாருங்கள்.. விருந்தாளிகள் கூட்டம் அதிகமாக இருக்கும்.."

"நான் மொட்டை மாடிக்குப் போயே அவளிடம் சொல்லி விட்டு வருகிறேன் சார்.."

ஆதித்யன் மாடியேறினான்.. மொட்டை மாடியின் கடைசியில்.. சுற்றுச் சுவரின் அருகே நின்று கொண்டு.. தொலைதூர மலை முகட்டில் வந்து கூடும் மேகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி.. ஆதித்யன் மெதுவாக அவள் பின்னால் சென்று நின்றான்...

"நந்தினி..."

உடனே அவள் திரும்பவில்லை.. மெதுவாய்ச் சற்று நேரம் கழித்தே திரும்பிப் பார்த்தாள்.. அவளது கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன...

'அழுதிருக்கிறாள்...'

அவன் மனம் அவளது அன்பு கண்டு பாகாய் உருகியது..

'இது எந்த வகையான அன்பு..? நான் யார்..? இவள் யார்..?'

'என் வாழ்வை மீட்டுக் கொடுத்து.. வாழ்வதற்குத் தைரியமும் கொடுத்து... போராடத் தெம்பும் கொடுத்து.. நிராயுதபாணியாய் நின்றவனை... சகல ஆயுதங்களும் ஏந்தியவனாய்ப் போர்க் களத்திற்கு அனுப்பியும் வைக்கிறாளே.. இத்தனையும் செய்து விட்டு.. ஏன் கண் கலங்கி நிற்கிறாள்..? இவள் விடும் ஒவ்வொரு கண்ணீர்த் துளியும்.. விலை மதிப்பற்ற வைரம் அல்லவா..'

ஆதித்யன் அவள் விழியோடு விழி பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றான்.. அவளது கண்ணீர் விழிகள்.. அவனது விழிகளிலிருந்து தன் பார்வையை விலக்கிக் கொள்ளவே இல்லை...

அவர்கள் இருவரும்.. பார்வையை விலக்காமல் அசைவற்று நின்றனர்.. ஆதித்யனால் அந்த நிலையில் அவளிடம் விடை பெற முடியவில்லை.. அதே சமயம்.. அவளின் அனுமதியின்றி அங்கிருந்து நகரவும் முடியவில்லை..

ஆணியடித்தவன் போல் அவளது பார்வையோடு.. பார்வை கலந்து அசையாமல் நின்றான்..

"போய் வரவா நந்தினி.."

அவள் சம்மதமாய்த் தலையைக் கூட அசைக்க வில்லை.. அவனது விடைபெறும் வார்த்தைகளைக் கேட்டு அவளது மனதில் ஓர் அதிர்வு பிறந்தது...

'இதோ இவன் போய் விடுவான்.. என் கண் பார்வையிலிருந்து மறைந்து.. இவனது கடமைகளில் நுழைந்து விடுவான்.. திரும்பவும் இவனை எப்போது பார்ப்பேன்..?'

ஏங்கிக் தவித்தது அவளது உள்ளம்.. துக்கம் ஒரு சிறு பந்து போல் அவளது தொண்டையை அடைத்துக் கொண்டது..

'ஏன் இவன் வந்தான்...? இவனைப் பாராத போது.. நான்.. நானாக இருந்தேனே.. இவனைப் பார்த்த பின்னால்.. என்னை நானே தொலைத்து விட்டேனே.. என் உணர்வுகளை அறியாமல்.. அதை மதிக்காமல் இவன் போகிறேன் என்கிறானே..'

சிறு குழந்தையிலும் குழந்தையாகி அவள் தவித்தாள்.. அவன் போகத்தான் வேண்டும்.. என்பது புரிந்தும்.. அவனைப் போக விடாமல் நிறுத்துவது என்பது அவளால் இயலாத காரியம் என்று தெரிந்தும்.. அவள் மனம்.. அவன் போவதை மறுத்து ஆட்சேபித்தது...

அவனோ.. அவளது விழியசைவிற்காகக் காத்து நின்றான்.. அவளது அனுமதியில்லாமல் அவன் போக மாட்டான் என்பதை அவளுக்கு உணர்த்தி நின்றான்..

நந்தினி தன்னை அமைதிப் படுத்திக் கொண்டாள்.. அவனைப் பார்த்து.. தன் வலக் கரத்தை நீட்டினாள்... தயங்காமல் தன் வலக் கரத்தை அவளது கரத்தில் வைத்துப் பற்றிக கொண்டான் அவன்..

அவளது மென்மையான கரம்.. அவனது ரோமம் நிறைந்த வலிய கரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டது..

என்ன நடக்கிறது என்று ஆதித்யன் உணரும் முன்பே நந்தினி.. அவன் வலக்கரத்தைத் தன் கரத்தால் இறுக்கிப் பற்றி.. அதில் தன் இதழ்களைப் பதித்தாள்...

ஆதித்யனின் உடலில் ஓர் சிலிர்ப்பு பரவியது.. அவனது கரத்தை விட்ட நந்தினி.. அவனை மீண்டும் தவிப்புடன் பார்த்தாள்..

"போய் வரவா...?"

அவன் அனுமதி கேட்டான்.. அவள் பிடிவாதமாய்ப் பதில் சொல்ல மறுத்தாள்.. அவளது கண்களையே பார்த்த வண்ணம் அவன் நின்றான்..

மீண்டும் நந்தினியின் கை அவனை நோக்கி நீண்டது.. ஆதித்யன்.. தன் வலக் கரத்தைக் கொடுத்தான்.. அவன் கரத்தை இறுக்கிப் பற்றி விலகியது அவளது கை..

"போய் வரவா...?"

இந்த முறை அவள் லேசாகத் தலையசைத்தாள்.. ஆதித்யன்.. ஒரு கணம் தயங்கி நின்றான்.. மறு கணம்.. படிகளில் இறங்கி வேகமாய்ப் போய் விட்டான்.. அவனது கார் கிளம்பும் ஓசையைக் கேட்ட நந்தினி.. தன் கண்களை மூடிக் கொண்டாள்.. மூடிய விழிகளில் இருந்து கண்ணீர்த் திவலைகள் சிந்தின..

# 12

அந்தப் பிரம்மாண்டமான கட்டடம் கண்ணாடியால் முன்புறம் கீழிருந்து.. மேல்தளம் வரை மறைக்கப்பட்டு.. வானைத் தொடுவது போல் எழுந்து நின்றது.. அதன் சுற்றுப் புறச் சுவர்கள்.. கனமாகவும்.. உயரமாகவும்.. அந்தக் கட்டடத்தைச் சுற்றி வளைத்துக் கடினமாய் நின்றன.. சுற்றுப்புற வளாகத்தில் ஆங்காங்கே சின்னச் சின்னக் கட்டடங்கள் இருந்தன.. பெரிதாய் இருந்த கட்டடத்தின் உள்ளே.. இருசக்கர வாகனங்களும்.. கார்களும் நிறுத்தப் பட்டிருந்தன...

ஆதித்யனின் காரைக் கண்டதும்.. வாசலில் சோம்பலாய்த் தன் அறைக்குள் அமர்ந்து.. எதிர்காலத்தில் எங்கே வேலை தேட வேண்டுமோ என்ற கவலையுடனிருந்த வாயிற் காவலாளி அவசரமாய் எழுந்து கேட்டைத் திறந்து விட்டான்..

எப்போதுமே அவனது சல்யூட்டைக் கண்டும் காணாமல் போய் விடும் ஆதித்யன்.. இன்று லேசான தலையசைவுடன் அதை ஏற்றுக் கொண்டதைக் கண்ட வாயிற்காவலாளிக்கு ஒரே ஆச்சர்யமாய்ப் போய் விட்டது..

'ஆ' வென்று வாய் பிளந்து ஆதித்யனின் கார் போவதையே பார்த்துக் கொண்டிருந்தவனின் பின்னால் வந்து நின்ற பியூன் மாணிக்கம்...

"என்ன ராமையா.. என்றைக்குமில்லாம இன்றைக்கு எம்டியின் கார் போவதையே திறந்த வாயில் ஈ நுழைவது கூடத் தெரியாமல் பார்த்துக்கிட்டிருக்க...?" என்று வினவினாள்...

"அதை இன்னான்னு சொல்லுவேன் மாணிக்கம்..." என்று சென்னைத் செந்தமிழில் ராமையா பதில் சொன்னான்..

"ஏம்பா.. நான் என்னான்னு கேட்டா.. நீ இன்னான்னு சொல்லுவேன்னு என்கிட்டயே கேட்கறீயே.... இது உனக்கே சரின்னு படுதா..."

"அடப் போப்பா.. நீ வேற.. என்னைக்குமில்லாத திருநாளா இன்னைக்கு நம்ம எம்டி என்னைப் பார்த்துச் சிரிச்சாருப்பா.."

"நிசமாலுமா சொல்றே..."

"பின்னே.. பொய்யா சொல்றேன்...?"

"என்னடா இது.. உலக மகா அதிசயமாய் இருக்கு.. கப்பலே கவிழப் போகுதுன்னு ஊரெல்லாம் பேச்சு அடிபடுது.. கப்பல் கேப்டன் சிரிச்சுக்கிட்டுப் போறாரா..? இதை எங்கே போய்ச் சொல்றது...?"

"ஏன்.. இந்த ஆபீஸ் முழுக்கப் போய்ச் சொல்லேன்.. அதைத்தானே தினமும் செய்துக்கிட்டுகீற.."

"கம்பெனி திவாலாகப் போகுதுங்கிறாங்க.. நம்ம எம்டிக்கு எப்படி சிரிப்பு வருது ராமையா...?"

"எனக்கென்னவோ.. அவர் கம்பெனியைக் காப்பாத்த வழி கண்டு பிடிச்சிருப்பாருன்னு தோணுதுப்பா.. இம்மாம் பெரிய கம்பெனியை ஆக்கின மனுசனுக்கு.. அதைக்

காப்பாத்தவா வழி தெரியாம போயிடும்..? அவரு அவ்வளவு சீக்கிரம்.. சாயுற மனுசனில்லப்பா..."

"கரெக்ட்.. நீ அதிகம் பேச மாட்ட ராமையா.. ஆனால் ஒரு வாசகம் சொன்னாலும்.. அது திருவாசகமா இருக்கும்.."

"எதுக்கு இப்படி காலங்கார்த்தால இம்மாம் பெரிய ஐஸ் கட்டியைத் தூக்கி எந்தலை மேல வைக்கிற..."

"ஹி.. ஹி.. ஒரு தம் இருந்தாக் குடேன்..."

"அதுதானே பார்த்தேன்.. ஓசி தம்மை... காலையில என்கிட்டேயிருந்து ஆரம்பிச்சுட்டியா.."

வாயிற்காவலாளியை ஆரச்சரியப்படுத்திய ஆதித்யன் காரைக் கட்டடத்தின் முன்னால் நிறுத்தி விட்டு இறங்கினான்.. ஆபிஸின் கார் டிரைவர்.. ஓடி வந்து கார் சாவியை வாங்கிக் கொண்டு.. காரை பார்க்கிங் பண்ணப் போனான்...

அலுவலகப் படிகளில் தாவி ஏறிய ஆதித்யன்.. வரவேற்புப் பகுதியைக் கடந்து செல்லும் போது ரிசப்சனிஸ்ட் ஷைலஜா அவசரமாய் எழுந்து நின்று வணக்கம் சொன்னாள்.. பதிலுக்குச் சின்னப் புன்னகையுடன் தலையசைத்து விட்டுச் சென்றவனின் நிமிர்ந்த நடையைக் கண்டு அவளுக்குள்ளும் ஆச்சரிய அலை எழுந்தது...

"என்ன ஷைலு.. எம்டியை அப்படிப் பார்த்துக்கிட்டு நிற்கிற.. சைட் அடிக்கிறாயா..?"

அக்கவுண்ட்ஸில் இருக்கும் சுகந்தி அருகே எழுந்து வந்து வினவினாள்...

"ச்சு.. அவரே பாவம்.. சிக்கலில் இருக்கிறார்.. அவரைப் போய் சைட் அடிக்கிறதாய்ச் சொல்கிறாயே.. உன்னை என்னதான் செய்வது...?"

"போகிறவரையே இப்படிப் பார்த்துக் கொண்டு நின்றால்.. வேறு எப்படிச் சொல்வது...?"

"ஏய்ய்.. அவர் சைட் அடிக்க வைக்கிற பெர்ஸனாலிட்டி உள்ளவர்தான்.. நானும் அவரை சைட் அடித்துக் கொண்டிருப்பவள்தான்.. ஆனால் இன்றைக்கு அதுபோல எதுவும் இல்லை.."

"ஏன்...?"

"என்னடி நீயே இப்படிக் கேட்கிற..? ஆதித்யா குரூப் ஆஃப் கம்பெனிஸ் ஆட்டம் கண்டு கொண்டிருக்கின்றது.. நம் எம்டியோ வனவாசம் போய் விட்டுத் திரும்பி வந்திருக்கிறார்..."

"அதைப் பற்றி நமக்கென்ன கவலை..? இந்த மடம் இல்லாவிட்டால் சந்த மடம்..."

"சுகந்தி..."

"ஆல்ரெடி.. நான் வேறு வேலை தேடிக் கொண்டு விட்டேன்.. இந்த மாதம் முடியும் வரை காத்திருக்கிறேன்.. அதனால்.. நடப்பதை வேடிக்கை பார்க்கும் மனநிலைதான்.. எனக்கு.."

"அடிப்பாவி.. இத்தனை நாளும் நாம் இந்தக் கம்பெனியின் ஸ்டாப்பாக இருந்தோம்.."

"அப்போது அதற்காகப் பெருமையும் பட்டோம்.. அது ஒரு காலம்.. ஆதித்யா குரூப் ஆஃப் கம்பெனிஸிலா வேலை பார்க்கிறாய் என்று நம்மை விழி விரியப் பொறாமையாய்ப் பார்ப்பார்கள்.. இப்போதுதான் எல்லாம் மாறிவிட்டதே.. இப்போது இங்கே வேலை பார்க்கிறோமுன்னு சொன்னால்.. ஐயோ பாவம்ன்னு ஒரு பார்வை பார்க்கிறாங்க..."

"அதற்காக..?"

"அடிப்போடி.... மூழ்கப் போகும் கப்பலில் யார் இருப்பார்கள்..?"

அதே கேள்வியைத்தான் அப்போது ஆதித்யன்.. தன் நண்பனும்.. ஜெனரல் மேனேஜரும் ஆன ரமேஷிடம் கேட்டுக் கொண்டிருந்தான்...

# 13

"டெல் மீ ரமேஷ்.. மூழ்கப் போகும் கப்பலில் என்னுடன் துணை நிற்கத் துணிச்சல் உள்ளவர்கள் யார்.. யார்...?"

"முதலில் நான் ஆதித்யா..."

"அடுத்து..?"

"ஐந்து நிமிடங்களில் விவரத்துடன் வருகிறேன்..."

ரமேஷ் சொன்னபடி சரியாக ஐந்தே நிமிடங்களில் விவரங்களுடன் வந்தான்.. அந்த ரிப்போர்ட்டை ஊன்றிப் படித்தான் ஆதித்யன்.. அவன் கணிப்பு பொய்க்க வில்லை.. அறுபது விழுக்காடு பணியாளர்கள் அவன் பக்கம் துணிந்து நிற்பார்கள் என்றது அந்த ரிப்போர்ட்...

"ரமேஷ்... நம் கம்பெனிகளின் பிரான்ச்கள் அனைத்திலும்.. அடுத்தடுத்து நம் மீட்டிங் நடக்க வேண்டும்.. டூர் புரோக்ராம் போடு.. தேவையான தேதிகளில் அந்தந்த ஊர்களில் இருந்து நான் மாறிப் போக வசதியாக பிளைட் டிக்கெட் புக் பண்ணு.. இங்கே உனக்கு அடுத்து நமக்கு நம்பகமாக இருக்கும் மேனேஜர்களில் ஒருவரிடம் இந்தக் கம்பெனியின் பொறுப்பைத் தற்காலிகமாக ஒப்படை.. டூரில் என்னுடன் நீயும் வருகிறாய்.. ஸோ.. பிளைட் டிக்கெட் உனக்கும் சேர்த்துத் தான்.. புரிகின்றதா...?"

"புரிகிறது ஆதித்யா...?"

"அந்தந்த ஊர்களில் உள்ள நம் கெஸ்ட் ஹவுஸ்களைத் தயார் நிலையில் வைக்கச் சொல்..."

"ஓ.. கே.."

"உடனடியாக இந்தக் கம்பெனியில் மீட்டிங் அரேன்ஜ் பண்ணு.. க்விக்.. நமது வேலையை இங்கிருந்து நாம் தொடங்குகிறோம்..."

ஆதித்யன் மிக வேகமாகச் செயல்பட்டான்.. அடுத்த ஆறு நிமிடங்களில் அந்தக் கம்பெனியில் இருந்த அனைத்துப் பணியாளர்களும்.. மீட்டிங் ஹாலுக்கு அழைக்கப்பட்டனர்...

குழுமியிருந்த பணியாளர்கள் முன்னால்... தன் கம்பெனிகள் மூழ்காமல் காப்பாற்றி விடும் துடிப்புடன்... தன் முதல் உரையைப் பேச ஆரம்பித்தான் ஆதித்யன்...

"இந்த ஆதித்யா குரூப் ஆஃப் கம்பெனிகளில் வேலை பார்ப்பதில் பெருமையை மட்டுமே தந்து கொண்டிருந்த

இந்த நிறுவனம்.... முதல் முறையாகச் சிறு தடையைச் சந்தித்து இருக்கிறது..."

ஷைலஜாவின் விழிகள் சுகந்தியைப் பார்த்தன... அவள் அசட்டையாய்த் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்...

"தடைகளைத் தாண்டிப் போகும் வேகம் எனக்கு இருக்கிறது.. இதை உருவாக்கிய நான்... இது அழிந்து போய் விடாமல் கட்டாயம் காப்பாற்றியும் விடுவேன்..."

ஷைலஜாவின் விழிகள் ஒளிர்ந்தன.. அவளைப் போலவே அங்கு இருந்த ஆதித்யனின் விசுவாசிகள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்..

"ஆனால்... இந்தப் போராட்டம் எனக்குரியது.. என் அலுவலர்களை அது பாதிக்க நான் விடுவதாக இல்லை.. எனவே உங்கள் முன்னிலையில் இரு வழிகளை நான் வைக்கிறேன்... அதில் ஒரு வழி.. என் அலுவலர்கள் என் கம்பெனியை விட்டு வெளியெற விரும்பாமல் என்னுடனே இருக்க வேண்டும் என்று விரும்பினால்.. அவர்கள் எனக்கு அறுபது நாள்கள் டைம் கொடுக்க வேண்டும்.. இரண்டு மாத கால ஊதியத்தைத் தாமதமாக கம்பெனியின் நிலைமை சரியான பின்னால் பெற்றுக் கொள்ள வேண்டும்.. வெளியேறி விட்ட அலுவலர்களின் வேலைகளையும் பகிர்ந்து செய்ய வேண்டும்.. சுருக்கமாகச் சொல்லப் போனால்.. கம்பெனி சரிந்து விடாமலிருக்க நான் அதைத் தாங்கிப் பிடிக்கும் சுமையினைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.."

இந்த இடத்தில் ஆதித்யன் தன் பேச்சை நிறுத்தி விட்டுக் குழுமியிருந்தோரின் முகத்தைப் பார்த்தான்..

அங்கே குண்டூசி விழுந்தால் கூடக் கேட்கும் அளவிற்கு நிசப்தம் நிலவியது... ஆதித்யன் தன் உரையைத் தொடர்ந்தான்...

"வாழ்க்கை எப்போதுமே நம் முன் இரு வழிகளைத் தான் காண்பிக்கும்.. ஒன்று ரிஸ்க் எடுக்கத் தேவையில்லாத மலர்ப் பாதை.. அதில் நடந்து போவது சுகம்தான்.. அது தற்காலிகமானது...

இரண்டாவது பாதையில் கற்களும்.. முட்களும் நிறைந்திருக்கும்.. கரடு முரடான பாதையாக இருக்கும்.. அதில் போவது சிரமம்தான்.. ஆனால் அந்தப் பயணத்தின் முடிவில் நமக்குக் காத்திருப்பது நிரந்தரமான சந்தோசம்.."

சிலரின் முகத்தில் குழப்பம் இருந்தது.. சிலரின் முகத்தில் திடம் தெரிந்தது.. அவர்கள் தமக்குள் கூடிப் பேசிக் கொண்டனர்..

"நான் இதுவரை என் அலுவலர்களுக்கு வாழ்வின் மீதான நம்பிக்கையும்.. நிம்மதியையும்.. சந்தோசத்தையும் மட்டுமே அளித்திருக்கிறேன்.. இனியும் உங்களுக்கு அதையே அளிக்க வேண்டுமென்றுதான் நினைக்கிறேன்.. எனவே நான் உங்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்.. உங்கள் மனதைக் கேளுங்கள்.. அது சொல்லும் பாதையில் நடந்து செல்லுங்கள்.."

அங்கிருந்தவர்கள் ஏறக்குறைய ஒரு முடிவை எடுத்து விட்டதை அவர்களுடைய முகம் காட்டியது.. தொடர்ந்து பேசினான் ஆதித்யன்...

"முழுமனதில்லாமல் எந்த ஒரு காரியத்தை நாம் செய்தாலும்.. அது நமக்கே நாம் கொடுமை இழைத்துக் கொள்வதைப் போல் ஆகிவிடும்.. இப்போது முழுமனதாக உங்கள் முடிவை எடுத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.. இப்போது இந்த மீட்டிங் முடிகிறது.. இன்னும் ஒரு மணி நேரத்தில் இந்த மீட்டிங் மீண்டும் துவங்கும்.. இந்த அறுபது நிமிடங்களில்.. ரமேஷிடம் சென்று வெளியேற விரும்புவர்கள்.. தங்கள் பெயரைக் குறிப்பிட்டுப் பதிவு செய்து கொண்டால்.. அவர்களுக்கான ஊதியத்துடன்.. இரண்டு மாத ஊதியம் சேர்த்து.. உடனே கொடுக்கப்படும். மீதமிருக்கும் அலுவலர்கள் அடுத்த மீட்டிங்கில் கலந்து கொள்ள வேண்டும்..."

ஆதித்யன் புயல் போல் அறையை விட்டு வெளியேறினான்..

# 14

அடுத்த ஒரு மணி நேரத்தில் மீண்டும் மீட்டிங் துவங்கியது.. அன்று என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருந்த ஆதித்யன்.. காலையிலேயே வங்கியில் மீதமிருந்த பணத்தை எடுத்து வரச் சொல்லி விட்டான்.. அதனால் விலக விரும்பிய ஊழியர்களுக்கு இரண்டு மாதகால ஊதியத்தைச் சேர்த்துக் கொடுத்து அவர்களின் ராஜினாமாக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ள ரமேஷால் முடிந்தது...

"என்ன ஆச்சு ரமேஷ்..."

"நம்ம கணக்கு தப்பலை ஆதித்யா.. நான் யார் யார் வெளியேற நினைத்திருக்கிறார்கள் என்று நினைத்தேனோ.. அவர்கள் எல்லோரும் உடனடியாக வெளியேறி விட்டனர்.."

"நோ பிராப்ளம்.. இரண்டு கைகள் மட்டுமே இல்லாமல்.. உன்னோடு சேர்த்து.. எனக்கு நான்கு கைகள் இருக்கின்றன.. நம் பின் நிற்பவர்கள்.. முழுமனதாய்த் தியாக உணர்வோடு நிற்க வேண்டும்.. அதுதான் எனக்கு முக்கியம்.. அப்படி ஒரு ஆள் கிடைத்தால் கூடப் போதும்.."

"ஒரு ஆள் இல்லை.. அறுபது பெர்ஸெண்டேஜ் ஸ்டாப் வெளியேற மறுத்து விட்டார்கள்..."

"இது எப்படிச் சாத்தியமானது ரமேஷ்..?"

"இந்தக் கம்பெனியின் மீது அவர்களுக்கிருக்கும் பற்று.. உன் மீது அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கை.. இவை இரண்டும் சேர்ந்து.. நம்முடன் சேர்ந்து நிற்க அவர்களைத் தூண்டியிருக்கிறது..."

"இவர்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்..?"

"உன் துயரத்திலிருந்து மீண்டு.. இந்தக் கம்பெனியைக் காப்பாற்றத் திரும்பி வந்திருக்கிறாயே.. அதுவே பெரிய கைம்மாறுதானே.. உன்னை நம்பி.. எங்களுக்குச் சம்பளம் வேண்டாம்.. அதிக வேலைப்பளு என்று நினைக்க

மாட்டோம்.. எதுவானாலும் உன்னுடன் பகிர்ந்து கொள்கிறோம் என்று தோள் கொடுக்க எத்தனை பேர் இருக்கிறார்கள் பார்த்தாயா..? இதை விட்டு நீ ஓட நினைத்தது நியாயமா..?"

"நியாய மில்லைதான்..."

'உனக்கென்று ஒரு ஆள் கூடவா இல்லாமல் போய் விடுவார்கள்..?' மனதில் நந்தினி எழுந்து நின்று கேட்டாள்.

'ஒரு ஆள் அல்ல.. பலர் இருக்கிறார்கள்.. எதுவும் வேண்டாம்.. உன் துயரத்தில் துணை நிற்கிறோம்.. உன் சுமையைப் பகிர்ந்து கொள்ளத் தோள் கொடுக்கிறோம் என்று... துணிந்து நிற்கிறார்கள்.. இதை அறிந்து கொள்ளும் வாய்ப்பை எனக்கு வழங்கியவள் நீ.. உன்னால் தான் நான் துயரிலிருந்து மீண்டேன்.. உன்னால்தான் போராடும் தைரியமும்.. துணிச்சலும் திரும்ப வரப் பெற்றேன்.. நீ எந்தன் வரம்.. நந்தினி.. நீயே என் வழிகாட்டி...'

"வா.. ஆதித்யா.. எல்லோரும் உனக்காக மீட்டிங் ஹாலில் காத்திருக்கிறார்கள்.. நீ கைப் பிடித்து அழைத்துச் செல்லும் பாதையில் உன் பின்னால் தயங்காமல் நடந்து வருவார்கள்..."

'அவள் என் கைப்பிடித்து நிறுத்தினாள் ரமேஷ்.. என் வாழ்வின் கடைசித் தருணத்திலிருந்து என்னைக் காப்பாற்றினாள்.. எனக்கு வழி காட்டி அழைத்துச் சென்றாள்.. வாழ்வதற்கான நம்பிக்கையைக் கொடுத்தாள்.. என்னை எனக்கு அடையாளம் காட்டினாள்.. இந்த வாழ்வின் மீதான நம்பிக்கையை ஊட்டினாள்.. அவளே எனக்குத் தாயானாள்.. தந்தையானாள்.. தோழியானாள்.. இவை அனைத்தையும் கடந்து அற்புதமான நேசத்தை எனக்குள் பதிவு செய்து ஒரு காதலியுமானாள்.. அவளில்லாமல் நான் இன்று இல்லை ரமேஷ்...'

ஆதித்யா எழுந்து கொண்டான்.. மீட்டிங் ஹாலை நோக்கிச் சென்றான்.. காத்திருந்தவர்களில் முதன்மையாய் ஷைலஜா அமர்ந்திருந்தாள்.. ஆதித்யன் மீண்டும் பேச ஆரம்பித்தான்...

"என் மீதான உங்களின் நம்பிக்கையை நிரூபித்து இங்கு அமர்ந்திருக்கிறீர்கள்.. வாழ்வின் மீதான என் நம்பிக்கை வலுப்படுகிறது.. என் அப்பா கண்ணதாசனின் பாடல்களைக் கேட்கச்சொல்லி என்னிடம் அடிக்கடி சொல்வார்.. அவருடைய பாடல்களில்..

ஒன்றை இப்போது நான் சொல்கிறேன், கேளுங்கள்..

"பானையிலே சோறிருந்தால்...

பூனைகளும் சொந்தமடா...

சோதனையைப் பங்கு வெச்சா...

சொந்தமில்லை.. பந்தமில்லை...""

கூட்டத்தினரின் கண்கள் பனித்திருந்தன.. ஆதித்யனின் குரலும் நெகிழ்ந்தது.. தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்..

"சொந்த.. பந்தங்களே.. சோதனையான நேரத்தில் துணை நிற்க மாட்டார்கள்.. நீங்களெல்லாம் யார்..? என் நிறுவனத்தில் பணி புரிய வந்த அலுவலர்கள்.. என் துயரத்தில் தோள் கொடுக்க வேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லை.. எனினும் நீங்கள் தோள் கொடுக்க முன் வந்திருக்கிறீர்கள்.. இந்த உலகில் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள ஆயிரம் பேர் முன் வருவார்கள்.. துன்பத்தில் தேள் கொடுக்க.. சுமையைப் பகிர்ந்து கொள்ள யார் வருவார்கள்..? நீங்கள் வந்திருக்கிறீர்கள்..! உங்களின் என் மீதான இந்த நம்பிக்கையை.. இந்த நிறுவனத்தின் மீதான பற்றை நீங்கள் எனக்கு உணர்த்தியிருக்கிறீர்கள்.. இதை நான் காப்பாற்றிக் காட்டுவேன்.. இந்த நொடியிலிருந்து நம் போராட்டம் ஆரம்பமாகிறது.. என் இனிய அலுவலர்களே.. இந்தச் சுமை அறுபது நாள்கள் வரை தான்.. அதற்கு மேல் உங்களைச் சுமையைச் சுமக்க நான் விட மாட்டேன்.. துணிந்து நிற்போம்.. வென்று காட்டுவோம்..."

ஆதித்யன் நிறையப் பேசினான்.. அங்கிருந்து ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் அருகே சென்று.. கரம் கூப்பித் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்...

அங்கே நிலைமை சீரானதும்.. தன் சூறாவளிச் சுற்றுப் பயணத்தை ஆரம்பித்தான்.. சென்ற இடங்களில் எல்லாம்.. சென்னையில் பேசியதையே பேசினான்.. இரண்டு கூட்டங்கள் போட்டான்.. இரண்டாம் கூட்டத்தில் எஞ்சியிருந்தவர்களிடம் அந்தந்த கிளையில் வேலைகளை ஒப்படைத்தான்...

# 15

அடுத்த இரண்டு மாதங்களும் அசுர உழைப்பு உழைத்தான் ஆதித்யன்... சம்பளம் கொடுக்க வேண்டிய தேவையைக் குறைத்துக் கொண்டதால்.. பணம் சம்பந்தமான கவலைகளில் இருந்து அவனால் உடனடியாக வெளியே வர முடிந்தது.. இரண்டு மாத காலத் தாமதத்தை ஊழியர்களே மணமுவந்து ஏற்றுக் கொண்டதால்.. அதைப் பற்றிய மன உளைச்சல் இல்லாமல் அவனால் வேலையில் மூழ்க முடிந்தது.. வெளியேறிய அலுவலர்களின் பொறுப்பை.. எஞ்சியிருந்தவர்கள் ஏற்றுக் கொண்டதால்.. தடையின்றி நிர்வாகமும்.. வேலைகளும் செயல்பட ஆரம்பித்தன...

முதலில் ஏற்றுக் கொண்டிருந்த பொருள்களை உடனடியாக அனுப்பி வைத்தான் ஆதித்யன்.. இறக்குமதி யான பொருள்களுக்குக் கையிருப்புப் பணத்தைக் கொண்டு உடனடியாகக் கணக்கை நேர் செய்தான்..

உழைப்பாளியின் வேர்வைக்கு என்றுமே பலன் கிடைக்காமல் போகாது.. அவன் சிந்தும் ஒவ்வொரு துளி வியர்வையும்.. ஒரு வைரத்துக்குச் சமானம்...

ஆதித்யன் சிந்திய வியர்வைத் துளிக்குக் கை மேல் பலன் கிடைத்தது.. அவன் ஏற்றுமதி செய்த பொருள் களுக்கான தொகை வந்ததும்.. முதலில்... அவனுடன் துணை நின்ற அலுவலர்களுக்கு இரண்டு மாத கால ஊதியத்துடன்.. ஒரு மாத கால ஊதியத்தொகையைச் சேர்த்து.. மூன்று மாத ஊதியமாகக் கொடுத்தான்.. அதிகப்படி வேலைக்காக.. அதற்கும் ஒரு தொகை வழங்கப்பட்டது.. துன்பப்பட்ட

காலத்தில் துணை நின்றவர்களுக்கு.. அவன் செய்ய வேண்டிய கைம்மாறை நிறைவாகச் செய்து முடித்தான்...

கடவுள் ஆதித்யனின் மீது தன் கருணைப் பார்வையைத் திருப்பினார்.. அவரது கையிலிருந்த மந்திரக் கோல் சுழன்றது.. ஆதித்யா குரூப் ஆஃப் கம்பெனிஸ்.. வரலாறு காணாத வகையில்.. அறுபதே நாள்களில் நிமிர்ந்து நின்று விட்டது...

புதிய வியாபார ஒப்பந்தங்கள் ஆரம்பமாகின.. உத்வேகத்துடன் தன் கம்பெனியின் வளர்ச்சிக்காக உழைக்க ஆரம்பித்தான் ஆதித்யன்.. புதிய பணியாளர்களை.. தன் எல்லா நிறுவனங்களிலும் மீண்டும் நியமித்தான்.. ஆனால் ஒன்றில் மட்டும் அவன் பிடிவாதமாக இருந்தான்...

அது.. அவனது கம்பெனியிலிருந்து இரண்டு மாத காலத்திற்கு முன்னால் விலகிப் போனவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளலாம் என்பது...

"ஆதித்யா.. அவர்கள் கஷ்டகாலத்தில் நம்மை விட்டு விலகிப் போனவர்கள்..."

"ஆனால்.. அவர்களை.. இந்த வேலையை விட்டு விட்டோமே என்று நாம் வருத்தப் பட வைத்திருக்கிறோம்.. ஐயோ.. நாம் மட்டும் ஆதித்யாவிலேயே இருந்திருந்தால்.. மற்றவர்களுக்குக் கிடைத்தது போல் இவ்வளவு அதிகத் தொகை நமக்கும் கிடைத்திருக்குமே.. என்று ஏங்க வைத்திருக்கிறோம்.. வேறு வேலை தேடிக் கொண்டாலும்.. அதை விட வைத்து.. மீண்டும் நம்மைத் தேடி வரவைத்திருக்கிறோம்.. இதுதான் நம் வெற்றி..."

எதிலும் வித்தியாசமான அணுகு முறையைக் காட்டும் ஆதித்யனின்.. இந்த அணுகுமுறை வெற்றியைத் தந்தது..

"ரமேஷ்.. நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும்.. அவர்கள் நம் பழைய ஸ்டாபாக இருந்தாலும்.. புதிய நியமனத்தில்தான் வேலையில் சேர்கிறார்கள்.. அதனால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்.. சம்பள இழப்பு.. சர்வீஸ் இழப்பு இரண்டையும் நினைத்துப் பார்.. இதுதான் அவர்களுக்கான தண்டனை..."

"யு ஆர் கரெக்ட்.. ஆதித்யா..."

"அத்தோடு கூடுதலான ஒரு பிளஸ் பாயிண்டும் இதில் உண்டு ரமேஷ்..."

"என்னப்பா..."

"நம் பழைய ஸ்டாபுக்கு வேலை தெரியும்.. அவர்களுக்கு நாம் டிரெயினிங் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.. புதிதாய் வருபவர்கள் வேலையில் தேர்ச்சி பெறக் குறைந்தது ஒரு வருசமாவது ஆகும்.. அது நமக்கு இழப்புத்தானே..."

ரமேஷ்.. ஆச்சரியத்துடன்.. ஆதித்யனை நோக்கினான்.. இவனுக்கு மட்டும் எப்படி இப்படியெல்லாம் தோன்றுகிறது...?

இதுதான் ஆதித்யன்.. 'எதை வைத்து.. யாரை.. எப்படி ஜெயிக்க வேண்டும் என்று நீ படித்ததில்லையா..?' என்று நந்தினி.. அன்று அவனைப் பார்த்துக் கேட்டாளே.. இதை.. இவனை வைத்து.. இப்படித்தான் முடிக்க வேண்டும்.. என்று பொய்யா மொழிப் புலவர்.. திருவள்ளுவர்.. தன் ஈரடிக் குறளில்... அன்றே சொல்லி வைத்தாரே.. அதைத்தான் செய்தான் ஆதித்யன்..

இந்தியா மட்டுமில்லாமல்.. உலகில் வெளி வரும் அனைத்து வியாபாரப் பத்திரிகைகளிலும்.. ஆதித்யனின் எழுச்சி பற்றிப் பக்கம் பக்கமாக எழுதினார்கள்..

'ஆத்யா குரூப் ஆஃப் கம்பெனி.. வீழ்ச்சியிலிருந்து மீண்டது...'

'ஆதித்யா குரூப் ஆஃப் கம்பெனிகளின் மகத்தான எழுச்சி..'

'ஆதித்யன் சாதித்தார்...'

எல்லாப் பத்திரிகைகளின் அட்டைப்படம்.. ஆதித்யாவைப் பற்றிய தலைப்புகளுடன் வெளிவந்தன.. பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்து ஓய்ந்து போனான் ஆதித்யன்..

மீண்டும் அவனது வெளிநாட்டுப் பயணங்கள் ஆரம்பமாகின.. இடைவிடாமல் வியாபார ஒப்பந்தங்களைப் போட்டுக் கொண்டே இருந்தான்.. மூச்சு விட

நேரமில்லாமல்.. அவன் வேலையில் மூழ்கி விட்டபோது.. பதினைந்து மாதங்கள் கழித்து ஒரு நண்பகல் வேளையில்.. மிக முக்கியமான பிஸினெஸ் லன்ச்சில்.. வெளி நாட்டு விருந்தினர்களுடன் ஆதித்யன் இருந்தபோது.. நந்தினியிடமிருந்து அவனுக்கு போன் கால் வந்தது..

# 16

சில நேரங்களில் வாழ்க்கையில் நமக்கு நிகழும் நிகழ்வுகள் நமது கட்டுப்பாட்டிற்குள் இருப்பதில்லை.. அறியாமல் எதையாவது இயல்பாய்ச் செய்வோம்..

ஆனால்.. அது நமக்கு மிகப் பெரிய பாதிப்பைப் பின்னாளில் உருவாக்கி விடும்...

ஆதித்யாவின் நிலையும் அப்படித்தான் ஆகிப் போனது.. இருபத்து நான்கு மணி நேரத்தில்.. எந்த நொடியிலும் அவன் நந்தினியை மறக்கவில்லை.. இரவு.. பகல் எல்லா நேரங்களிலும்.. அவள் அவனது நினைவினில் நின்றாள்.. ஆனால்.. அவளைப் பிரிந்து வந்த போது அவளிடம் அவளது செல்போன் நம்பரைக் கூட ஆதித்யன் வாங்கி வைத்துக் கொள்ளவில்லை.. அதன் பின்னாலும் அந்த நினைவு அவன் மனதில் தோன்றாமல் போனதுதான் விதியின் விளையாட்டு...

ஆதித்யனுக்கு நந்தினியின் செல்போன் நம்பர் தெரியாது.. ஆனால்.. நந்தினிக்கு ஆதித்யனின் செல் நம்பர் தெரியும்.. அவன் கொடைக்கானலில் அவளது வீட்டில் தங்கியிருந்த போது ஓர் முறை நந்தினி.. அவனது செல்போனை எடுத்து.. தன் போனுக்கு ரிங் விட்டாள்... அவனது செல்போன் நம்பர்.. அவளது போனில் பதிவாகி விட்டது.. அவளும் அதை ஸேவ் பண்ணி வைத்துக் கொண்டாள்.. அதையறியாத ஆதித்யன்... அப்போதிருந்த நிலையில் தன் போனிலிருந்த புது நம்பர் யாருடையது என்று யோசிக்கக்கூட மறந்து விட்டான்.. காலப் போக்கில் அவளது நம்பர்.. அவனது செல்போனிலிருந்து அழிந்து விட்டது..

பதினைந்து மாதங்கள் கடந்த பின்னும்.. ஒரு நாள் தன் வேலைகளையெல்லாம் பின்னுக்குத் தள்ளி வைத்து விட்டுக் கொடைக்கானல் போய் வர வேண்டும் என்று அவன் எவ்வளவோ முயன்றும்.. கடைசி நொடியில் அவனது பயணம் கேன்ஸல் ஆனது...

"ஆதித்யா... இன்றைக்குக் பாரிஸில் இருந்து நம் இப்பார்டன்ட் கிளையன்ட்ஸ் வந்திருக்கிறாங்க.. புது பிஸினெஸ் கான்ட்ராக்ட்.. நீ பிஸினெஸ் லன்ச்சில் பேசி முடித்து விட்டால்.. அக்ரிமென்டில் சைன் பண்ணி விடலாம்.."

"ஆதித்யா.. இன்றைக்குக் கொரியாவிலிருந்து வந்திருக்கிறாங்க... அங்கே நாம் இன்னும் கால் ஊன்ற வில்லை.. நீ இதை அவாய்ட் பண்ணிவிடக் கூடாது.."

"ஆதித்யா.. கொச்சியில் நம் சரக்கு இறங்குவதில் ஏதோ பிரச்சனை.. என்னால் டீல் பண்ண முடியவில்லை.. நீ கொஞ்சம் நேரே போய் வந்தால் பெட்டர்..."

ஆதித்யனை நிறுத்துவதற்கு ரமேஷிடம் ஆயிரம் காரணங்கள் இருந்தன.. அவனது அழைப்பை மறுத்து விட்டுக் கொடைக்கானல் போக முடியாத ஆதித்யன்.. 'திரு நாளைப் போவார்' போல,

'நாளைக்குக் கட்டாயம் கொடைக்கானலுக்குப் போக வேண்டும்..' என்று நினைத்துக் கொண்டே.. வேலைகளைப் பார்க்க ஆரம்பிப்பான்...

இதுவும் காலத்தின் கட்டாயம்தான்.. ஒரு கவிதையில்

"நாளை நமக்களிப்பதெல்லாம்

நம்பிக்கை ஒன்று மட்டும்...

நாட்காட்டி கிழிபடுகையில்...

நாளை மட்டும்.. எஞ்சி நிற்கும்..."

என்று கூறியுள்ளது போல.. 'நாளைக்குப் போகலாம்..' என்ற எண்ணம்.. குதிரையின் முன்னால் கட்டி விடப்பட்டிருக்கும்.. கொள்ளுப் பொட்டலத்தைப் போல ஆதித்யனின் முன்னால் நிற்க.. அவனும்.. அந்தக் குதிரையைப் போல.. நிற்காமல் ஓட ஆரம்பித்தான்...

குதிரைக்கும் கொள்ளுக் கிடைக்கவில்லை.. ஆதித்யனுக்கும் கொடைக்கானல் போக முடியவில்லை..

இருவருமே.. ஓடப் பணிக்கப்பட்டவர்களாய் வாழ்க்கைப் பாதையில் ஓடிக் கொண்டே இருந்தார்கள்..

அன்றும் அது போல.. மிக முக்கியமான பிஸினெஸ் லன்ச்சில் வந்திருந்த வெளிநாட்டினரை உபசரித்து.. ஆதித்யன் பேசிக் கொண்டிருந்த போது.. அவனது செல்போன் மணியொலித்தது..

எடுத்துப் பார்த்த ஆதித்யன்.. அது நந்தினியின் செல்போன் நம்பர் என்று தெரியாதவனாய் அதைத் துண்டித்தான்.. மீண்டும் மணியொலிக்க.. மீண்டும் துண்டித்தான்.. இடைவிடாது மணி ஒலிக்க ஆரம்பிக்க.. ஆதித்யன் அந்தத் தவறைச் செய்தான்...

ஒரு முறை.. ஒரேயொரு முறை அவன்.. அந்த அழைப்பு மணியை அலட்சியப் படுத்தாமல் எடுத்துப் பேசியிருந்தால்.. அது அவனது நந்தினியின் அழைப்பு என்பதை அறிந்து கொண்டிருப்பான்.. ஆனால்.. அவன் அதைச் செய்யவில்லை...

எதிரேயிருந்தவர்களிடம் பேசிக் கொண்டிருந்த வியாபார சம்பந்தமான பேச்சு ஒன்றே அவனுக்கு முக்கியமாய்ப் போய் விட்டது...

ஆதித்யன்.. செல்போனை அணைத்து வைத்து விட்டான்.. மறுமுனையில்.. மிக.. மிக.. இக்கட்டான நிலையிலிருந்த நந்தினி இடிந்து போய்விட்டாள்..

வாழ்க்கையில் தான் தோற்று விடப் போவதை அறியாதவனாய்.. அந்த வியாபார ஒப்பந்தத்தில் வெற்றிகரமாய்க் கையெழுத்துப் போட்டான் ஆதித்யன்..

அதற்குப் பின்னராவது.. போனில் அத்தனை முறை அழைத்த நபர் யார் என்று ஆராயாமல்.. வேறு வேலைகளில் மூழ்கி விட்டான்..

அன்று இரவு.. அமைதியுடன் தன் வீட்டில் பாதுகாப்பாகப் படுத்து உறங்க ஆரம்பித்த ஆதித்யனுக்குத் தெரியாது.. நந்தினி அதே இரவில்.. அநாதை போல்.. கையில்

பெட்டியோடு.. தன் வீட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறாள் என்பது...

எல்லாமும் முடிந்து விட்டது என்ற நிலையில் உயிரை மாய்த்துக் கொள்ளப் போன ஆதித்யனின் கைப்பற்றி நிறுத்தி.. எதுவுமே முடியவில்லை.. இனிதான்.. ஆரம்பிக்கப் போகிறது என்று சொல்லி வாழ வழி காட்டிய நந்தினி.. எல்லாமும் முடிந்து விட்ட வெறுமை உணர்வுடன் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றாள்..

# 17

நந்தினி...! ஆதித்யனின் உயிரில் நிறைந்தவள்.. அவனது அன்பிற்கு உரிய ஒரே பெண்.. அவனது வாழ்வின் அனைத்துமாக அவன் நினைப்பவள்... அவள் வாழ்வின் நாதத்தின் ஜீவஸ்ருதி...

அவள் என்ன நிலையில் இருக்கிறாள் என்பதை அறிய ஆதித்யன் முயற்சிக்காமல் போய் விட்டதற்கான முதல் காரணம்... நந்தினியின் அன்பு மீது இருந்த அவனது தன்னம்பிக்கை...

அன்று.. அவனுக்குப் பிரியா விடைகொடுத்த தருணத்தில் அவளது கண்களில் தெரிந்த தவிப்பை.. அவன் ஆயுள் உள்ள வரைக்கும் மறக்க மாட்டான்.. மறக்கவும் இயலாது..

அவன் போராடிச் சோர்ந்த தருணங்களில்.. அந்த நீர் நிரம்பிய விழிகள் அவன் முன்னே தோன்றும்.. அவன் போராட உந்து சக்தியைக் கொடுக்கும்...

அவன் மீதான அவளது காதலில் அவனுக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்தது.. நந்தினி.. தன்கைப் பொருள்.. தன்னை விட்டு அவள் எங்கேயும் போய் விட மாட்டாள் என்று அசைக்க முடியாத நம்பிக்கையைத் தன் ஆழ்மனதில் அவன் கொண்டிருந்தான்..

இரண்டாவது காரணம்.. அவள் அவளுடைய பெற்றோருடன் பாதுகாப்பாய் இருக்கிறாள் என்பது...

ஆதித்யன்.. ஒரு இடத்தில் நிற்க முடியாமல் பறந்து கொண்டிருந்தாலும்.. அவனது உள் மனதில் நந்தினியின் வீடும்... அவளுடைய பெற்றோரின் அன்பான அரவணைப்பும்.. அவளது சித்தப்பா குடும்பத்தாருடன் ஒற்றுமையாய் ஒரே வீட்டில் அவர்கள் வாழும் பாங்கும்.. நிலை கொண்டிருந்தது...

நந்தினியைப் பிரிந்து வரும்.. அந்தக் கடைசி நொடிகளில்.. அவன் அவளது கண்களில் தெரிந்த காதலை உணர்ந்தான்.. தன் விழிகளிலும்.. அந்தக் காதலை உணர்த்தி நின்றான்...

ஆனால்.. இருவருமே.. ஒருவரிடம்.. ஒருவர் காதலைச் சொல்லிக் கொள்ளவில்லை.. சொல்லிக் கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை...

"பாதையிலே வெகுதூரம்...

பயணம் போகின்ற நேரம்...

காதலை யார் மனம் நாடும்..."

கண்ணதாசனின் இந்த வரிகள்தான் எவ்வளவு உண்மையானவை.. ஆதித்யன் போர்க்களத்திற்குப் போக வேண்டியவனாய் இருந்தான்.. நந்தினியும் அவனைப் போர்க்களத்திற்கு அனுப்புகிறவளாகத்தான் இருந்தாள்..

இதில்... யாரிடம்... யார் காதல் சொல்ல முடியும்..? இளைப்பாற நிழல் கிடைத்தும்.. இளைப்பாற நேரம் இல்லாமல் ஓட வேண்டிய நேரத்தில் ஆதித்யன் நந்தினியின் காதலை உணர்ந்தான்..

சரி வர அறியாத ஒரு மனிதனின்.. வியாபாரச் சரித்திரத்தில் மனதைச் செலுத்தி.. நேரில் அவனைக் கண்டதும்.. நெஞ்சினில் அவனைக் குடி வைத்து ஆராதிக்கத் தொடங்கிவிட்ட நந்தினியால்.. அவனிருக்கும் நிலையில் எப்படிக் காதலைச் சொல்ல முடியும்...?

வாழ்க்கையில் எந்த நேரம்.. எந்தத் திருப்பத்தில் எவரைச் சந்திப்போம் என்று யாருக்குமே தெரியாது...

மனம் உடைந்து வாழ்வை முடித்துக் கொள்ள நினைத்துக் கொடைக்கானல் வந்த ஆதித்யன்.. அங்கே நந்தினி என்ற அழகுத் தேவதையைச் சந்தித்தான்..

அவள் அவனுக்குச் சில நேரம் தாயாக இருந்தாள்.. சில நேரம் ஆசானாக இருந்தாள்.. அவள் தூண்டி விட்ட அப்பொழுதில்.. அவன் வாழ்க்கையைப் பற்றி.. அதில் வரும் இன்னல்களை ஜெயிப்பதைப் பற்றிச் சிந்தித்தான்..

அவளைச் சந்தித்த வேளையிலிருந்து சிந்திக்க ஆரம்பித்தவன்.. அவள் கண்கள் சிந்திய கண்ணீர்த் திவலைகளை நினைத்துப் பார்க்கவும் நேரமில்லாமல் தன் பிரச்சனைகளில் மூழ்கி விட்டான்..

நினைக்கத் தெரிந்த மனதால் மறக்க முடியாது.. பழகத் தெரிந்த உயிருக்கு விலகத் தெரியாது...

ஆதித்யன் பெண் வாசனை அறியாதவன்.. பெண்களின் மத்தியில் அவனது வேலையிருந்தும்.. எந்தப் பெண்ணின் பின்பும் மனதைப் போக விடாதவன்.. அவன் நினைத்த ஒரே பெண் நந்தினிதான்.. அவன் பழகிய ஒருத்தியும் அவளேதான்..

எந்நேரமும் அவன் மனதில் அவளைக் கொண்டாடினான்.. அதை அவளறியச் சொல்ல.. நேரில் செல்ல.. நேரம் கிடைக்காமல் திண்டாடினான்.. அவனுக்குத் தெரியாது.. அவனுடைய வாழ்க்கை முறை வேறு.. மத்திய வர்க்கத்தினரின் வாழ்க்கை முறை வேறு என்பது...

பெண்கள் இருபதாம் வயதிலிருந்தே அவர்கள் கல்யாணச் சந்தையில் நிறுத்தப்பட ஆரம்பித்து விடுவார்கள்.. என்பதும் அவனுக்குத் தெரியாது.. சரியான தகுதியுடைய மாப்பிள்ளை அமைந்து விட்டால்.. அவளை மணக்கச் சொல்லி.. வீட்டில் மறைமுகமாய் வற்புறுத்துவார்கள் என்பதும் அவனுக்குத் தெரியாது அப்படியொரு நிலைமை வந்தால்.. எந்த வித வாக்குறுதியும் கொடுக்காமல் வந்து விட்ட தனக்காக.. எந்தக் காரணத்தைச் சொல்லி நந்தினியால் காத்திருக்க முடியும் என்று அவளின் இக்கட்டான நிலைமையும் அவனுக்குத் தெரியாது..

அவனுக்குத் தெரிந்ததெல்லாம்.. ஒரே ஒரு கண்ண தாசனின் பாடல் தான்..

"சந்தித்த வேளையில்...

சிந்திக்கவே இல்லை...

தந்து விட்டேன் என்னை..."

என்று அவளைச் சந்தித்தானோ.. அந்த நாளை அவன் கொண்டாட ஆரம்பித்திருந்தான்.. ஆனால் நந்தினி...?

# 18

தடக்.. தடக்கென்று ரயில் சீரான சப்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது.. ஜன்னலில் ஓரமாக அமர்ந்து கடந்து போகும் மரங்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த நந்தினியின் கண்களில் ஜீவன் தொலைந்து போயிருந்தது.. வெறுமையான மனத்துடன் ஜன்னலில் கம்பியில் முகம் புதைத்துக் கொண்டாள்..

அவளுக்கு அழ வேண்டும் போல இருந்தது.. ஆனால் சுற்றி இவ்வளவு மனிதர்கள் இருக்கும் போது அழ முடியாது..

இது ஒரு கொடுமை.. அழத் தோன்றும் போது அழ முடியாதது.. நந்தினி பெருமூச்சு விட்டாள்..

எவன் அவள் சாய்ந்து கொள்ளத் தோள் கொடுப்பான் என்று நம்பியிருந்தாளோ.. எவனை அவளது வழித் துணையாக மனதில் வரித்திருந்தாளோ.. அவன் அவளது போனைத் துண்டித்து விட்டான்.. அவளால் அந்த வேதனையைத் தாங்க முடியவில்லை..

"ஏம்மா பொண்ணு... அப்படி ஜன்னலில் முகத்தை வைச்சுக்கிட்டு கொட்டக் கொட்ட முழிக்காதே.. கரித்தூள் கண்ணில விழுந்துடும்..."

எதிர் வரிசையில் அமர்ந்திருந்த வயதான பாட்டி ஒருத்தி கரிசனமாகக் கூறினாள்.. நந்தினி தலையை உள்ளுக்குள்

இழுத்துக் கொண்டாள்..

"எந்த ஊருக்கும்மா போகிறே..." பாட்டி விசாரித்தாள்.

மௌனமாகப் புன்னகைத்தாள் நந்தினி..

"தனியாகவா போகிற..?"

அதற்கும் அதே சிரிப்பைச் சிரித்த நந்தினியை அந்தப் பாட்டிக்குப் பிடித்து விட்டது போல.. அருகில் அமர்ந்திருந்த அவளுடைய மருமகளிடம் சிலாகிப்பாய்க் கூறினாள் அந்தப் பாட்டி...

"இந்தப் பொண்ணுதான் எவ்வளவு சமர்த்தா இருக்குது.. இதைப் பத்தி எந்த விவரமும் சொல்லாமல் சிரிச்சே சமாளிக்குதே.. நம்ம வீட்டிலயும் ஒரு சின்னக்குட்டி இருக்கே.. யாராவது வாயைத் திறந்து உன் பெயர் என்னன்னு கேட்டு விட்டால் போதும்.. கலகலன்னு.. பூர்வோத்திரம் பூராத்தையும் உளறிக் கொட்டிடும்.. இதைப் பார்த்தாவது உன் பெண்ணைக் கற்றுக் கொள்ளச் சொல்லு அகிலாண்டம்.."

அந்த அகிலாண்டம் மாமியாரை.. எரிச்சலுடன் பார்த்த அதே கண்களால் நந்தினியையும் முறைத்துப் பார்த்தாள்.. பதிலுக்கு வெள்ளையாய்ச் சிரித்த நந்தினியிடம் அவளால் துவேசம் பாராட்ட முடியவில்லை...

"உன் பெயர் என்னம்மா...?" என்று கேட்டாள்..

"நந்தினி..."

"பரவாயில்லையே.. நான் பேசினால் பதில் சொல்லலை.. நீ கேட்டவுடன் பெயரைச் சொல்கிறாளே.."

"அதைக் கேட்கிறவங்க கேட்கனும்..."

ஏதேனும் ஒரு சிறிய சந்து கிடைத்தாலும்.. அதனுள்ளே புகுந்து.. எதிராளியைத் தாக்கிடும் தன்மை எப்படித்தான்.. மாமியார்களுக்கும்.. மருமகள்களுக்கும் மட்டும் தனித்து வாய்க்கிறதோ..

"அதைச் சொல்லு.. கண்ணுக்குத் தெரியாத பிரம்பை வைத்திருக்கிற உன் போல ஆளுகிட்டத்தானே யாரா இருந்தாலும் பயந்து கிட்டே பதில் சொல்லுவாங்க..

என்னைப் போல அப்பிராணிக கேட்டால் எப்படி பதில் சொல்லுவாங்க..."

சொற்போரில் மருமகளுக்குத் தான் சளைத்தவ ளில்லை என்று நிரூபித்தாள் அந்த மாமியார்...

பழைய நந்தினியாக இருந்திருந்தால் அந்தச் சண்டையை ரசித்துச் சிரித்திருப்பாள் நந்தினி...

'நீங்க இப்படிச் சொல்லுங்க.. நீங்க அப்படிச் சொல்லுங்க..' என்று இருவரையும் மாறி மாறித் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்திருப்பாள்..

இன்று இருந்த நந்தினிக்கு இதிலெல்லாம் மனம் ஈடுபடவே இல்லை.. அவள் சிலை போல் அமர்ந்து வெளியே வெறித்துக் கொண்டிருந்தாள்..

"நந்தினி..."

அகிலாண்டம் பலமாக அழைக்கவும்.. உடல் தூக்கிப் போட அவளைப் பார்த்தாள் நந்தினி..

"ஏம்மா உன் முன்னால்தானே நான் உட்கார்ந்திருக்கிறேன்.. உன்னை எத்தனை தரம்தான் கூப்பிடுவது..? எந்த உலகத்தில் இருக்கிற...?"

"என்னங்க.."

"இதைச் சாப்பிடு.."

ஒரு தட்டில் புளியோதரையை வைத்துக் கொடுத்தாள் அவள்..

"இல்லைங்க, வேண்டாம்.."

"ஏம்மா.. மயக்க மருந்து பிஸ்கெட் மாதிரி.. இது மயக்க மருந்துப் புளியோதரையோன்னு பயந்துட்டியா.. இங்கே பாரு.. நாங்க எல்லாரும் இந்தப் பாத்திரத்தில் இருக்கிறதைத்தான் எடுத்து வைத்துச் சாப்பிட்டுக் கிட்டிருந்கோம்.."

"சேச்சே.. அப்படியெல்லாம் நினைக்கலிங்க..."

"பின்னே ஏன் வேணாம்கிற..."

"இல்லைங்க... அது வந்து..."

"இதை உனக்காகன்னு நினைத்து ஏன் சாப்பிடுகிற.. உன்னைப் பார்க்க வைத்துக்கிட்டு சாப்பிட்டால் எங்களுக்கு வயிற்றை வலிக்காதா..? அதற்காக.. எங்களுக்காகன்னு நினைத்துக்கிட்டு சாப்பிடேன்..."

'முதல் மரியாதை' திரைப்படத்தில் சிவாஜி கணேசனை மீன் குழம்பும் சோறும் சாப்பிட வைக்க.. ராதா கையாண்ட டெக்னிக்கை.. தானும் கையாண்டாள் அகிலாண்டம்..

நந்தினிக்கா அது தெரியாது..? இதழ் பிரியாமல் சிரிக்க முயன்றபடி.. தட்டை வாங்கிக் கொண்டாள்..

"ஏம்மா கொறிக்கறே.. நல்லாச் சாப்பிடு.."

"ம்ம்.."

"இன்னும் கொஞ்சம் போடவா..?"

"நோ தேங்க்ஸ் ஆன்ட்டி.. இதுவே அதிகம்..."

"நீ இப்படிச் சொல்லக் கூடாதே.. எனக்காகச் சாப்பிட வில்லை.. உங்களுக்கு வயிற்றை வலிக்கக் கூடாதுன்னு தான் சாப்பிடுகிறேன்னு சொல்லி பாத்திரத்தையே காலி பண்ண வேண்டாமா...?"

அகிலாண்டம் வேடிக்கையாகச் சொல்ல.. அவளது மாமியார் முகவாயைத் தோள்ப் பட்டையில் இடித்துக் கொண்டாள்..

"இதுக்குத்தான் சினிமா அதிகம் பார்க்காதேன்னு அடிச்சுக்கிறது..." இது எதுவுமே பாதிக்கப்படாதவளாய் நந்தினி.. தட்டை வெறித்துக் கொண்டிருந்தாள்..

# 19

முக்கடலும் சங்கமிக்கும் கன்யாகுமரி... அலைகள் கொஞ்சும் கடலில் கம்பீரமாய் எழுந்து நிற்கும் வான் புகழ் கொண்ட வள்ளுவரின் சிலையிருக்கும் நகரம்...

'என்னிடம் துடிப்பான இளைஞர்கள் சிலரைத் தாருங்கள்.. நான் இந்தியாவின் தலையெழுத்தை மாற்றிக் காட்டுகிறேன்...' என்று சொன்ன இந்தியாவின் நவயுகச்

சிற்பி விவேகானந்தர் தவமிருந்த விவேகானந்தர் பாறையிருக்கும்... கன்னியாகுமரி...

கல்யாணக் கோலத்தில்... காத்திருந்து.. கல்யாணம் நின்று போன கோபத்தில் அசுரனை வதம் செய்து விட்டு.. அலை கொஞ்சும் கடலருகே கோவில் கொண்டு... கன்யாகுமரி அம்மன் குடியிருக்கும்... கன்னியாகுமரி...

அந்தக் கன்யாகுமரியின் ரயில் நிலையத்தில்.. ரயிலை விட்டு இறங்கினாள் நந்தினி.. ரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தாள்...

"ஆட்டோ.."

"எங்கேம்மா போகணும்..."

"வீணஸ் எக்ஸ்போர்ட் கம்பெனி..."

ஆட்டோ சாலையில் விரைந்தது.. நந்தினி சோர்வுடன் ஆட்டோவில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.. வாரப்படாத கலைந்த முன்பக்க முடி... காற்றில் பறக்க.. அதை ஒதுக்கி விட்டுக் கொண்டாள்.. இதே கன்யாகுமரிக்கு.. அவளது யுனிவர்சிட்டி தோழிகளுடன் சுற்றுலாவாக வந்திருக்கிறாள்.. இப்படித் தனியே.. தன்னந்தனியே என்று வந்ததில்லை...

"இதுதான் நீங்க சொன்ன இடம்மா..."

ஆட்டோவுக்கான பணத்தைச் கொடுத்து விட்டு இறங்கி அந்தக் கட்டடத்தைப் பார்த்தாள் நந்தினி..

கடற்கரைச் சாலையில் பிரம்மாண்டமாக எழுந்து நின்றது அந்தக் கட்டடம்.. அதன் பின்னால் அலைகடல் தெரிந்தது...

அந்தக் கட்டடத்தின் படிகளில் மெல்ல ஏறினாள் அவள்.. வரவேற்பில் இருந்த பெண் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.. கசங்கிய சுடிதாருடன்.. கலைந்த தலைமுடியுடன்.. பயணச் சோர்வுடன் ஒரு பெண்ணை.. காலையிலேயே பார்க்க நேரிடும் என்று அவள் எதிர் பார்க்கவில்லை என்பது அவளது விழிகளில் அப்பட்டமாகத் தெரிந்தது..

"யெஸ்..."

"ஐ ஆம் நந்தினி.. கமிங்.. ப்ரம் கொடைக்கானல்.."

"வாட் டு யு வான்ட்..?"

"நான் இங்கே வேலை செய்ய செலக்ட் ஆகியிருக்கிறேன்.."

"ப்ளீஸ்.. ஒன் மினிட்..."

அவள் தன் முன்னால் இருந்த போனை எடுத்துப் பேசினாள்..

"மல்லிகா பேசுகிறேன் சார்.. இங்கே.. நந்தினின்னு நியு அப்பாயிண்மென்ட் ஒருத்தங்க வந்திருக்கிறாங்க.."

"......"

"ஓகே சார்..."

மல்லிகா போனை வைத்து விட்டு.. நிமிர்ந்து நந்தினியைப் பார்த்தாள்..

"எம்டி வரச் சொல்கிறார்... போங்க.."

"எப்படிப் போக வேண்டும்..."

"நேராகப் போய் வலப் புறமாய்த் திரும்பி நடந்தால் அவருடைய கேபின் வந்து விடும்.."

நந்தினி அவள் சொன்னது போலச் சென்றாள்...

சௌம்யன்.. எம்பிஏ.. மேனேஜிங் டைரக்டர்.. என்று போர்டு மாட்டப்பட்டிருந்த கதவை லேசாக ஒரு விரலால் தட்டினாள்...

"யெஸ்... கமின்..."

சுழல் நாற்காலியில் கம்பீரமாய் டை கட்டி அமர்ந்திருந்த சௌம்யன் அவளது தோற்றத்தைக் கண்டு திகைத்துப் போனான்.. அவளது தோளில் மாட்டியிருந்த மிகப் பெரிய தோள்பை அவனது கவனத்தை ஈர்த்தது.. அவனது புருவங்கள் மேலேறின...

அதே சமயம்.. கையில் ஏதோ பைலுடன்...

"எக்ஸ்க்யூஸ் மி சார்.." என்றபடி உள்ளே வந்த பெண்ணும் அவளைப் பார்த்து விட்டுப் புருவம் தூக்கினாள்..

"சார்.. இந்த பைலில் அர்ஜென்டா ஒரு சைன் வேண்டும்..."

பைலை அவனிடம் நீட்டியவள் வியப்புடன் நந்தினியையே பார்த்துக் கொண்டிருக்க.. பைலில் கையெழுத்திட்டு முடித்த சௌம்யன் பைலை அவளிடம் நீட்டினான்.. அவளோ அதை

வாங்க மறந்து நந்தினியையே பார்த்துக் கொண்டிருந்தாள்..

"ஆஷா..."

"சார்..."

"பைல்..."

"ஓ.. ஐ.. ஆம் ஸாரி..."

"ம்ம்.. இவங்க பெயர் நந்தினி.. எம்சிஏ பண்ணியிருக்காங்க.. நம் ஆபிஸில்.. இன்றையிலிருந்து ஜாயின் பண்ணுகிறாங்க.."

"ஓ..."

"இந்த விவரம் போதுமா ஆஷா...?"

சௌம்யனின் கேள்வியில் அந்த ஆஷாவின் முகத்தில் அசடு வழிந்தது.. அங்கிருந்து அவள் நகர முற்படுகையில்.. சௌம்யன் நந்தினியைப் பார்த்து..

"எங்கே தங்கியிருக்கீங்க...?" என்று வினவினான்..

"இன்னும் முடிவு பண்ணவில்லை சார்.. டிரெயினிலிருந்து இறங்கியதும்.. ஒரு ஆட்டோவைப் பிடித்து நேரே இங்கே வந்து விட்டேன்..."

"ஏன்.. உங்களுடன் யாரும் வரவில்லையா...?"

"இல்லை சார்.. நான் தனியாகத்தான் வந்தேன்.. இனிமேல்தான் ஏதேனும் ஒரு வீடு பிடித்துத் தங்க வேண்டும்..."

சொன்னவளை யோசனையுடன் சௌம்யன் பார்க்க.. ஆஷா அறையை விட்டு வெளியேறாமல் அங்கேயே நின்று விட்டாள்..

அவளுக்கு இது வினோதமாக இருந்தது.. டிரெயினில் இருந்து இறங்கி.. நேரே வேலை செய்யும் இடத்திற்கு ஒரு பெண் வருவதை.. இன்றுதான் அவள் முதல் முதலாய்ப் பார்க்கிறாள்..

அது எப்படி... குளித்து.. டிரெஸ் பண்ணி.. மேக்கப் போட்டு.. அழகாய் ஒரு ஹேண்ட் பேகைத் தோளில் போட்டுக் கொண்டு வராமல் இப்படி.. கையில் பெரிய டிராவல் பேக்குடன்.. கலைந்த முடி.. கசங்கிய டிரஸ் என்று ஆபீஸ் வர முடியும்...?

ஆஷாவிற்கு இது பெரிய சந்தேகமாக இருந்தது.. அவள் திறந்த வாயை மூடாமல்... கண்களை அகல விரித்துக் கொண்டு நந்தினியை வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டாள்...

சௌம்யனுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது... வேலைக்கு ஆள் தேவையென்று அவன் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்திருந்தான்.. வந்திருந்த விண்ணப்பங்களில் சிலவற்றைக் தேர்ந்தெடுத்து நேர்முகத் தேர்வு நடத்தினான்.. அன்றும்.. நந்தினி இதே போல் வந்து நின்றதாகத்தான் அவனுக்கு நினைவு.. கூட யாரும் வரவில்லையென்று நினைத்தான்.. என்ன ஒரு வித்தியாசம்.. அன்று சிறிய கைப்பை மட்டும் வைத்திருந்தாள்.. இன்று மிகப் பெரிய தோள்ப் பையைத் தோளில் மாட்டியிருக்கிறாள்...

நேர்முகத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் வாங்கி யிருந்தாள்.. யுனிவர்ஸிட்டி கோல்டு மெடல் என்று சான்றிதழ்கள் சொல்லின.. அவளைத் தேர்ந்தெடுத்து நியமன உத்தரவை அனுப்பி விட்டான்..

இன்று பார்த்தால்.. இப்படி வந்து நிற்கிறாள்.. என்ன செய்வது என்ற யோசனையுடன்.. அவளைப் பார்த்தான்..

"இப் யு டோன்ட் மைன்ட்.. வீடு கிடைக்கும்வரை ஆபிஸின் கெஸ்ட் ஹவுஸில் தங்கிக் கொள்கிறீர்களா...?"

நந்தினி தயங்கினாள்.. அதைக் கண்ட ஆஷா வாய் திறந்தாள்..

"சார்.. எங்க வீட்டில் மாடி போர்சன் காலியாகத்தான் இருக்கு.. இவங்க வேண்டுமானால்... எங்க வீட்டில் குடியிருக்கலாமே..."

சௌம்யனின் முகத்தில் சங்கடம் விலகியது.. ஆஷாவை மெச்சுதலாய்ப் பார்த்தான்.. அவளுக்குச் சந்தோசம்

தாங்கவில்லை..

'இப்படி ஒரு பார்வை பார்த்தால்.. என்ன வேண்டுமானாலும் செய்யலாமே...'

"வாங்க நந்தினி..."

"எங்கே..."

"எங்கள் வீட்டிற்குத்தான்.. நீங்கள் குளித்து டிரஸ் பண்ணிக் கொண்டு வர வேண்டாமா...?"

"ஆபிஸ்..?"

"அது ஒன் அவர் லேட்டாய் வந்து நீங்க ஜாயின் பண்ணிக்கலாம்..."

"நீங்கள்.."

"எம்டி எனக்கும் பர்மிசன் கொடுப்பார்.. இல்லையா சார்.."

சௌம்யன் அவளை ரசித்துச் சிரித்தான்.. நந்தினிக்கு ஏனோ ஆதித்யன் அவளை ரசித்துச் சிரித்தது நினைவுக்கு வந்தது.. மனம் வலித்தது..

அவள் ஆஷாவின் பின்னால் சென்றாள்.. சௌம்யன்,

"ஒன் மினிட் ஆஷா.." என்றாள்..

"சார்..."

"அவங்ககிட்ட பணம் இருக்குமோ என்னவோ.. உங்கள் வீட்டு அட்வான்ஸிற்கு.. அப்புறம் அவங்க செலவுக்கு.. ம்ம்.. இதுக்கெல்லாம் என்ன பண்ணுவாங்க..?"

அவனின் கவலையைக் கண்டு நந்தினி நன்றியுடன் புன்னகைத்தாள்.. இயந்திரமாய் மனிதர்கள் இயங்கும் இந்த உலகில் இப்படியும் ஒரு ஈர மனம் கொண்ட மனிதனா...?

"என்னிடம் பணம் இருக்கிறது சார்..."

"போதுமான அளவு இருக்கிறதா...?"

"ம்ம்.. தேவைக்கு அதிகமாகவே இருக்கிறது..."

"ஓகே.."

அவன் தலையசைக்கவும்.. அவர்கள் இருவரும் வெளியே வந்தனர்.. அலுவலகத்தை விட்டு வெளியே வந்ததும்..

ஆஷா பேச ஆரம்பித்தாள்..

"என் பெயர் ஆஷா.."

"ம்ம்.. தெரியும்..."

"எப்படித் தெரியும்...?"

"இப்போ... சார் சொன்னாரே..."

"எங்கள் வீட்டில் நான்தான் கடைக்குட்டி..."

"ஓஹோ.. உங்களுக்கு மூத்த அண்ணன்.. அக்கா என்று யாரும் இருக்கிறாங்களா...?"

"இல்லை.."

"அப்புறம் கடைக்குட்டின்னீங்களே.."

"தாத்தா.. பாட்டி... அப்பா.. அம்மா.. இத்தனை பெரியவங்க இருக்கிற வீட்டில்.. வயசில் சின்னவள் நான்தான்.. அதான்.. கடைக்குட்டின்னேன்.."

நந்தினி ஆஷாவைப் பார்த்தாள்.. அழகாகப் பளிச் சென்று இருந்தாள்.. ஒவ்வொரு பேச்சிற்கும்.. கண்களை மூடித் திறந்து சிரித்தாள்.. அவளது சிரிப்பு.. எதிராளியை உடனே தொற்றிக் கொள்ளும் சிரிப்பாய்.. என்னுடன் சேர்ந்து நீயும் சிரியேன்.. என்று அழைக்கிற சிரிப்பாய் இருந்தது..

ஆனால் நந்தினியால்தான் அது முடியவில்லை.. அமைதியாய் வெளியே பார்த்தாள்..

"எங்க வீட்டு நாய்க்குட்டிக்கு என்ன பெயர் தெரியுமா..?"

"என்ன..?"

"டாமி.."

நாய்குட்டி முதல் சகல விவரங்களையும் அவள் ஒப்பித்துக் கொண்டே வர.. நந்தினி.. கடனேயென்று சாலையைப் பார்த்துக் கொண்டே தலை அசைத்துக் கொண்டு வந்தாள்..

"அடியே அகிலாண்டம்.. ஆயிஸுக்குப் போயிட் டான்னு உன் புருசன் சொன்ன.. உன் பொண்ணு.. நம்மகூட ரயிலில் வந்த பொண்ணை இழுத்துக்கிட்டு வந்து நிற்குதே.. வந்து என்னன்னு கேளு.."

அறிமுகமான குரல் போல இருக்கிறதே என்று நிமிர்ந்து பார்த்த நந்தினி ஆச்சரியப்பட்டுப் போனாள்..

ரயிலில் அவளுக்கு எதிர் வரிசையில் அமர்ந்திருந்த வர்கள்.. இப்போது எதிரே வந்து நின்றார்கள்..

# 21

ஆவேசமாய் எழுந்து வந்த அலைகள் ஆள் உயரத்திற்கு மேலேயே எழுந்து பாறைகளின் மீது ஓங்கி எழுந்து அதை நனைத்து விலகிச் சென்றன…

ஆர்ப்பரிக்கும் அலைகடலைப் பார்த்துக் கொண்டு நின்ற நந்தினியின் மனமும் அந்த அலைகடல் போல்.. ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது…

அவள் கன்யாகுமரிக்கு வேலை பார்க்க வந்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது.. இதுவரை அவளது வீட்டிற்கு ஒரு போன் கூடப் பண்ணிப் பேசவில்லை.. செல்போனில் சிம்கார்டை மாற்றியிருந்தாள்…

தான் செய்வது சரியா.. தவறா என்ற சஞ்சலமே அவளுக்கு இல்லை.. 'இதுதான் இப்போதைய என் வாழ்க்கை..' என்பதில் தீர்மானமாக இருந்தாள்…

இதுவரை அலுவலகத்தில் சௌம்யனும்.. வீட்டில் அகிலாண்டமும்.. பாட்டியும்.. கூடச் சேர்ந்து அரட்டை அடிக்கும் போது ஆஷாவும் பல முறை.. பலவிதமாய் அவளது வீட்டைப் பற்றிக் கேட்டுப் பார்த்து விட்டார்கள்.. அவள் வாய் திறக்க மறுத்து விட்டாள்…

அவள் வேலைக்கு விண்ணப்பித்த கொடைக்கானல் முகவரியில் வேறு யாருடைய முகவரியையோ போட்டு.. அவர்களைச் சார்ந்திருப்பதாய்க் குறிப்பிட்டிருந்தாள்..

வீட்டை விட்டு இவள் வெளியேறப் போவது தெரிந்தேதான் அந்த முகவரியில் இருப்பவர்கள்.. இவள் தங்களுடைய முகவரியைப் பயன்படுத்த அனுமதித்து இருப்பார்கள்.. அவர்களிடம் நந்தினியைப் பற்றி விசாரித்து ஆகப் போவது எதுவுமில்லை என்று தோன்றியதாலும்.. ஓரளவிற்கு மேல்

அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் தான் தலையிடுவது முறையல்ல என்பதாலும்.. சௌம்யன் அதற்கு மேல் எதுவும் கேட்காமல் விட்டு விட்டான்..

அலுவலகத்திலும் சரி.. வீட்டிலும் சரி.. நந்தினி மிகவும் நேர்த்தியாகவும்.. நேர்மையாகவும் செயல்பட்டாள்.

"எதுக்கு இப்போ பண்ட பாத்திரம் வாங்கணும்.. ஸ்டவ் வாங்கணும்னு அலைகிற.. எங்க வீட்டில் உனக்குன்னு நான் தனியாச் சமைக்கப் போறதில்லை.. நாங்க சாப்பிடுவதை நீயும் சாப்பிடு.." என்றாள் அகிலாண்டம்..

நந்தினி தயங்கினாள்..

"அட.. அதுக்கும் நீ பணம் கொடுத்துடுப்பா.." என்று ஆஷா அழகாகப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தாள்...

மாடியிலிருந்து இரண்டு போர்சன்களில் நந்தினி இருந்த போர்சன் மிகச் சிறியது.. ஒரு ஹால்.. ஒரு படுக்கையறை.. சமையலறை மட்டுமே கொண்டது.. படுக்கையறையில் குளியலறை இணைந்து இருந்தது.. பால்கனியும் இருந்தது.. அதில் நின்றால் அலை கொஞ்சும் கடலைப் பார்க்க முடிந்தது...

"மழைக்காலத்தில் தான் கொஞ்சம் டூரிஸ்ட் வருவது கம்மியா இருக்கும்.. மற்றப்படி இங்கே சுற்றிப் பார்க்க வருகிறவர்களின் கூட்டம் இருந்துக்கிட்டே இருக்கும்..." என்று ஆஷா சொன்னாள்..

ஆரம்பத்தில் ஒரு பெட்சீட் தலையணை மட்டும் புதிதாக வாங்கிக் கொண்ட நந்தினி.. முதல் மாதச் சம்பளத்தில் ஒரு கட்டிலும் மெத்தையும் வாங்கிக் கொண்டாள்..

மற்றப்படி.. அறையில் இருந்த அலமாரியே அவளது துணிகளை அடுக்கிக் கொள்ளப் போதுமானதாக இருந்தது.. தினமும்.. மாலை வேளைகளில் கடலோரமாய் வந்து நின்று விடுவாள்.. அலைகடலின் அலைகள் போல.. அலை பாயும் மனது சமனப்படும் வரை நின்று கொண்டிருந்து விட்டு.. இருள் பரவ ஆரம்பித்ததும் திரும்பி விடுவாள்..

"ஹேய்..."

கடலில் கால் நனைக்க ஆசைப்பட்டு.. கடலோரமாய்ப் போய் நின்ற கல்லூரி மாணவியை அலை எழுந்து நனைத்து விட.. மற்ற மாணவிகள் அதைக் கண்டு சிரித்தனர்.. அவர்கள் வந்த டூரிஸ்ட் பஸ்.. அவர்கள் படிக்கும் கல்லூரியின் பெயர் கொண்ட பேனர் கட்டப்பட்டு நின்றிருந்தது...

நந்தினியும் இப்படித்தானே இருந்தாள்.. கொட்டும் அருவியாகக் குதூகலமாகத்தானே இருந்தாள்..? ஏன் ஆதித்யன் அவள் வாழ்வில் வந்தான்..? அவள் பெரு மூச்சு விட்டாள்..

ஹோட்டல் நடத்துவதால்.. பிஸினெஸ் வீக்லிகளைத் தவறாமல் படிக்கும் வழக்கம் கொண்டிருந்தார் மகேந்திரன்.. வீட்டில் கிடந்த அந்த வார பிஸினெஸ் வீக்லியை நந்தினி புரட்டிய போது.. ஒரு பக்கம் முழுவதும் அடைத்துக் கொண்டு நின்ற ஆதித்யனின் படத்தை முதலில் சாதாரணமாகத்தான் பார்த்தாள்.. ஆனால் அந்த இறுகிய முகத்தில் தெரிந்த ஏதோ ஒன்று அவளைக் கவர்ந்து இழுக்க.. அதை ஊன்றிப் பார்த்தாள்.. பின்னர் மீண்டும்.. மீண்டும் பார்த்தாள்..

அவனைப் பற்றிய செய்தி என்னவாக இருக்கும்.. என்று அறிவதற்காகவே.. அந்தக் கட்டுரையைப் படித்தாள்.. அது அவனது வாழ்க்கை வரலாறையே அவளிடம் பிட்டுப் பிட்டு வைத்தது...

'ஓ.. காட்.. இந்த வயதில் இவ்வளவு பெரிய சாதனை களைச் செய்திருக்கும் சாதனையாளனா இவன்..?'

அவள் மனதில் அவனது உருவம் பதிந்து விட்டது.. அந்த மாத முடிவிலே அவனைக் கொடைக்கானலில் பார்க்க வேண்டி வரும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை..

அவள் அவனைக் கொடைக்கானலில் பார்த்தாள்.. புகைப்படத்தில் பார்த்ததை விட நேரில் இன்னும் உயரமாய்.. கம்பீரமாய்.. ஆண்மை ததும்பும் தோற்றத்தோடு அவனிருந்தான்...

அவசரமாய்த் தோழியை அனுப்பி விட்டு அவனைப் பின் தொடர்ந்தாள் நந்தினி.. பேச முயன்ற பெண்ணிடம்

பேச்சைத் தட்டிக் கழித்து விட்டு.. அவன் சென்றபோது அவன் மேல் அவளுக்கு ஈடுபாடு வந்தது...

'பரவாயில்லையே.. ஆசாமி ஜொள் மன்னனில்லை..'

# 22

நேராக நடந்த ஆதித்யன்.. கூட்டத்திலிருந்து பிரிந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்ட போது நந்தினியின் இதயம் படபடவென்று துடித்தது...

'ஏன் இப்படிப் போகிறான்.. தொழிலில் சரிவு என்று அந்த ஆர்டிகிளில் போட்டிருந்தார்களே.. அதனால்.. தவறான முடிவு எதையும் எடுத்து விட்டானோ...'

அவள் அவசரமாய் அவன் பின்னாலேயே ஓடினாள்.. கடைசி நிமிடத்தில் அவனது கைப்பிடித்து நிறுத்தினாள்.. கதை பல புனைந்து தன் வீட்டில்.. தன் கண் பார்வையில் அவனைத் தங்க வைத்தாள்...

மகளைக் காப்பாற்றியவன் மிகப் பெரிய மனிதன் என்பதாலும்.. ஆதித்யனிடம் மகேந்திரனுக்கு இருந்த மதிப்பு.. மரியாதையாலும் அவனுடன் நந்தினி பழகுவதை.. சேர்ந்து ஊர் சுற்றுவதை மகேந்திரன் ஆட்சேபிக்கவில்லை..

அவன் கிளம்பிய கடைசி நாளை.. அதன் பின் பல முறை நினைத்து.. நினைத்து நெஞ்சம் உருகியிருந்தாள் நந்தினி...

'ஏன் அவன்.. என் முகம் பார்த்து நின்றான்..? என் அனுமதியில்லாமல் அவன் போகவில்லையே.. என் தவிப்பை உணர்ந்த ஓர் பார்வையை அவனது விழிகள் பார்த்தனவே.. இரண்டாம் முறை கை கொடுக்கும் போது.. எவ்வளவு பரிவோடு கை கொடுத்தான்.. என் அன்பை ஏற்றுக் கொண்டதை வாய் விட்டுச் சொல்லாமல் அவன் போய் விட்டானே...'

அவளது நெஞ்சம் தவித்தது.. அவனது போனிற்காகத் தினமும் காத்திருந்தாள் அவள்.. வீட்டில் தொலைபேசி

அடிக்கும் போதெல்லாம்.. பாய்ந்து சென்று அதை எடுப்பாள்..

அழைப்பது வேறு யாரோ என்று ஏமாந்து போய் வைத்து விடுவாள்.. அவளது செல்போனில் மணி யொலித்தால்.. அவனது நம்பரா என்று ஆவலாகப் பார்ப்பாள்.. வேறு நம்பர் என்பதை உணர்ந்ததும் வேண்டா வெறுப்பாகப் பேசுவாள்...

ஆதித்யனிடமிருந்து அவளுக்குப் போனே வரவில்லை.. அவளுக்குத் தானாக அவனிடம் பேசவும் விருப்பமில்லை.. அன்போ.. காதலோ.. அது தானாக வர வேண்டும்.. கேட்டுப் பெறக் கூடாது.. அது அவன் மேல் வைத்திருக்கும் அளவு கடந்த நேசத்திற்குக் கௌரவத்தைத் தராது..

நந்தினிக்குக் கௌரவம் மிகவும் முக்கியம்.. நேசிப்பது சுகம்தான்.. அதை விடவும் சுகம்.. தான் நேசிப்பவரால் நேசிக்கப்படுவது..

நந்தினி ஆதித்யனை நேசித்தாள்.. அவனால் தான் பதிலுக்கு நேசிக்கப்பட வேண்டுமென்று தவித்தாள்.. துடித்தாள்.. அவனிடமிருந்து எந்த விதச் செய்தியும் வராததால் துயருற்றாள்...

அவனது சரிவிலிருந்து அவன் மீண்டும்.. மீண்டும்.. வெற்றிச் சிகரத்தை தொட்டுக் கொண்டிருப்பதை பிஸினெஸ் வீக்லி அறிவித்தது...

'அவன்தான் தடைகளில் இருந்து விடுபட்டு விட்டானே.. ஏன் என்னிடம் பேசவில்லை..? அவனது இடர் தீர்ந்து விட்ட செய்தியை என்னிடம் பகிர்ந்து கொள்ள ஏன் அவனுக்குத் தோன்றவில்லை...?'

நந்தினி மனம் நைந்தாள்.. அவளது கடைசி செமஸ்டர் முடியும் நாளில் பவன் அவளைத் தேடி வந்தான்..

"நந்தினி... நில்..."

"என்ன...?"

"இன்றைக்கு எனக்கு உன் பதில் தெரிய வேண்டும்.."

"எதைப் பற்றி...?"

"நம் கல்யாணத்தைப் பற்றி..."

"நம் கல்யாணமா...? பிதற்றாதே பவன்.."

"இது உனக்குப் பிதற்றலாக இருக்கிறதா..? மூன்று வருடமாய் உன் பின்னால் சுற்றிக் கொண்டிருக்கிறேன்.. நான் உன்னைக் காதலிப்பது உனக்குத் தெரியாதா...?"

"மூன்று வருடங்களாய் நான் உன்னை அவாய்ட் பண்ணிக் கொண்டிருக்கிறேன்.. நான் உன்னைக் காதலிக்கவில்லை என்பது உனக்குத் தெரியாதா...?"

"ஏன்...?"

"இதற்கு நான் என்ன பதிலைச் சொல்வது...?"

"இதோ பார் நந்தினி.. எனக்கு வெளிநாட்டில் வேலை கிடைத்திருக்கிறது..."

"அதுதான் எனக்குத் தெரியுமே.. உன்னுடைய ரிலேடிவ் ஒருவர் யு எஸ் ஏவில் இருக்கிறார் என்பதை ஜார்ஜ் தினமும் என்னிடம் ஜெபிப்பானே.. போன வாரம் அவர் உனக்கு யுஎஸ்ஏவில் வேலை வாங்கிக் கொடுத்து விட்டதையும் ஜெபித்தான்..."

"நான் என் வீட்டிற்கு ஒரே பிள்ளை..."

"இதையும் ஜெபித்திருக்கிறான்..."

"கிராமத்தில் எங்களுக்குக் கணக்கு வழக்கில்லாத நிலம் இருக்கிறது..."

"இருந்து விட்டுப் போகட்டும்..."

"நான் பணக்காரன் நந்தினி..."

"இருந்து விட்டுப் போ..."

"என்னை விட நல்ல மாப்பிள்ளை உனக்கு எங்கு தேடினாலும் கிடைக்க மாட்டான்.."

ஆதித்யனை நினைத்துக் கொண்டாள் நந்தினி...

'அவனை விட நீ உயர்த்தியா..?'

"ஏன் பதில் சொல்ல மாட்டேன் என்கிற நந்தினி..?"

"உன்னிடம் போய் என்ன பதிலைச் சொல்வது...? உன் காதல் பெரிதென்று நீ பேசவில்லை.. நீ பணத்தில் பெரியவனென்று பேசுகிறாய்.. உன் வசதியைச்

சொல்கிறாய்.. உனக்கு வேலை கிடைத்திருப்பதைச் சொல்கிறாய்.. இதற்கெல்லாம் பதில் சொல்வது என்பது என்னால் முடியாத விசயம் பவன்..."

"ஹ.. உன் போன்ற பெண்களைப் பற்றி எனக்குத் தெரியாதா..? நீங்கள் எல்லோரும் செக்யூரிட்டியான லைபைத்தானே தேர்ந்தெடுப்பீர்கள்.."

பவன் அலட்சியமாகக் கூறிய விதத்தில் ஓர் ஆணவம் தெரிந்தது.. 'என்னை விட்டு நீ எங்கே போக முடியும்..?' என்ற சவால் தெரிந்தது..

# 23

"பவன்.. என்ன பேச்சுப் பேசுகிறாய்..?"

"ஏன்.. நான் சொன்னதில் தவறென்ன இருக்கிறது..? உங்களுக்கு உங்கள் எதிர்கால வாழ்க்கையில் பாதுகாப்பு மட்டும்தானே முக்கியம்.. என்னைப் போல.. வெளிநாட்டில் வேலை பார்க்கப்போகும் மாப்பிள்ளையை வேண்டாம் என்று சொல்லி விடுவீர்களா..? அதுவும் பிக்கல்.. பிடுங்கல் இல்லாத மாப்பிள்ளை.. கூடுதலாகச் சொத்துக்கள்.. இது.. தானே உன்னைப் போன்ற பெண்கள் நினைப்பது..? அதைத் தான் நான் எடுத்துச் சொன்னேன்..."

நந்தினி அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.. அவள் மனம் கொதித்துக் கொண்டிருந்தது...

பெண்கள் செக்யூரான வாழ்க்கையைத் தேர்ந்தெடுப் பவர்களாமே.. ஆதித்யன் அவளிடமிருந்து விடை பெற்றுச் செல்லும் போது என்ன நிலையில் இருந்தான்..? அவனது தொழில் சாம்ராஜ்யத்தில் ஒரு செங்கலாவது மிஞ்சுமா என்ற நிலையில் இருந்தான்.. சரிவைச் சந்திக்க முடியாமல் தற்கொலை பண்ணிக் கொள்ளும் மன நிலையில் இருந்தான்.. அவனிடமிருந்த எது நந்தினியைக் கவர்ந்தது..?

அவனது உழைப்பு.. கம்பீரம்.. ஆண்மை ததும்பும் தோற்றம்.. சாதிக்கும் திறன்.. இதை மட்டும் தானே அவள் கவனத்தில்

கொண்டாள்..? வேறு எதை நினைத்துப் பார்த்தாள்..

"நீ நினைப்பது போல் நானில்லை பவன்.. மற்றப் பெண்களைப் போல் என்னையும் நீ நினைத்து விடாதே.."

"நீயும் மற்ற ஆண்களைப் போல் என்னை நினைத்து விடாதே.."

"வாட் யு மீன்..?"

"நந்தினி.. நான் உன்னை விட மாட்டேன்.. உன் கழுத்தில் தாலி கட்டி என் பெண்டாட்டியாக்கியே தீருவேன்.."

"ச்சு.. நடக்காததைப் பற்றிக் கற்பனை செய்யாதே..."

"நடக்கும்.. நான் நடத்திக் காட்டுகிறேன்..."

அன்றிலிருந்து மூன்றாம் நாள்.. பவன் தன் குடும்பத்தோடு நந்தினியைப் பெண் பார்க்க வந்து விட்டான்..

யாரோ விருந்தினர் வரப் போகிறார்கள் என்று மலர் விழி அதட்டியதால்.. ஒரு பிரிண்டெட் சில்க் சேலையைக் கட்டிக் கொண்டிருந்தாள் நந்தினி..

"கொஞ்சம் திரும்பு..." என்று ஆனந்தி அவள் கழுத்தில் அட்டிகையை அணிவித்து.. இருகைகளிலும் கல் வளையல்களை அணிவித்து விட்டாள்...

"ச்சு.. எதற்கு சித்தி இதெல்லாம்.. கசகசன்னு இருக்கிறது..." நந்தினி சிணுங்கினாள்...

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது.. வருகிற கெஸ்ட் கிராமத்துப் பக்கம்.. நகைநட்டு போடாம லிருந்தேன்னு வை.. நாம வசதியில்லாதவங்கன்னு நினைச்சுக்குவாங்க..."

"மத்தவங்க நினைப்பைப் பற்றி நமக்கு என்ன கவலை..?"

"சிலதெல்லாம்.. நாமும் பார்க்கணும் நந்தினிம்மா..."

தாயாக இருந்தால் மறுத்திருப்பாள்.. ஆனால் அவளுடைய சித்தி ஆனந்தி அவளுக்குத் தோழி போல.. எனவே நந்தினி சிறு முணுமுணுப்புடன் பேசாமல் இருந்து விட்டாள்.. சற்று நேரத்தில் ஆனந்தியே அவளது தலை நிறையப் பூவை வைக்கவும் சண்டைக்குப் போய் விட்டாள்..

"இது உங்களுக்கே கொஞ்சம் ஓவராய்த் தெரியலையா சித்தி.."

"அடடா.. இருந்திருந்து உன் சித்தப்பாவிடம்.. நீங்களாக ஒரு முழம் பூ எனக்கு வாங்கிக் தந்திருக் கிறீங்களான்னு கேட்டு விட்டேன்.. அவரென்னன்னா... ஒரு கூடைப் பூவைக் கொண்டு வந்து இறக்கியிருக்கிறார்.. இந்த வீட்டில் பூ வைக்கும் பெண் பிள்ளைகள் யார்.. யார் இருக்கிறார்கள்..? நீ.. நான்.. உன் அம்மா.. மூன்று பேர்தானே.."

ஆனந்தியிடம் நந்தினியின் ஆட்சேபங்கள் அனைத்திற்கும் விடை இருந்தது...

மாலையில் வீட்டிற்கு.. ஹோட்டலில் இருந்து சிற்றுண்டி கொண்டு வந்து இறக்கப்பட்டது...

"இது என்னம்மா அரிதாய் இருக்கு.. எப்பவும் நீங்க வீட்டில்தானே பிரிபேர் பண்ணுவிங்க...?"

"வருவது நிறையப் பேராம்... அதனால் வீட்டில் செய்யத்தோதுப் படாதுன்னு உங்கப்பா கிட்ட ஹோட்டலில் இருந்து அனுப்புங்கன்னு சொல்லி விட்டேன்.."

அப்போதும் நந்தினிக்குச் சந்தேகம் எதுவும் வர வில்லை.. இயல்பாகத்தான் இருந்தாள்.. அன்று மாலை வரிசையாய் இரண்டு காரும்.. ஒரு பெரிய வேனும் வந்து அவர்கள் வீட்டு வாசலில் நிற்கவும்.. மாடி பால்கனியிலிருந்து.. அந்தக் கிராமத்து விருந்தாளிகள் யாரென்று சாதாரணமாகத்தான் பார்த்தாள்..

முதல் காரிலிருந்து இறங்கியது பவன்.. நந்தினியின் முகம் மாறியது...

'இவனா...?'

அவனைத் தொடர்ந்து நகைக்கடை விளம்பரத்திற்கு நிற்கும் பெண்மணி போல்.. உடல் பூராவும் எவ்வளவு நகைகளைச் சுமக்க முடியுமோ.. அவ்வளவு நகைகளைச் சுமந்து கொண்டு பவனின் முகஜாடையில் ஓர் வயதான பெண்மணி இறங்கினாள்.. அவளுக்கு அடுத்து.. பெரிய மனிதத் தோற்றத்துடன்.. பட்டு ஜரிகை வேட்டி.. பட்டுக்கரை அங்கவஸ்திரத்துடன் ஒருவர் இறங்கினார்... வேனிலிருந்து

இறங்கியவர்கள் எல்லாம் தங்களுக்குள் சத்தமாகப் பேசிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார்கள்..

"ஏம்ப்பா.. பவனு.. நீ கட்டிக்கப் போற பொண்ணு இப்படி குளு குளு மலையில் இருக்கணும்னு எழுதியிருக்கு பாரு.... நீ கொடுத்து வைச்சவன் தான், மாமனார் வீட்டிற்கு விருந்துக்கு வந்தால்... விருந்துக்கு வந்தது மாதிரியும் ஆச்சு.. ஊரைச் சுற்றிப் பார்த்தது மாதிரியும் ஆச்சு..."

"ம்ம்.. எல்லா ஜில்லாவிலயும் பெண்ணைப் பார்த்து விட்டு அது வேணாம்.. இது வேணாம்ன்னு வழுப்பம் செப்பிய பயல் கடைசியில் கொடைக்கானல் மலைக்காரப் பொண்ணுகிட்ட விழுந்துபுட்டானே..."

"காதலுக்குக் கண்ணில்லம்பாங்க... உன் பெண்டாட்டிக்குக் கண்ணு.. மூக்கெல்லாம் சரியா இருக்காப்பு...?"

"அதைப் பார்க்கத்தானே நாம வந்திருக்கோம்.. தலைமுடி சவுரியா... இல்லை, சொந்தப் பின்னலான்னு இழுத்துப் பிடிச்சுப் பாத்திர மாட்டோமா..."

"பொண்ணுக்கு எத்தனை பவுனு நகை போடறாங்களாம்..?"

"ஒற்றைப் பொண்ணு.. குறைச்சா போடுவாங்க..?"

"பொண்ணு நிறம் எப்படி...?"

"பார்க்கத்தானே வந்திருக்கோம்..."

'ஸோ.. இவர்கள் என்னைப் பெண் பார்க்கத்தான் வந்திருக்கிறார்கள்...' நந்தினிக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது..

ஆனாலும் இது எப்படி நடக்க முடியும்..? அவளின் சம்மதமில்லாமல் மகேந்திரன் இதைச் செய்ய மாட்டாரே.. அவர் எப்படி இதைச் செய்யத் துணிந்தார்....?

வந்திருப்பவர்கள் இதற்குத்தான் வருகிறார்கள் என்ற விவரம் நந்தினியின் வீட்டில் இருக்கிறவர்களுக்குத் தெரிந்துதான் இருக்கிறது...

அதனால்தான்.. இந்தப் புடவை.. நகை.. பூ.. அலங்காரம் எல்லாம்...

'இப்படிக் கூட என்னை ஏமாற்றுவார்களா.. என் வீட்டாரா இதைச் செய்தார்கள்....?'

நந்தினியால் இன்னும் இதை நம்ப முடியவில்லை.. அவளுக்குப் பின்னால் காலடியோசை கேட்டது.. திரும்பிப் பார்த்தாள்.. மலர் விழியும்.. ஆனந்தியும் வந்து கொண்டிருந்தார்கள்.. நந்தினி அவர்களை முறைத்துப் பார்த்தாள்..

ஆனந்தி மௌனமாக, மலர்விழியின் பின்னால் நகர்ந்து கொண்டாள்.. மலர்விழிக்கு அவளின் ஒதுக்கம் புரிந்தது.. நந்தினி மலர்விழியின் மகள்.. விளக்கத்தை அவள்தான் மகளுக்குச் சொல்லியாக வேண்டும்...

# 24

"என்னம்மா இது.. இங்கே என்ன நடக்கிறது...?"

"எனக்கு ஒன்றும் தெரியாதுடி.. எல்லாம் உன் அப்பாவின் ஏற்பாடுதான்.. பையன் உன் கூடப் படித்தவன் தானாமே..."

"அதற்காக...?"

"உனக்குத் தெரியாத பையனில்லையே நந்து..."

"தெரிந்தவனாக இருந்தால்.. அவனைக் கட்டாயம் நான் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமா...?"

"பார் நந்து.. உனக்கு இருபத்திரண்டு வயதாகி விட்டது.. உன் வயதில் எனக்கு நீ பிறந்து விட்டாய்..."

"அம்மா.. உங்க காலம் வேறு.. என் காலம் வேறு.."

"அதனால்தான்.. நீ விரும்பியவரை படிக்க உனக்கு அனுமதி கொடுத்தோம்..."

"படிப்பதற்குக் கூட ஒரு பெண்ணிற்கு அனுமதி தேவைப்படுகிறதா அம்மா.. இந்த வார்த்தையை வருணிடமும்.. தருணிடமும் நீங்கள் சொல்வீங்களாம்மா.."

"நந்து.. சும்மா பெண்ணுரிமை அது இதுன்னு பேசிக் கொண்டு இருக்காதே.. பிழைக்கிற வழியைப் பார்..."

"இதைப் பாருடா.. இப்போது பிழைக்க வழியில்லாமல் தான் நான் நிற்கிறேனா..."

"ஏன்டி இப்படி விதண்டாவாதம் பண்ணிக்கிட்டு இருக்க..? உனக்குக் கல்யாண ஏற்பாடுதானே பண்ணினோம்.. அது தப்பா..?"

"தப்புத்தான்.. எனக்கு இப்போது கல்யாணம் வேண்டாம்..."

"வேறு எப்போது பண்ணிக் கொள்வாய்...?"

"எனக்குத் தோன்றும் போது பண்ணிக் கொள்வேன்.."

"அப்படியெல்லாம் உன் இஷ்டத்திற்கு விட முடியாது.."

"இதென்னம்மா வம்பாக இருக்கிறது.. என் கல்யாணம் என் இஷ்டப்படிதானே நடக்க வேண்டும்.."

"நீ கிறுக்கி மாதிரி எதையாவது உளறிக் கொண்டிருப்பாய்... நீ போடும் தாளத்திற்கு ஆட எங்களால் முடியாது..."

"அம்மா.. எனக்குப் பிடிக்காத கல்யாணத்தை நான் பண்ணிக் கொள்ள மாட்டேன்..."

"நீயாக உன் வாழ்க்கையைத் தீர்மானித்தால்... உன்னைப் பெற்றவர்கள்ன்னு நாங்கள் இங்கு எதற்கு..?"

"என் கல்யாணத்தைத் தீர்மானிக்க எனக்கு உரிமை இல்லையா...?"

"இல்லை... உன் கல்யாணத்தை நாங்கள் தீர்மானித்து விட்டோம்.."

"பெண்ணின் உரிமையைப் பெண்ணே மறுப்பது.. இந்தியாவில்தான் நடக்கும்..."

"ம்ஹீம்.. நீ இப்படியே பேசிக் கொண்டிரு.. நான் கீழே போகிறேன்..."

"நான் கீழே வர மாட்டேன்..."

மலர்விழி பதில் பேசாமல் நந்தினியை எரித்து விடுவது போல் பார்த்தாள்.. பின் விர்ரென்று சென்று விட்டாள்.. தயங்கி நின்ற ஆனந்தியை,

'யு டூ புரூட்டஸ்...' என்று சீஸர் பார்ப்பது போல் ஓர் பார்வை பார்த்தாள் நந்தினி...

"இதற்கும் எனக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை நந்து..."

"ஆனால் எனக்கு நகை போட்டு.. பூவைத்து விட்டது யார்..? நீங்கள்தானே..!"

"சில சமயம் நான் இந்த வீட்டின் மருமகளாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது..."

"அதற்காக..? நீங்கள் கூட இப்படி மாறுவீங்கள்னு நான் நினைத்தும் பார்க்கவில்லை சித்தி..."

"நந்து.. குழந்தைக்குக் கசக்கிறது என்பதற்காக மருந்தைக் கொடுக்காமல் இருக்க முடியுமா...?"

"சித்தி..! நான் குழந்தையில்லை..."

"அதைத்தானே நாங்களும் சொல்லி.. உன் கல்யாண ஏற்பாட்டைக் கவனிக்கிறோம்..."

"சித்தி..."

"பார் நந்தினி.. இப்போது வந்திருக்கும் மாப்பிள்ளை வெளிநாட்டில் வேலை பார்க்கப் போகிறவன்.. சொத்து சுகம் நிறைய இருக்கிறது.. ஒற்றைப் பையன்.. தேடினாலும் நமக்குக் கிடைக்காத சம்பந்தம்.. உன்னைப் பிடித்துப் போய் வந்து பெண் கேட்கிறாங்க.. இதை விட்டு விட்டால்.. நம்மை விடப் பைத்தியக்காரங்க இந்த உலகில் வேறு யாரும் இருக்க மாட்டாங்கம்மா..."

# 25

தன்னுடைய மறுப்பிற்கும்.. எதிர்ப்பிற்கும் அந்த வீட்டில் மரியாதையில்லாமல் போய் விடும் என்பதை அன்றுதான் முதன் முதலில் உணர்ந்தாள் நந்தினி...

கீழே போகாமல் மாடியிலேயே இருந்தவளை அழைத்துக் கொண்டு போக வந்தது மகேந்திரன்...

"நந்தினி... ஆர் யு எ சைல்ட்...?"

"அது உங்களுக்குத் தெரிகிறதா அப்பா...?"

"பிடிவாதம் பிடிக்காமல் எழுந்திரு..."

"அப்பா.. எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை.."

"ஏன்...?"

"எனக்கு அந்தப் பவனைப் பிடிக்காது அப்பா..."

"பொய் சொல்லாதே..."

"அப்பா..."

"உனக்குக் கல்யாணம் பிடிக்காதுன்னு சொல்லு.. பவனைப் பிடிக்காமல் ஒரு பெண் இருக்க முடியுமா...?"

"அவன் என்ன பெரிய இவனா...?"

"நந்தினி மைன்ட் யுவர் வெர்ட்ஸ்.. பவன் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் மாப்பிள்ளை..."

"அப்பா... ப்ளீஸ்.. நான் அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன்.."

"முட்டாள் போலப் பேசாதே நந்தினி.."

மகேந்திரன் எரிந்து விழுந்தார்.. நந்தினி திகைத்து நோக்கினாள்..

"அப்பா..."

எப்போதும் தந்தையின் வாயால் புத்திசாலியென்று புகழப்பட்ட நந்தினி.. முதன் முதலாக அவர் வாயால் 'முட்டாள்' பட்டத்தைப் பெற்றாள்..

"என்ன பேசுகிற..? வெளிநாட்டில் வேலை பார்க்கும் மாப்பிள்ளை வலிய வந்து பெண் கேட்கிறான்.. சொத்து சுகம் நிறைய இருந்தும்.. நீங்கள் செய்வதைச் செய்யுங்கன்னு அவனைப் பெற்றவர்கள் சொல்கிறாங்க.. மருந்துக்குக் கூட ஒரு கெட்ட பழக்கம் கிடையாது.. இப்படி ஒரு மாப்பிள்ளை சல்லடை போட்டுத் தேடினாலும் யாருக்கும் கிடைக்க மாட்டான்.. புரிந்ததா..?"

"எனக்குப் பிடிக்கவில்லையே அப்பா.."

"பேசியதைத் திரும்பத் திரும்பப் பேசாதே நந்தினி.. உனக்கே தெரியும்.. எனக்கு வயதாகி விட்டதுன்னு.. என் காலத்திற்குள் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து.. கணவன்.. குழந்தைகள்.. குடும்பம்னு நீ

வாழ்வதைப் பார்த்து விடணும்னு ஆசைப்படுகிறேன் நந்தினி.. என் ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டு விடாதே.. தயவு செய்து கீழே இறங்கி வா..."

"எனக்குப் பிடிக்காதவனின் முன்னால் வந்து என்னை நிற்கச் சொல்கிறீங்களேப்பா.. என்னால் எப்படிப்பா அது முடியும்..?"

"முடியும்.. முடியணும்.. வந்திருக்கிறவங்க முன்னால் என் கௌரவத்தைக் காப்பாத்தணும்னு நீ நினைத்தால் இறங்கி வா.. அப்புறம் உன் இஷ்டம்..."

மகேந்திரன் மடமடவென்று இறங்கிப் போய் விட்டார்.. நந்தினி அப்படியே சோபாவில் அமர்ந்து விட்டாள்.. அவள் தோளில் ஆதரவாய் ஒரு கரம் படிந்தது.. நிமிர்ந்து.. பார்த்தாள்.. ஆனந்தி நின்றிருந்தாள்...

"சித்தி..." என்றாள் கண்ணீர் குரலில்...

"எழுந்து வா நந்தினி..."

"ஆனால்.. சித்தி..."

"அதையெல்லாம் அப்புறம் பேசிக்கலாம் நந்து.. இப்போது என்ன ஆகிவிட்டது...? உன்னைப் பெண் பார்க்கத்தானே வந்திருக்காங்க.. கல்யாணம் முடிக்க வரவில்லையே.. வா..."

மனமில்லாமல் எழுந்து சென்றாள் நந்தினி.. மாடிப் படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தவளை வெற்றிப் பார்வை பார்த்தவன் பவன்...

'நான் என்ன பெண்ணா.. இல்லை, பொருளா.. ஒரு பெண்ணைப் பார்ப்பது போல் பார்க்காமல் இவ்வளவு மமதையாய்ப் பார்க்கிறானே.. இவன் முன் நான் காட்சிப் பொருள் போல் நிற்பதா..?'

நந்தினியின் மனம் முரண்டியது.. ஆனால் அவளுக்கும்தான் வேறு வழி என்ன இருக்கிறது..? முறைப்படி பெண் கேட்டு.. அவன் அவளுடைய பெற்றோர்களை வசப்படுத்தி விட்டானே.. எப்போதும் நந்தினிக்கு ஆதரவாய் இருக்கும் ஆனந்தி கூட இன்று எதிர்ப்பக்கம் நிற்கிறாளே...

"உட்காரும்மா..." நகைக் கடை பேசினாள்..

"இருக்கட்டும்.."

"அது மரியாதை யெல்லாம் மனசில் இருந்தால் போதும்.. சும்மா உட்காரு..."

'உனக்கு யாரும்மா மரியாதை கொடுத்தது..? உன்னிடம் உட்கார்ந்து பேசவெல்லாம் என்னால் முடியாது.. ஆளை விடு.. நான் உள்ளே போக வேண்டும்..'

நந்தினி அசையாமல் நின்றாள்...

"பரவாயில்லையே..!" என்று அதிசயித்தாள் பவனின் அம்மா...

"கூடப் படிச்ச பொண்ணுங்கிறானே.. குணம் எப்படி யிருக்குமோன்னு பயந்துக்கிட்டே வந்தால்.. பொண்ணு இப்படி அடக்க ஒடுக்கமா.. பெரியவங்களிடம் மரியாதையாய் இருக்கிறாளே.."

கல்லூரியில் அவள் அடிக்கும் லூட்டிகளை நேரில் பார்த்த சாட்சியான பவன்.. வாய்க்குள் சிரிப்பை அடக்கிக் கொண்டான்..

வருணும்.. தருணும்.. பவனின் அம்மாவை...

'அட... அப்பாவியே...' என்பது போல் பார்த்து வைத்தனர்...

ஆளாளுக்குக் கேள்வி கேட்டு விட்டு அவர்களுக்குள் குட்டி வட்ட மேஜை மாநாடு போட்டு முடித்தார்கள் அவர்கள்.. பவனின் அப்பா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்..

"அப்போ.. சம்பந்தி, எப்போக் கல்யாணம் வைச்சுக்கலாம்.."

"நீங்க சொல்லுகிற நாளில் வைத்துக் கொள்ளலாம்.."

நந்தினி பதட்டத்துடன் ஆனந்தியைப் பார்த்தாள்.. அவள் வேறு பக்கம் பார்த்துக் கொண்டு நின்றாள்.. மறுத்துப் பேச அவள் வாய் திறந்தாள்..

# 26

"மலர்விழி... நந்தினியை உள்ளே அழைத்துக் கிட்டுப் போ..." என்றார் மகேந்திரன்..

"அப்பா... நான்.. வந்து..."

மலர்விழி அவளைப் பேச விடாமல் அழைத்துக் கொண்டு போய் விட்டாள்...

அவள் பேசித்தான் பயன் என்ன இருக்கப் போகிறது..? பெண் கேட்டு வந்திருக்கும் பவன்

அவள் விருப்பமில்லை என்று சொன்ன பின்னாலும் விடாக்கண்டனாய் வந்திருக்கிறான்...

விருப்பத்தைக் கேட்க வேண்டிய பெற்றோர்களோ.. அவன்தான் மாப்பிள்ளை என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.. நந்தினி தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தாள்...

"அப்போ நிச்சயம் பண்ணிப் புடலாமா...?"

"தாராளமாய்..."

"நாங்க.. பெண்ணுக்கு நகையும்.. சேலையும் வாங்கிட்டுத்தான் வந்தோம்.. இருந்தாலும் முறைப்படி பொண்ணு பார்க்கிறதை நடத்திப்புடணுமில்ல..."

"அதுவும் சரிதான்.."

"இந்தா பஞ்ச வர்ணம்.. வேனில் இருக்கிற தட்டுக்களை கொண்டு வந்து பரத்து.. எத்தனை தட்டு வைக்கிறோம்ன்னு நம்ம சம்பந்தியும் பார்க்கணுமில்ல..."

பஞ்சு மிட்டாய் கலரில் சேலை உடுத்தியிருந்த அந்தப் பஞ்ச வர்ணம்.. தட்டுக்களை எடுத்து வர ஆள் படை அம்போடு கிளம்பினாள்...

"ஏய் ராக்காயி.. நீ வா.. மருக்கொழுந்து, நீ வா.. அடியேய் சித்ரா.. உன்னை என்ன வெத்தல பாக்கு வச்சுக் கூப்பிடணுமா..."

நந்தினிக்கு அவர்கள் பண்ணும் அலப்பரையைப் பார்த்து எரிச்சல்.. எரிச்சலாக வந்தது..

'எதற்கு இந்த ஆர்ப்பாட்டம்...?'

அவளது எரிச்சலை யாரும் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.. நிச்சயதார்த்தத் தட்டை மாற்றிக் கொண்டுதான் பவன் வீட்டார் கிளம்பினார்கள்..

பவனின் அம்மா உள்ளே வந்து அவளின் கன்னம் வழித்து விட்டுச் சென்றாள்..

"எப்பேர்ப்பட்ட மனுசங்க.. அந்தம்மா அவ்வளவு பணக்காரியாய் இருந்தும் கொஞ்சம் கூடக் கர்வம் இல்லாமல் இருக்கிறதைக் கவனிச்சிங்களா...?"

"ஆமாம் மலர்விழி.. நந்தினியைக் கண்ணுக்குள்ளே வைத்துப் பார்த்துக்குவாங்க.. நீ என்னடா சொல்கிற.."

"எனக்கு மாப்பிள்ளையை ரொம்பவும் பிடித்திருக்கு அண்ணா.. ஆள் அழகாய் இருக்கிறார்.. நம்ம நந்தினிக்குப் பொருத்தமான மாப்பிள்ளை..."

"படிப்பு முடியறதுக்குள்ள வெளிநாட்டில் வேலை தேடிக் கொண்டு விட்ட கெட்டிக்காரத்தனத்தைச் சொல்லு.."

"ஆமாம் அண்ணா.. எதிலயும் கணக்குப் போட்டுக் காரியத்தில் இறங்குகிறார்.. என்ன அண்ணி.. நான் சொல்கிறது சரிதானே...?"

"மகன் வெளிநாடு போனால்.. மருமகளோடுதான் போகணும்ன்னு மாப்பிள்ளையோட அப்பாம்மா சொல்லி விட்டாங்களாம்.. உடனே இவர்... என் மனசுக்குப் பிடிச்சவளைக் கட்டி வைச்சா கையோடு கூப்பிட்டுக் கொண்டு போகிறேன்னு பட்டுன்னு சொல்லிவிட்டாராம்.. நம்ம நந்தினி கொடுத்துவச்சவ ஆனந்தி..."

"மாப்பிள்ளைக்குப் பிடித்த பெண்ணைப் பார்க்க.. அவரோட சொந்த பந்தமெல்லாம் கிளம்பி வந்திருச்சாம்.. வர்றது வர்றோம்.. கையோட நிச்சயத்தையும் பண்ணிட்டுப் போயிடலாம்ன்னு மாப்பிள்ளையோட அம்மா நகை வாங்கச் சொல்லிட்டாங்களாம்.. இதில் நகை பெரிய விசயமில்லை அக்கா.. அவங்க நம்ம நந்தினிக்குக் கொடுக்கிற இம்பார்டன்ஸ்தான் பெரிய விசயம்..."

நந்தினி அன்று இரவு தூக்கமின்றிக் தவித்தாள்.. மனதில் பவனின் முகம் தோன்றியது.. வீட்டினர் சொல்வது போல.. அவன் சிறந்த மாப்பிள்ளைதான்.. அவனுடைய பெற்றோரும் நல்லவர்கள்தான்.. ஆனால்.. நந்தினியின் மனம் ஆதித்யனிடம் சிக்கித் தவிக்கிறதே.. திருமணத்தை விரைவில் நடத்த முடிவு செய்து விட்ட நிலையில்.. இனியும்

தாமதம் செய்யக் கூடாது என்ற முடிவுக்கு வந்தாள் நந்தினி...

மறுநாள் மதியம்.. அருகே யாருமில்லாத நேரத்தில் ஆதித்யனுக்கு போன் பண்ணினாள்.. மணி ஒலித்தது.. துண்டிக்கப்பட்டது.. அதிர்ந்து விட்டாள்.. இது அவளுடைய நம்பர் என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்குமே.. அப்புறமும் ஏன் இதைச் செய்தான்...? மீண்டும் போன் பண்ணினாள்.. துண்டிக்கப்பட்டது.. பதட்டத்துடன் மீண்டும்.. மீண்டும்.. முயற்சித்தாள்... போன் 'ஸ்விட்ச் ஆஃப்...' செய்யப்பட்டு விட்டது.. நந்தினி இடிந்தே போனாள்..

அன்று முழுவதும் பதுமை போல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.. மறுநாளில் இருந்து செயல்பட ஆரம்பித்தாள்.. வேலைக்குத் தோழியின் முகவரியைக் கொடுத்து விண்ணப்பித்தாள்.. நேர்முகத் தேர்விற்கு அழைப்பு வந்தது.. தோழியையே.. அவள் வீட்டில் எல்லோரும் ஊருக்குப் போய் விட்டதாகப் பொய் சொல்லச் சொல்லி... இரண்டு நாள்கள்... தோழிக்குத் துணைக்குப் போய் இருக்கிறேன் என்று சொல்லிவிட்டுத் தனியாகக் கன்யாகுமரிக்குப் போய் வந்தாள்.. வேலைக்கு நியமன உத்தரவும் வந்து விட்டது...

"நந்தினி.. இப்படிப் பிடிவாதமாக நீ கிளம்பிப் போய்த்தான் ஆகனுமா..?" வருத்தத்துடன் வினவினாள்.. அந்தத் தோழி...

"வேறு வழியில்லை லதா.. நான் இங்கே இருந்தால் எனக்குக் கட்டாயம் கல்யாணம் செய்து வைத்து விடுவார்கள்.."

"சொல்கிறேனென்று தப்பாக நினைக்காதே..."

"வேண்டாம்.. சொல்லாதே..."

"நந்தினி.. பவன் உனக்கு எல்லா வகையிலும் மேட்ச்ஆனவன்..."

"லதா..."

நந்தினி.. கண் கலங்கத் தோழியை நிமிர்ந்து பார்த்தாள்.. அவளது முகம்.. திருவிழாக் கூட்டத்தில் தொலைந்து போன

குழந்தையின் முகமாக இருந்தது... எல்லாவற்றையும் தொலைத்து விட்ட சோகம் அவள் விழிகளில் தென்பட்டது...

# 27

"லதா.. மனம் என்பது நாம் சொல்வதை உடனே கேட்டு விடுமா..? பவன் அழகானவன்தான்.. என் மேல் அன்பானவன் தான்.. என்னைக் காதலிக்கிறவன்தான்.. ஆனால் அவன் மேல் எனக்குக் காதல் வரவில்லையே.. நான் என்ன செய்வது...?"

"கொஞ்ச நாள் போனால் நீ அந்த ஆதித்யனை மறந்து விடுவாய் நந்தினி..."

"எனக்கு அப்படித் தோன்றவில்லை.. இந்த ஒன்னே கால் வருடமாக அவன் நினைவு என் நெஞ்சில் இருக்கிறது.. மறையவில்லை... இத்தனை நாள் இடைவெளியில் மறக்க முடியாதவனை.. என் வாழ்நாளில் எப்போது என்னால் மறக்க முடியும் லதா..?"

"அதற்காக மனதிற்கு நீ அடிமை ஆகலாமா..? அதை ஒரு கட்டுக்குள் கொண்டு வர வேண்டாமா..?"

"பெரிய பெரிய ஞானிகளால் முடியாதது.. என்னால் மட்டும் முடிந்து விடுமா..? நான் சாதாரண மனுஷி லதா.."

"ஆனால்.. இத்தனை அன்பிற்கு அந்த ஆதித்யன் தகுதியானவன் இல்லையே..."

"இருக்கலாம்.. ஆனால் இந்த அன்பை அவர் மேல் வைக்க எனக்குத் தகுதியிருக்கிறது லதா..."

"நந்தினி உன்னை.. உன் அன்பை மதிக்காதவனை நீ கௌரவப் படுத்துகிறாய்ன்னு நான் நினைக்கிறேன்.."

"இல்லை.. இனி ஒரு போதும் நானாக ஆதித்யனைத் தொடர்பு கொள்ளமாட்டேன்.. அவருக்குப் போன் செய்ய மாட்டேன்.. என் அன்பைச் சொல்ல மாட்டேன்.. என் இருப்பிடத்தைத் தெரியப்படுத்த மாட்டேன்.. இந்த நந்தினி ஒன்றும் கிள்ளுக் கீரையில்லை லதா..."

அது லதாவிற்கும் தெரியும்.. எனவே மௌனம் சாதித்தாள் அவள்.. நந்தினி தொடர்ந்து பேசினாள்...

"அவரை நான் என் மனதில் ஓர் உயர்ந்த இடத்தில் வைத்திருந்தேன் லதா.. அவராக என் மதிப்பிலிருந்து சறுக்கி விட்டார்.. நந்தினியின் ஒரு முகம்தான் அவருக்குத் தெரியும்.. என் பாராமுகம் பற்றி அவருக்குத் தெரியாது.. அதை அவர் தெரிந்து கொள்ளும் நாள் கட்டாயம் வந்துதான் தீரும்..."

"நீ உன்னைப் பற்றி மட்டும் யோசி நந்தினி..."

"இனி எனக்கென்ன இருக்கிறது..? வேலை இருக்கிறது.. என்னை மறந்து இருபத்து நான்கு மணி நேரமும் வேலை செய்தால்.. அதில் என் வேதனைகளை மறந்து விடுவேன்..."

"யாரோ ஒரு ஆளிற்காக நீ உன்னையே வருத்திக் கொள்ளனுமா...?"

"இது அவருக்காக என்னை வருத்திக் கொள்ளும் வருத்தமல்ல.. புரிந்து கொள்ளப் படாமல் போய் விட்டதால் ஏற்படும் துயரம்.. இது உனக்குப் புரியாது லதா.. ஏன்.. அவருக்கும் புரியாது.. ஒரு நாள் புரிந்து கொண்டு என் அன்பை நாடுவார்.. அப்போது அதைக் கொடுக்க நான் இருக்க மாட்டேன்.."

"ச்சு... போடி.."

"அதிக அன்பு வைத்ததால் என்னை எளிதாக நினைத்து விட்டார் போல.. என் அன்பும் எளிதானது அல்ல.. நானும் எளிதானவள் அல்ல.. என்பதை நிரூபிக்காமல் நான் விட மாட்டேன்.."

"உன் வீட்டில் என்னைத்தான் முதலில் கேட்பார்கள்.."

"நான் எங்கேயிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியாதுன்னு சொல்லு.."

அன்று இரவு.. நந்தினி பெரிய லெதர் தோள் பையில்.. தன் துணிகளை அடுக்கினாள்.. சான்றிதழ்களை எடுத்துக் கொண்டாள்.. கிளம்பும் போது ஓர் நினைவு வர.. கொஞ்சம் பணத்தையும் எடுத்துக் கொண்டாள்.. வீட்டை விட்டு வெளியேறி விட்டாள்..

"நந்தினி..."

திரும்பிப் பார்த்தாள்.. ஆஷா அருகில் வந்தாள்..

"என்ன நந்தினி.. கடலையே வெறித்துப் பார்த்துக் கிட்டு எவ்வளவு நேரம்தான் நிற்ப..?"

நந்தினி வெறுமையாகப் புன்னகைத்தாள்.. அவர்கள் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்..""

"உன் கிட்ட இது ஒன்று இருக்கு.. எதற்கெடுத்தாலும் சிரித்து வைக்கிறாய்.. பேச மாட்டேன் என்கிறாய்.. அந்தச் சிரிப்பாவது கொஞ்சம் அகலமாக.. அதிகமாகச் சிரிக்கிறாயா என்றால்.. அதுவும் இல்லை.. அதிலும் சிக்கனமாய் இருக்கிறாய்.. ஏன் நந்தினி இப்படி இருக்கிற.."

நந்தினி சின்னதாய்ச் சிரிக்க முயல.. அவசரமாய் ஆஷா தடுத்தாள்..

"போதும்.. போதும்.. உன் டிரேட் மார்க் சிரிப்பை ஆரம்பித்து விடாதே.. ஒன்றைக் கவனித்தாயா..?"

ஆஷா தன் பேச்சை ஒரு வினாடி நிறுத்திவிட்டு நந்தினியைப் பார்க்க.. அவள் அமைதியாக நடந்து வந்து கொண்டிருந்தாள்..

"ஏனென்று கேட்க மாட்டாயா..?"

"ஏன்..?"

"உன் ஊரும் டூரிஸ்ட் ஸ்பாட்.. என் ஊரும் டூரிஸ்ட் ஸ்பாட்.. எப்படி..."

என்னவோ பெரிய கண்டுபிடிப்பைச் சொல்வது போல் ஆஷா பெருமையாகச் சொல்வதைக் கேட்டு விட்டு..

"அப்படியா.." என்று உப்புச்சப்பில்லாத ஒரு பதிலுடன் நந்தினி நடையைத் தொடர்ந்தாள்..

'ம்ம்... இவள் கிட்டப் பேசுவதற்கு எனக்கு நானே பேசிக்கலாம்..' ஆஷா தலையில் அடித்துக் கொண்டாள்..

ஆதித்யன் தன் முன் இருந்த லேப் டாப்பில் இருந்து தலை நிமிர்ந்தான்..

"ஓகே ரமேஷ்.. இது போலவே செய்து முடித்து விடு.."

"அப்புறம் ஆதித்யா.. அந்த ஜப்பான் கம்பெனிக்காரங்க..."

"ப்ளீஸ் ரமேஷ்.. ஐ ஆம் ஸோ டயர்டு.. ஐ வாண்ட் டு டேக் ரெஸ்ட்..."

"உன் வீட்டிற்குப் போகப் போகிறாயா...?"

"இல்லை.. கொடைக்கானலுக்குப் போகப் போகிறேன்.."

"எப்போது வருவாய்...?"

"ம்ம்.. ஜஸ்ட் ஒன் வீக்..."

ஆதித்யனின் முகத்தில் என்றுமில்லாத ஒளிர்வை உணர்ந்தான் ரமேஷ்.. போன வருடத்தில் கொடைக் கானலில் இருந்து திரும்பி வந்த பின்னால்தான்.. ஆதித்யன் அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டான் என்பது அவனுக்கு நினைவுக்கு வந்தது..

"வாட் ரமேஷ்..."

"இன்று புதிதாகத் தெரிகிறாய்..."

"ஹா... ஹா..."

"ஆதித்யா..."

"சொல்லு ரமேஷ்..."

"கொடைக்கானலில் யார் இருக்கிறார்கள்...?"

"ஒரு தேவதை..."

"நினைத்தேன்..."

"அவள் பெயர் நந்தினி.."

"ஓ..."

"கொட்டுகிற அருவி போல எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பாள்.. மற்றவர்களைச் சிரிக்க வைத்துக் கொண்டே இருப்பாள்..."

"இன்ட்ரெஸ்டிங்...."

"அவளைச் சந்தித்த பிறகுதான் நான் சிந்திக்க ஆரம்பித்தேன்..."

"ஈஸிட்...?"

"யெஸ் ரமேஷ்.. அவள் துடுக்கானவள்.. விளையாட்டுத்தனம் நிறைந்தவள்.. ஆனால்.. அவள்தான் என் வாழ்க்கையை மாற்றி அமைத்தாள் என்று சொன்னால் நீ நம்புவாயா ரமேஷ்.."

"நீ சொல்லும் போது நம்பாமல் இருக்க முடியுமா..?"

"பாதை தெரியாமல் நான் தவித்த போது.. என் கைப் பிடித்துப் பாதையைக் காட்டினாள்.. இன்று நான் தொலை தூரம் சென்று விட்டேன்.. இன்னும் அவளைப் போய்ப் பார்க்க முடியவில்லை.."

"நீ இப்படியென்று இப்போதுதான் சொல்கிறாய்.."

"ம்ம்.. நான் ஜெயிக்க வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள்.. இன்னும் அதிகமாக ஜெயித்து விட்டு அவள் முன்னால் போய் நிற்க வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன்.."

"நீ யார் மீதும் இவ்வளவு அபெக்ஷனாக இருக்க மாட்டியே..."

"அவள் மீது இருப்பேன்.. அவள் ஒரு நதியைப் போன்றவள்.. என் சிந்தனையைத் தூண்டியவள்.."

ஆதித்யன் கண் மூடிக் கொண்டான்.. அவன் மனம் பாடியது...

"சந்தித்தேன் பாய்கின்ற நதியை...
சிந்தித்...தேன்... பாய்கின்ற நதியை...
தேன்பாயும் நதி.. அது அவள்தானா...?"

ஆதித்யனுக்கு மட்டும் சிறகிருந்தால் அப்போதே.. கொடைக்கானலுக்குப் பறந்திருப்பான்..

"ரமேஷ்.. மதுரைக்கு பிளைட் டிக்கெட் புக் பண்ணி விடு.."

"ஓகே ஆதித்யா..."

"எனக்கு ஒரு கார் வேண்டும்.."

"நீ ஏர்போர்ட்டிலிருந்து வெளியே வரும்போது.. உனக்காகக் கார் காத்து நிற்கும்..."

அடுத்து ஆறாவது மணியில்.. ஆதித்யனின் கார்.. கொடைக்கானல் மலையேறிக் கொண்டிருந்தது..

'என்னை அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாள்...' அவன் தனக்குள் புன்னகைத்துக் கொண்டான்..

'படிப்பை முடித்திருப்பாள்.. வேலைக்குப் போயிருப்பாளோ.. ஊஹீம்... அவளாவது.. ஒரு இடத்தில் அடங்கி உட்கார்ந்து வேலை செய்கிறதாவது...'

காரிலிருந்த பழைய பாடல் சிடியைப் போட்டு விட்டான்..

"பார்க்கத் தெரிந்தால்...

பாதை தெரியும்...

பார்த்து நடந்தால்..

பயணம் தொடரும்...

பயணம் தொடர்ந்தால்..

கதவு திறக்கும்...

கதவு திறந்தால்...

காட்சி கிடைக்கும்...

காட்சி கிடைத்தால்.. கவலை தீரும்..

கவலை தீர்ந்தால் வாழலாம்..."

பாடலோடு கூடச் சேர்ந்து தானும் வாய் விட்டுப் பாடிக் கொண்டே காரை ஓட்டினான் ஆதித்யன்..

"கன்னி இளமை என்னை அணைத்தால்...

காலம் முழுதும் வாழலாம்...

வாழச் சொன்னால் வாழ்கிறேன்..

மனமா இல்லை வாழ்விலே...?

ஆழக்கடலில் சோலை போலே...

அழைத்துச் சென்றால் வாழ்கிறேன்..."

பாடல் முடிந்த பின்னாலும்.. அதே பாடலை விசிலடித்துப் பாடிக்கொண்டே ஆதித்யன் கொடைக்கானலில்

நுழைந்தான்...

'ஏதேனும் ஸ்டார் ஹோட்டலில் ரூம் போட்டு விட்டு.. அவளைப் பார்க்கப் போகலாமா..?' என்று நினைத்தவன்.. அந்த எண்ணத்தை உடனே கைவிட்டான்..

'ஊஹீம்.. நந்தினி வருத்தப்படுவாள்...'

அவளது வீட்டின் முன் அவனது கார் சென்று நின்றது.. உற்சாகமாக இறங்கி கேட்டைத் திறந்து விட்டு.. காரை உள்ளே ஓட்டிச் சென்று நிறுத்தினான் அதித்யன்..

காரின் சத்தம் கேட்டு வீட்டுக்குள் இருந்து ஓடிவந்த வருணும்.. தருணும்.. காரிலிருந்து இறங்கிய ஆதித்யனைப் பார்த்ததும் அருகில் வராமல் அப்படியே நின்றார்கள்..

# 29

"ஹாய் வருண்... ஹலோ தருண்.. என்ன அப்படிப் பார்க்கறீங்க... அங்கிளை நினைவு இல்லையா..?" கலகலவென்று பேசிய வண்ணம்.. காரை விட்டு இறங்கினான் ஆதித்யன்..

அதற்குள் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த மகேந்திரன்..."வாங்க சார்.." என்று சோர்வாகக் கை கூப்பி வரவேற்றார்...

'ஏன் இப்படிச் சோர்ந்து தெரிகிறார்..?' என்று நினைத்த வண்ணம்.. தன் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான் ஆதித்யன்...

"என்ன சார் இந்த நேரம் வீட்டில் இருக்க மாட்டிங்களே.. இன்றைக்கு என்ன.. அதிசயமாய் வீட்டில் இருக்கீங்க..."

"எனக்கு உடம்பு சரியில்லை.. தெய்வா ஹோட்டலைக் கவனித்துக் கொள்கிறான்.."

"அடடே.. என்ன உடம்புக்கு...?"

"அது டாக்டர் நிறையச் சொல்கிறார்.. நீங்கள் முதலில் வீட்டுக்குள் வாங்க சார்.. மலர்.. யார் வந்திருக்காங்கன்னு பாரு..."

அவரது குரல் கேட்டு ஆவலாய் மலர்விழியும்.. ஆனந்தியும் ஓடிவந்தார்கள்.. ஆதித்யாவைக் கண்டதும் அவர்களின் முகம் கூம்பி விட்டது...

'ஏன் இப்படி பிஹேவ் பண்ணுகிறார்கள்.. ஒரு வேளை.. நான் வந்ததில் இவர்களுக்கு விருப்ப மில்லையோ..' என்று நினைத்தவன்..

'சேச்சே.. அப்படியெல்லாம் இருக்காது.. நந்தினியின் வீட்டில் என்னை வேற்றாளாக நினைப்பார்களா...?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்..

"ஹாய் ஆன்ட்டி.. ஹவ் ஆர் யு..?"

"நல்லா இருக்கிறேன்.. நீங்க எப்படி இருக்கீங்க.."

"ஐ ஆம் ஸோ ஃபைன்.."

ஆதித்யன் இயல்பாய் ஹால் சோபாவில் அமர்ந்தான்.. அவனது விழிகள் நந்தினியைத் தேடின..

"பிஸினெஸ் வீக்லியில் உங்களைப் பற்றித்தானே எழுதுகிறார்கள்.. நிறையப் படித்தேன்.. கங்கிராஜுலேசன்ஸ்.. சரிந்து கிடந்த தொழிலை அறுபது நாள்களில் தூக்கி நிறுத்தி விட்டீர்களாமே..."

மகேந்திரன்... தொய்வான புன்னகையுடன் பேசினார்.. அவரது தொய்வைக் கவனிக்காத ஆதித்யன்.. அவரது பேச்சை நந்தினி கேட்க வேண்டுமே.. என்று விரும்பினான்..

'எங்கே போய் விட்டாள்...? உள்ளே இருக்கிறாளா..?'

"நீங்க நம்ம வீட்டை மறக்காமல் வந்ததில் எனக்கு ரொம்ப சந்தோசம்.."

"மறக்க முடியுமா...?"

'நந்தினி எங்கே என்று கேட்டு விடலாமா...?'

ஆனந்தி கையில் காபிக் கோப்பையோடு வந்தாள்..

"எப்படி இருக்கீங்க அக்கா..."

அவள் 'நன்றாக இருக்கிறேன்..' என்ற பாவனையில் தலையை மட்டும் அசைத்தாள்..

காபியைக் குடித்தவாறு தொழில் பற்றி மகேந்திரன் கேட்ட கேள்விகளுக்குப் பதிலைச் சொல்லிக் கொண்டிருந்தான்

ஆதித்யன்..

"வருண்..! அங்கிளுக்கு ரூமைக் காண்பி.. நீங்க போய்க் குளித்து விட்டு வாங்க சார்.. சாப்பிடலாம்..."

கனிவாகக் கூறிய மகேந்திரனிடம் அவரது மகளைப் பற்றி எப்படி விசாரிப்பது என்ற நினைவுடன் ஆதித்யன் எழுந்து கொண்டான்..

"எப்படிப் படிக்கிற வருண்..."

"நல்லாப் படிக்கிறேன் அங்கிள்.."

அதற்கு மேல் பேசாமல் ஆதித்யனை அறைக்குள் விட்டு விட்டுத் திரும்பப் போனான் வருண்...

'இவனுக்கு என்னவாயிற்று.. பேச்சுக்குப் பேச்சு எதிர்ப் பேச்சு பேசுகிறவன் இன்றைக்கு வாயடைத்துப் போய் இருக்கிறானே...'

"வருண், நில்லு..."

"என்ன அங்கிள்.."

"நந்தினி எங்கே...?"

அவன் பதில் சொல்லாமல் மாடிப்படியைப் பார்க்க ஆரம்பித்தான்.. அவனது மௌனம் ஆதித்யனுக்குப் புதிராக இருந்தது..

"என்ன வருண்.. பதில் சொல்ல மாட்டேன் என்கிறாயே.."

"நான் கீழே போகிறேன் அங்கிள்.."

"நில்லு வருண்.. நான் கேட்டதற்குப் பதில் சொல்லி விட்டுப் போ..."

"அம்மா கூப்பிடுகிறாங்க..."

"எனக்குக் கேட்கவில்லையே... உனக்கு மட்டும் கேட்டதா..?"

"நான் படிக்கப் போக வேண்டும் அங்கிள்..."

"படி... நான் வேண்டாம்ன்னு சொல்லவில்லையே.. நந்தினி எங்கேயென்று சொல்லிவிட்டுப் போய்ப் படி.. உன்னை யார் தடுத்தது..."

"வருண்..." என்றபடி ஆனந்தி மாடியேறி வந்தாள்..

"இதோ அம்மாவே வந்துட்டாங்க.. நான் போகிறேன் அங்கிள்.."

வருண் சிட்டாகப் பறந்து விட்டான்.. ஆனந்தி ஆதித்யனின் முகத்தைப் பார்த்துக் கொண்டே அருகில் வந்தாள்.. அவள் பார்வையில் எதுவோ இருந்தது...

"குளித்து விட்டு வாங்க தம்பி..."

"அக்கா.. நந்தினி எங்கே...?"

அவள் அவனையே ஒரு கணம் இமைக்காமல் பார்த்தாள்..

"வருணிடம் இதைத்தான் கேட்டுக் கொண்டி ருந்தீங்களா..?"

"ஆமாம்.. ஆனால் அவன் பதில் சொல்ல மாட்டேன் என்கிறானே.. நந்தினி எங்கே...?"

"அவன் மட்டுமில்லை.. அவனை விடச் சின்னவனான தருணிடம் நீங்கள் கேட்டாலும் அவனும் பதில் சொல்ல மாட்டான்.."

"அது தான் ஏன்...?"

"ஏன்..? அழகாகக் கேட்டு விட்டீங்க.. இந்த ஏன் என்ற கேள்வியை உங்களிடம் கேட்க வேண்டுமென்று தான் நானும் இத்தனை நாளாய்க் காத்திருக்கிறேன்..."

ஆனந்தியின் முகம் கோபச் சிவப்பில் இருந்தது.. அவள் ஆதித்யனின் முகத்தை ஒரு குற்றவாளியைப் பார்ப்பது போல் பார்த்தாள்...

# 30

ஆனந்தி அறிவாளி.. மலர்விழியை விட அவளுக்குச் சூட்சமபுத்தி மிகவும் அதிகம்.. எல்லாத்தகுதிகளையும் உடைய பவனை மணக்க நந்தினி சம்மதிக்காததற்கான ஒரே காரணம்... அவள் மனம் காதலில் சிக்குண்டு இருப்பதுதான் என்று அவள் அனுமானித்து விட்டாள்.. ஆனால் நந்தினியின் மனதிலிருந்தது யார் என்று தான் அவளுக்குத் தெரியவில்லை.. தெரிந்திருந்தால் நந்தினிக்கு வழி சொல்லியிருந்திருப்பாள்...

நந்தினி வீட்டை விட்டு வெளியேறியவுடன்.. வீடு தலை கீழாக மாறிப் போனது..

அப்பா...!

என்னைத் தேட வேண்டாம்.. உங்கள் கண்முன் நான் இருந்தால் கல்யாணப் பந்தத்தில் சிக்க வைப்பதிலேயே நீங்கள் குறியாக இருப்பீர்கள்.. அதனாலேயே விலகிப் போகிறேன்.. பயம் வேண்டாம்.. எனக்கு வேலை கிடைத்திருக்கிறது.. இந்த உலகின் ஏதாவது ஒரு மூலையில் நான் உயிருடன்தான் இருப்பேன்..

அன்பு மகள்,

நந்தினி

அவளுடைய கடிதம் சொல்லிய செய்தியைப் படித்தவுடன் மகேந்திரன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்தார்.. மருத்துவமனைக்கு அவரைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள்.. உடல் தேறி வந்த பின்னும் வீட்டிற்குள்ளேயே ஒடுங்கிப் போனார் மகnந்திரன்...

மலர்விழி ஒரு பக்கம் விட்டத்தை வெறித்துக் கொண்டு அமர்ந்திருக்க.. தெய்வேந்திரன் கையைப் பிசைந்து கொண்டு நிற்க.. ஆனந்தி வீட்டின் பொறுப்பைக் கையில் எடுத்துக் கொண்டாள்..

"ஏங்க.. இப்படி மலைச்சு.. மலைச்சு.. ஆளுக்கொரு பக்கமாக நின்னுக்கிட்டிருந்தா என்ன அர்த்தம்...?"

"என்ன செய்யணும்னு தெரியலையே ஆனந்தி..."

"நீங்க போய் ஹோட்டலைத் திறங்க..."

"அண்ணன் இப்படியிருக்கும் போது.. அவரில்லாமல் நான் மட்டும் போய் ஹோட்டலைத் திறப்பதா...?"

"மாமாவிற்கு இப்போது தேவைப்படுவது மன அமைதிதான்... அவர் ரெஸ்ட் எடுக்கட்டும்.. நீங்க பிழைப்பைக் கவனிங்க.. ஒரு நாள் நம் ஹோட்டலுக்கு வருகிறவங்க வேறு பக்கம் போய்ப் பழகிட்டாங்கன்னா.. நஷ்டம் யாருக்கு..? நமக்குத்தான்.. ஹோட்டலைத் திறங்க.."

ஆனந்தி போட்ட அதட்டலில் தெய்வேந்திரன் ஹோட்டலைத் திறக்க ஓடினார்...

"மாமா.. இப்ப ஒன்றும் நடந்து விடவில்லை.. நந்தினிக்கு நாம ஏற்பாடு பண்ணிய கல்யாணம் பிடிக்கலை.. அதை நம்மிடம் சொன்னாள்.. நாம் கேட்க வில்லை.. கல்யாணத்தை நிறுத்த வேறு வழி தெரியாமல் வேலை தேடிக் கொண்டு போய் விட்டாள்.. கொஞ்ச நாள் ஆகட்டும்.. நாம் மத்தவங்களுக்குப் புரியாதது போல.. நந்தின்க்கு மட்டும் புரிவது போல.. விளம்பரம் ஒன்னை.. டிவியிலும்.. பேப்பர்களிலும் கொடுக்கலாம்.. அவள் திரும்பி வந்து விடுவாள்..."

"இப்ப அவ என்ன ஆனாளோ தெரியலையேம்மா..."

"நந்தினி புத்திசாலிப் பெண்.. தற்கொலை முடிவிற் கெல்லாம் போக மாட்டாள்.. ஒரு நாள் நம்மைத் தேடிக் கட்டாயம் வருவாள்.."

"அவள் சொல்வதை நான் கேட்டிருக்க வேண்டும்.."

"இனிக் கேட்டு விட்டால் போகிறது..."

"இப்போது அவள் இல்லையே.."

"வந்து விடுவாள்ன்னு சொன்னேனே.."

மகேந்திரனை மனம் தெளிய வைத்தாள்.. நேரா நேரத்திற்கு மாத்திரை.. மருந்து கொடுத்துக் கவனித்துக் கொண்டாள்.. மூலையில் முடங்கி விட்ட மலர்விழியை எழுப்பிச் சாப்பிட வைத்தாள்..

"என்னை விட்டு விடு ஆனந்தி.. எனக்குச் சாப்பாடு வேண்டாம்.."

"ஏன் வேண்டாம்..? உயிர் வாழ உடம்பில் தெம்பு வேண்டாமா...?"

"உயிரோடு இருந்துதான் என்ன பண்ணப் போகிறேன்.. என் மகள் என் கையைப் பிடித்துக்கிட்டுக் கெஞ்சினாள்.. அவள் கெஞ்சுவதைப் நான் மதிக்க வில்லை.. அவள் வீட்டை விட்டுப் போய் விட்டாள்.. பெற்ற மகளை வீட்டை விட்டுத் துரத்தி விட்ட பாவி நான்.. எனக்குச் சாப்பாடு வேண்டாம்.."

"ச்சு.. அக்கா... எழுந்து உட்காருங்கள்.. அவள் கெஞ்சும் போது கண்டு கொள்ளாமல் இருந்து விட்டு.. இப்போது புலம்பி என்ன பிரயோஜனம்..? அவள் திரும்பி வந்த

பின்னால்.. அவள் மனம் கோணாமல் வைத்துக் கொள்ளுங்கள்.. எல்லாம் சரியாகி விடும்..."

மலர்விழியை எழுப்பி.. நடமாட வைத்தாள்.. ஹோட்டல் வேலைகளை மகேந்திரனின் தலையில் சுமத்தாமலும்.. வீட்டு வேலைகளில் மலர்விழியை இழுக்காமலும்.. தன் கணவரும்.. தானுமாகப் பார்த்துக் கொண்டாள்..

மகேந்திரனும்.. மலர்விழியும்.. சாதாரணமாய்ப் பேசிக் கொண்டிருந்தாலும்.. இருவரின் மனமும் எந்த அளவுக்குப் பாதிக்கப் பட்டிருந்தது என்பதை ஆனந்தியால் புரிந்து கொள்ள முடிந்தது...

அப்போது தான் ஓர் நாள்... ஆனந்தி அதைக் கண்டாள்..

நந்தினியின் அறையை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்த போது.. மர பீரோவில்.. அவளது துணிகளுக்கு அடியே வரிசையாய் 'பிஸினெஸ் வீக்லி' வார இதழ்கள் அடுக்கப்பட்டிருந்தன...

'இதை ஏன்.. மறைவாய் வைத்திருக்கிறாள்..?' ஆனந்தியின் மூளை சுறுசுறுப்பானது.. எடுத்துப் படித்துப் பார்த்தாள்.. அவற்றில் பொதுவாக இருந்த ஒரே அம்சம்... 'ஆதித்யன்..'

அவனைப் பற்றிய கட்டுரைகளில் உள்ள சில வரிகள் பேனாவினால் அடிக் கோடிடப் பட்டிருந்தன.. சிலவற்றில் ஆதித்யனின் போட்டோ பிரசுரமாகியிருந்தது.. அதன் அருகே...

'ஆதித்யன்... யு டிட் இட்...' என்று எழுதியிருந்தாள்.. நந்தினி..

ஆனந்தி அமைதியாக அமர்ந்து யோசிக்க ஆரம்பித்தாள்.. நந்தினியின் இயல்பு ஆதித்யன் வந்து போன பின் மாறி விட்டது அவளது மனதில் பட்டது..

கொட்டும் அருவியாக இருந்தவள்.. அமைதியான நதி போல ஆகிவிட்டது ஏன் என்பது அவளுக்குப் பிடிபட்டு விட்டது...

இதை ஏன் அவள் யோசிக்காமல் போனாள்.. என்று ஆனந்தி தன்னைத் தானே கடிந்து கொண்டாள்..

நந்தினியின் மனதில் இருந்தது யார் என்று அவ்வளவு தூரம் ஆராய்ந்தாளே.. அது ஆதித்யன்தான் என்று ஏன் அவளால் அறிய முடியவில்லை...

அவ்வளவு பெரிய கோடீஸ்வரன்.. இந்தியாவே அறிந்த வி.ஐ.பி... உலகம் சுற்றும் வாலிபன்.. அவனைப் போய் நம் வீட்டுப் பெண் நினைப்பாளா என்று நினைத்து விட்டதுதான் காரணம் என்று அவளுக்குப் புரிந்தது..

ஆதித்யனை நினைத்துக் கொண்டுதான் பவனை அவள் மறுத்திருக்கிறாள் என்பது புரியவும்.. ஆனந்தியின் மனம் லேசாக வேலை செய்ய ஆரம்பித்தது...

இப்படியொரு இக்கட்டில் நந்தினி மாட்டியிருக்கும் போது ஆதித்யனைத் தொடர்பு கொள்ளாமல் ஏன் விட்டாள்..?

ஒரு வேளை.. நந்தினியின் மனதிலிருந்தது ஒரு தலைக் காதலோ என்ற எண்ணம் அவளுக்கு...

ஆதித்யன் நந்தினியைக் காதலித்திருந்தால்.. அவளைக் காப்பாற்ற உடனடியாகப் பறந்து வந்திருக்க மாட்டானா..? அத்தோடு.. மகேந்திரன் ஆத்தியனுக்குப் பாத பூஜை செய்து வணங்குபவர்.. அவன் மேல் மதிப்பும்.. மரியாதையும் வைத்திருப்பவர்.. அவரிடம் மட்டும் நந்தினி ஆதித்யனைக் காதலிப்பதாகக் கூறியிருந்தால் மகிழ்ந்து போயிருப்பார்...

அப்படியிருக்க நந்தினி ஏன்.. தன் காதலை வெளிப் படுத்தவில்லை...?

ஆதித்யன் ஏன் அவளின் உதவிக்கு வரவில்லை..?

சொல்லாமல் வீட்டை விட்டு ஏன் அவள் வெளியேறினாள்...?

இத்தனை கேள்விகளும் சொல்லிய விடை ஒன்றே ஒன்றுதான்.. அது.. நந்தினி ஆதித்யனைக் காதலிக்கிறாள்.. ஆனால், ஆதித்யன் நந்தினியைக் காதலிக்கவில்லை...

ஆனந்தியின் மனதில் யாரோ ஒரு பெரிய பாறையைத் தூக்கி வைத்தது போலக் கனமானது...

நந்தினியின் வாழ்க்கை சீராகாமல் சிக்கலாகி விட்டதோ என்ற கவலை அவளுக்குள் எழுந்தது..

பவனின் வீட்டிலிருந்து பஞ்சாயத்துப் பேச ஆள்கள் வந்து விட்டார்கள்.. மகேந்திரனும்.. மலர்விழியும் எப்படி அவர்களை எதிர் கொள்வது என்று கலங்கிப் போய் விட்டார்கள்.. அவர்களை அறையை விட்டு வெளியே வர வேண்டாமென்று சொல்லி விட்டு... ஆனந்தியே அவர்களிடம் பேசினாள்...

"பவன்.. இந்தக் கல்யாணத்தில் நந்தினிக்கு விருப்பமில்லை..."

பவனின் முகம் கருத்து விட்டது.. அவனின் தந்தை சத்தம் போட்டார்..

"ஏம்மா.. நிச்சயம் முடிந்த பின்னர்.. இப்படிச் சொன்னால் என்ன அர்த்தம்...?"

"என்னங்க செய்கிறது.. பொண்ணு தூக்க மாத்திரை சாப்பிடுகிற அளவுக்குப் போயிடுச்சு.. இதுக்கு மேல.. பொண்ணோட உயிரா.. இல்லை, அதோட கல்யாணமான்னு பார்த்தால் உயிர்தானேங்க முக்கியம்...?"

"அது சரிம்மா.. பிடிக்கலைன்னு அந்தப் பொண்ணு சொன்ன பின்னாலேயும் எங்களைப் பொண்ணு பார்க்க ஏன் வரச் சொன்னீங்க..?" பவனின் அம்மா ஆத்திரப்பட்டாள்..

"இதை உங்கள் மகன்கிட்ட நீங்க கேட்டால் நல்லதுங்கம்மா..."

"என்னம்மா சொல்கிற...?"

"உங்கள் மகன் மூன்று வருடமாய் நந்தினியைக் காதலிப்பதாய்ச் சொல்லிக் கொண்டே இருந்திருக்கிறார்.. மூன்று வருடமும் நந்தினி கல்யாணத்திற்குச் சம்மதிக்க மாட்டேன்னு சொல்லியிருக்கிறாள்.. உண்மையா.. இல்லையான்னு கேளுங்க..."

பவனின் முகம் விழுந்து விட்டது.. இதை வைத்து அவர்களைச் சமாளித்து அனுப்பி வைத்து விட்டாள் ஆனந்தி...

ஆனால் நந்தினி...?

அவள் என்ன ஆனாள்.. ஆதித்யனுக்கு அவளுடைய காதல் தெரியுமா.. தெரியாதா.. என்ற குழப்பத்துடன்.. தவித்தாள் ஆனந்தி...

இதற்கெல்லாம் விடை சொல்லக் கூடியவள் நந்தினி தான்.. அவள் இருக்குமிடம் தெரியாமல்... போய்.. ஒளிந்து கொண்டு விட்டாளே..

வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியாமல் நந்தினியைத் தேடும் முயற்சியை ஆனந்தி ஆரம்பித்திருந்த போது தான்.. ஆதித்யன் கொடைக்கானலுக்கு வந்து நின்றான்...

ஆனந்தி அவனது நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தாள்.. எல்லோரிடமும் பேசிக் கொண்டிருந்தாலும்.. அவனது விழிகள் நந்தினியைத் தேடுவதை அவள் கண்டு கொண்டாள்..

'அப்போ... இவன் மனதில் நந்தினி இருக்கிறாளா..?'

இருந்தாலும் அதைத் தெளிவாய்த் தெரிந்து கொள்ள விரும்பினாள் ஆனந்தி.. வருணுடன் ஆதித்யன் மாடிப் படியேறியதும்.. பின் தொடர்ந்தாள்.. ஆதித்யன் வருணிடம் நந்தினியைப் பற்றி விசாரித்ததும்.. அவளுடைய சந்தேகம் ஊர்ஜிதமாகி விட்டது.. வருணை அனுப்பிவிட்டு நின்ற ஆனந்தியிடமும் அதே கேள்வியைக் கேட்டான் ஆதித்யன்..

"வருணிடம் மட்டுமில்லை.. தருணிடம் நீங்கள் கேட்டாலும் இதற்கான பதிலைச் சொல்ல மாட்டான்.."

"ஏன்...?"

"ஏன்... அழகாய்க் கேட்டு விட்டீர்கள்.. இந்த ஏன் என்ற கேள்வியை உங்களிடம் கேட்க வேண்டு மென்றுதான் நானும் காத்துக் கொண்டிருக்கிறேன்.."

"என்ன சொல்கிறீங்க அக்கா...?"

"ஏன் எங்கள் நந்தினியைக் கைவிட்டிங்க தம்பி...?"

ஆதித்யன் அதிர்ந்து போய் ஆனந்தியைப் பார்த்தான்.. அவள் சொல்வது அவனது மூளையில் ஏறியது.. ஏன் இப்படிச் சொல்கிறாள்.. என்று விளங்காவிட்டாலும்...

நந்தினிக்கு ஏதோ நிகழ்ந்திருக்கிறது என்பது மட்டும் அவனுக்குப் புரிந்து விட்டது..

# 32

அன்று மரணத்தின் விளிம்பிலிருந்து ஆதித்யனைக் காப்பாற்றிய போது... நந்தினி.. 'என்னைக் கைவிட்டு விடாதீர்கள் சார்...' என்று விளையாட்டாகக் கேட்டாள்..

இன்று 'நந்தினி எங்கே...?' என்ற கேள்விக்கு...

'ஏன் எங்கள் நந்தினியைக் கைவிட்டிங்க தம்பி...' என்று அவளுடைய சித்தி கேட்கிறாள்...

இதற்கு என்ன பதில் சொல்வது...?

"என்ன நடந்தது அக்கா...?"

"நந்தினி.. வீட்டில் இல்லை..."

"வீட்டில் இல்லையா..? எங்கே போயிருக்கிறாள்...?"

"அது எங்களுக்குத் தெரிந்தால் ஓடிப் போய்க் கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்க மாட்டோமா..? அவள் எங்கே போய் விட்டாள் என்று தெரியாமல் தான் மாமா ஹார்ட் அட்டாக்கில் விழுந்தார்.. அவர் பிழைத்தது மறு பிழைப்பு..."

"ஐயையோ..."

"அக்கா இடிஞ்சு போய் விட்டத்தைப் பார்த்துக்கிட்டு வீட்டுக்குள்ளே மூலையில் முடங்கிக் கிடக்கிறாங்க.."

"எனக்கு இது தெரியாதே.."

"ம்ம்.. வருணும்.. தருணும் நீங்கள் சொன்னது போல் சமர்த்துப் பிள்ளைகள்.. நந்தினிக்குச் சென்னையில் வேலை கிடைச்சிருக்கு... அங்கேயே லேடிஸ் ஹாஸ்டலில் இருக்கிறாள்னு யார் கேட்டாலும் சொல்லச் சொல்லியிருக்கிறோம்.. எல்லோரிடமும் அப்படித்தான் சொல்கிறார்கள்.. உங்களிடம் பொய் பேசத் தயக்கம்.. அதனால் பதில் சொல்லாமல் இருக்கிறாங்க.."

ஆதித்யனின் உணர்வுகள் பொங்கின... அவனுடைய நந்தினி.. அவனைச் செலுத்திய நந்தினி.. அவனுக்கு உந்து சக்தியாக இருந்த நந்தினி.. இப்போது எங்கே போனாள்...?

"ஏன் அவள் வீட்டை விட்டுப் போனாள் அக்கா...?"

ஆனந்தியின் விழிகள் அவனை ஊடுருவின..

ஆதித்யனின் புருவங்கள் மேலேறின...

'ஏன் நந்தினியின் சித்தி இப்படிப் பார்க்கிறாள்...?'

ஆனந்தி ஒரு பெருமூச்சை வெளியேற்றினாள்.. பின் ஆழ்ந்த குரலில் கூறினாள்..

"நந்தினிக்குக் கல்யாண ஏற்பாடு பண்ணினோம்..."

ஆதித்யன் தூக்கிவாரிப் போட நிமிர்ந்தான்...

"என்னது..? நந்தினி அந்தக் கல்யாண ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொண்டாளா..?"

"இல்லை..."

இதைக் கேட்டதும் ஆதித்யனின் முகத்தில் பரவிய எல்லையற்ற திருப்தியைப் பார்த்த ஆனந்தி.. மெதுவாகக் கூறினாள்..

"ஆனால்.. அவளுடைய மறுப்பை வீட்டில் யாரும் லட்சியம் பண்ணவில்லை..."

"ஏன்..?"

"பவன்.. அவன்தான் நந்தினியை விரும்பிப் பெண் கேட்டு வந்த மாப்பிள்ளை..."

"அவன் நந்தினியின் கிளாஸ் மேட்டாயிற்றே.."

'இவ்வளவு தூரம் உனக்குத் தெரியுமா..?' என்ற வினாவை ஆனந்தியின் விழிகள் எழுப்புவதை உணர்ந்தான் ஆதித்யன்...

"ஆமாம்.. அவனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைத்திருக்கிறது.. ஊரில் சொத்துபத்து அதிகமுள்ள குடும்பம்.. நந்தினிக்கு அவனை விட நல்ல மாப்பிள்ளை கிடைக்கான்னு நாங்கள் நினைத்தோம்.."

'நீயிருப்பது எனக்குத் தெரியாது...' என்று சொல்லாமல் சொல்லின ஆனந்தியின் விழிகள்..

"அதற்காகவா.. நந்தினி வீட்டை விட்டுப் போய் விட்டாள்...?"

"ஆமாம்..."

"முட்டாள்.. என்னைச் சொல்லி விட்டு அவள் இப்படி ஒரு காரியத்தைச் செய்திருக்கிறாளே..."

"தம்பி.."

"சொல்லுங்க அக்கா.."

"நந்தினி ஏன் வீட்டை விட்டுப் போனாள்...? பவனைப் பிடிக்கவில்லையென்றால் வேறு யாரை அவளுக்குப் பிடித்திருக்கிறது..? இது பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா...?"

'கெட்டிக்காரி..' என்று நினைத்துக் கொண்டான் ஆதித்யன்.. நந்தினிக்கும்.. அவனுக்குமிடையே இருக்கும் உணர்வு என்ன என்பதை மறைமுகமாக வினவுகிறாள்..

அவன் நிமிர்ந்து அவளை நேராகப் பார்த்தான்..

"உங்களிடம் சொல்வதற்கு என்ன அக்கா..? நந்தினியை நான் சந்தித்த போது.. நான் மரணத்தின் விளிம்பில் நின்றேன்.. இமைக்கும் நேரத்தில் என் கைப்பிடித்து இழுத்து என்னைக் காப்பாற்றினாள்.. என் சிந்தனையைத் தூண்டினாள்.. வாழ வழி காட்டினாள்.. அவள் கொடுத்த சக்தியோடுதான் நான் என் தொழிலைக் காப்பாற்றத் திரும்பிப் போனேன்.. காப்பாற்றியும் விட்டேன்.."

"ஸோ.. நீங்கள் நந்தினியை வெறும் வழிகாட்டியாக மட்டுமே நினைத்திருக்கிறீர்கள்.."

"இல்லை.. என் வாழ்க்கையே அவள்தான்னு நினைக்கிறேன்.."

ஆனந்தியின் விழிகள் ஒளிர்ந்தன.. இவன் மனதில் நந்தினியின் மேல் இவ்வளவு காதல் இருக்கிறதா.. அப்படியிருக்கையில் ஏன் நந்தினி வீட்டை விட்டுப் போனாள்..?

"நந்தினியிடம் நீங்கள் பேசவேயில்லையா..?"

"இல்லை அக்கா..."

"ஏன்...?"

"எனக்கு இருபத்து நான்கு மணி நேரமும் போதாமல் நான் ஓடிக் கொண்டிருந்தேன்.. பசி.. தூக்கம்.. மறந்து என் தொழிலைக் காப்பாற்றப் போராடிக் கொண்டிருந்தேன்.."

"நந்தினியைக் காப்பாற்றப் போராட வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றவே இல்லையா...?"

ஆனந்தியின் கேள்வி ஆதித்யனின் இதயத்தைப் பிளந்தது..

# 33

"அவள் போராடிக் கொண்டிருக்கிறாள்னு எனக்குத் தெரியவே தெரியாது அக்கா.. தெரிந்தால் அவளை விட்டுக் குடுப்பேனா..?"

"இப்போதுதான் விட்டு விட்டீர்களே..."

"இல்லைக்கா.. அவளை நான் விட்டு விட மாட்டேன்.. இந்த உலகத்தின் எந்த மூலையில் அவளிருந் தாலும் கண்டு பிடிப்பேன்.."

"கண்டு பிடித்து...?"

"உங்கள் குடும்பத்தில் கொண்டு வந்து ஒப்படைப்பேன்.."

"அப்போதும் அவளைக் கைப்பிடிப்பேன்னு சொல்ல மாட்டேன் என்கிறீர்களே.."

"அக்கா.. அவளைத் தவிர வேறு ஒரு பெண்ணைக் கைப் பிடிக்க மாட்டேன்.. ஆனால்.. நீங்கள் எல்லோரும் சேர்ந்து அவளுடைய கைப்பிடித்து என்னிடம் கொடுத்தால் மட்டுமே அவளை நான் கைப்பிடிப்பேன்.."

"தம்பி..."

"இளம் வயதிலேயே குடும்பம் என்ற அமைப் பில்லாமல் வாழ்ந்தவன்க்கா நான்.. நந்தினியை மட்டுமில்லை.. இந்தக் குடும்பத்தையும் சேர்த்துத்தான் நான் நேசிக்கிறேன்.. ஏன்க்கா.. பவன்தான் உங்கள் பார்வையில் சிறந்த

மாப்பிள்ளையாகத் தெரிகிறானா..? நான் தெரியவில்லையா...?"

ஆனந்தி உணர்ச்சிப் பெருக்கில் அழுது விட்டாள்.. கண்களில் இருந்து வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டே ஆதித்யனிடம் வினவினாள்...

"அப்புறம் ஏன்.. நந்தினி அவளுடைய நிலைமையை உங்களுக்குச் சொல்லவில்லை..?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை அக்கா.. ஜஸ்ட் ஒரு போன் பண்ணியிருந்தால் கூடப் போதுமே..." என்றவனுக்கு மனதில் அது இடித்தது...

"அக்கா..."

"என்ன தம்பி...?"

"இரண்டு மாதத்திற்கு முன்னால்.. நான் பிஸினெஸ் லன்ச்சில் இருந்த போது.. எனக்குப் போன் வந்தது.. நான் கட் பண்ணப் பண்ணத் திருப்பித்திருப்பி போன் பண்ணினார்கள்.. நான் போனை ஸ்விட்ச் ஆஃப் பண்ணி விட்டேன்.. ஒரு வேளை.. அது நந்தினியின் போனாக இருக்குமோ..?"

"மிஸ்டு காலில் பார்த்தீங்களா..."

"பார்த்தேன்.. ஆனால் அது அவள் நம்பராக இருக்கும்ன்னு எனக்கு ஏனோ தோன்றவில்லை..."

"தோன்றவில்லையா.. ஏன்.. அவளுடைய போன் நம்பர் உங்களுக்குத் தெரியாதா...?"

"தெரியாதுக்கா..."

இதைக் குற்ற உணர்வுடன் கூறினான் ஆதித்யன்..

"எப்படி.. அவளுடைய போன் நம்பரை வாங்கிக்கணும்னு உங்களுக்குத் தோன்றவில்லையா..?"

"அக்கா.. இதை எப்படிச் சொல்வதுன்னு எனக்குத் தெரியவில்லை.. நான் நந்தினியைக் காதலிக்கிறேன்.. ஆனால் அவளிடம் காதல் சொல்லவில்லை.. அவளும் எனக்காக வீட்டை விட்டு வெளியேறி இருக்கிறாள்.. ஆனால் அவளும் என்னிடம் காதல் சொல்லவில்லை..."

"இது.. இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை..."

"அது ஒரு உணர்வு அக்கா.. அவளை விட்டுப் போகும் போது நான் என்ன நிலையில் இருந்தேன்னு அவளுக்குத் தெரியும்.. காதல் சொல்லும் நிலையில் நானில்லை.. அதனால் என்னிடம் அவளும் காதல் சொல்லவில்லை.. ஆனால் அக்கா.. காதல் என்பது மனதால் உணரப்படக் கூடியது.. வார்த்தைகளால் அதை வடித்து விட முடியாது.. எங்களிருவருக்கும் இடையேயுள்ள அந்த உணர்வை நாங்கள் உணர்ந்தோம்.. அதனால் அதை வார்த்தைகளால் உறுதிப் படுத்திக் கொள்ளவில்லை..."

ஆனந்திக்கு வியப்பாக இருந்தது.. இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு காதல் இருக்க முடியுமா.. என்று அவள் திகைத்தாள்...

"சரி.. அந்த நம்பர் உங்கள் போனில் மிஸ்டு கால்லிஸ்டில் இன்னும் இருக்கிறதா..?"

"ம்ம்... என் நம்பர் தெரிந்தவர்கள் மிகவும் கம்மி.. அவர்கள் பேசும் கால்களை நான் உடனே அட்டெண்ட் பண்ணி விடுவேன்.. இது அன்நோன் நம்பர் என்பதால் தான் அட்டென்ட் பண்ணவில்லை..."

"அதை நான் பார்க்கலாமா...?"

"இதோ..."

அவசரமாய் ஆதித்யனின் செல்லில் இருந்த நம்பரைப் பார்த்த ஆனந்தி அதிர்ந்தாள்...

"தம்பி.. இது நந்தினியின் நம்பர்தான்..."

"ஓ.. காட்.. எவ்வளவு பெரிய மடத்தனத்தைப் பண்ணிவிட்டேன்.."

"நினைத்தேன்.. தம்பி.. நான் நினைத்தேன்.. நானறிந்த நந்தினி முயற்சி செய்யாமல் இருக்க மாட்டாள்.. உங்களிடம் பேச அவள் முயன்றிருப்பாள்னு நினைத்தேன்.."

"நான் மோசம் போய்விட்டேனேக்கா.. ஒரு முறையல்ல.. இரு முறையல்ல.. பலமுறை.. அவள் கால் பண்ணிக் கொண்டே இருந்தாள்.. ஒன்றுக்குக் கூட நான் பதில் சொல்லவில்லை.. துண்டித்துக் கொண்டே இருந்தேன்.. கடைசியில்

மொத்தமாய் போனை ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வைத்து விட்டேன்.."

"கடவுளே.. நந்தினி எப்படித் துடித்துப் போனாளோ.."

"நான் வேண்டுமென்றே செய்ததாய் நினைத் திருப்பாளோ.."

"அப்படித்தான் நினைத்திருக்க வேண்டும்.."

"திரும்பவும் அந்த நம்பரில் இருந்து கால் வரவில்லையே.."

"அவள் ரோசக்காரி.. எப்படி கால் பண்ணுவாள்..?"

ஆதித்யன் தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே அமர்ந்து விட்டான்.. பின் சுறுசுறுப்பாக எழுந்தான்..

"அக்கா.. என்னோடு வெளியே கிளம்பி வாங்க.."

"எங்கே தம்பி.."

"நந்தினியின் பிரண்ட்ஸ்களின் வீடுகளுக்கு.."

# 34

ஆனந்தியுடன் நந்தினியின் தோழிகளின் வீடுகளை நோக்கிச் சென்றான் ஆதித்யன்.. ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கினார்கள்.. எல்லோருமே.. இவர்களைப் பார்த்தவுடன் முதலில் கேட்ட கேள்வி...

"நந்தினி எப்படியிருக்கிறா.. போன் பண்ணினாளா..?" என்பது தான்..

"ம்ம்.. நல்லா இருக்கிறாள்.. தினமும் போன் பண்ணுவாள்.." ஆனந்தி பெருமூச்சுடன் பதில் சொல்வாள்..

"சார் யாரு.. எங்க வீட்டிற்கு என்ன விசயமாய் வந்தீங்க.." என்று அடுத்த கேள்வி வரும்..

மழுப்பலாய்ப் பதில் சொல்லிச் சமாளித்து விட்டு வெளியே வந்து விடுவார்கள்..

"என்ன தம்பி.. ஒருத்தி கூட உருப்படியாய் ஒரு தகவலையும் சொல்ல மாட்டேன்கிறாளே.."

"இன்னும் இரண்டு பிரண்ட்ஸ் இருக்காங்க இல்ல.. அவங்களிடமும் விசாரிக்கலாம்.. கட்டாயம் ஏதாவது க்ளூ கிடைக்கும்.."

அவர்கள் கடைசியாக லதா வீட்டிற்குப் போனபோது.. லதா ஆதித்யனைப் பார்த்த பார்வையில் மின்னல் வெட்டியது.. ஆனந்தியும்.. ஆதித்யனும் அதை மனதில் குறித்துக் கொண்டார்கள்..

அடுத்து மற்றவர்கள் போல் எடுத்த எடுப்பில்..

'நந்தினி நன்றாக இருக்கிறாளா...' என்று அவள் கேட்கவில்லை.. மாறாக அவர்கள் இருவரையும் அமரச் சொல்லி உபசரித்தாள்.. அவள் கொண்டு வந்த குளிர் பானத்தைக் குடித்து முடித்தவுடன்.. அவர்கள் எதிரில் அமர்ந்து...

"சொல்லுங்க ஆன்ட்டி.. என்ன விசயமாய் என்னைப் பார்க்க வந்தீங்க.." என்று கேட்டாள்..

'இவர் யார்..?' என்று ஆதித்யனைக் கேட்கவில்லை.. மாறாக ஆதித்யனை வெறுப்புடன் பார்த்துக் கொண்டாள்..

ஆதித்யன் அவளைக் கூர்மையாகப் பார்த்தான்.. தயங்காமல் அதே கூர்மையுடன் அவனது பார்வையை எதிர் கொண்டாள் அவள்...

"நந்தினி.. எங்கே..?" என்று அழுத்தமாகக் கேட்டான் ஆதித்யன்..

"என்னைக் கேட்டால்.. எனக்கென்ன தெரியும்..?" அவள் அலட்சியமாகப் பதில் சொன்னாள்..

"உங்களுக்குத்தான் தெரியும்..."

"என்ன சார்.. என் வீட்டிற்கு வந்து என்னிடமே அடாவடியாய்ப் பேசுகிறீங்களா..? நான் ஒன்றும் நந்தினி யில்லை.. நீங்கள் என்ன செய்தாலும் பொறுமையாகப் போவதற்கு..."

ஆனந்தியின் பார்வையும்.. ஆதித்யனின் பார்வையும் சந்தித்து மீண்டன.. ஆனந்தி நிதானமாக லதாவைப் பார்த்தாள்...

"லதா.. இங்கே வருவதற்கு முன்னால் உனக்கும்.. நந்தினிக்கும் பழக்கமான.. மத்த பிரண்ட்ஸின் வீட்டிற்குப் போய் விட்டுத்தான் வருகிறோம்மா.. எல்லோரும் நந்தினி எப்படியிருக்கிறாள்னு எங்ககிட்ட விசாரிச்சாங்க.. ஒருத்தர் கூட இவரை யார்ன்னு கேட்காமல் இல்லை.. நீ இந்த இரண்டையும் செய்யவில்லை.. உனக்கு இந்தத் தம்பியைத் தெரிந்திருக்கிறது.. அப்படின்னா.. நந்தினி இப்போது எங்கிருக்கிறாள் என்பதும் உனக்குத் தெரிந்திருக்கனும்.. சொல்லும்மா.. அவளைக் காணாமல் நாங்கள் தவிக்கும் தவிப்பு கொஞ்ச நஞ்சமல்ல..."

லதா அகப்பட்டுக் கொண்ட உணர்வில் உதட்டைக் கடித்தாள்..

"ஆன்ட்டி.. நந்தினி என்னை நம்பி அவளிருக்கும் இடத்தைச் சொல்லியிருக்கிறாள்.."

"நாங்கள் அவளுக்கு எதிரியில்லைம்மா... அவளுக்குப் பிடிக்காத கல்யாணத்தை இனி நாங்கள் பண்ண மாட்டோம்.. அவள் மட்டும் எங்கள் கூடவே இருந்தால் போதும்.."

"ஆனால்.. இந்த ஆதித்யன் செய்த துரோகத்திற்கு.. இவரிடம் அவளிருக்கும் இடத்தைச் சொல்லவே எனக்கு மனமில்லை ஆன்ட்டி..."

"நீயும் உன் பிரண்ட் போல இவரைத் தப்பாக நினைக்காதே.. உன் பிரண்ட் தான் போன் பண்ணினான்னு இவருக்குத் தெரியாதாம்.."

"இது என்ன ஆன்ட்டி கதையாய் இருக்கு.."

"கதைதான்.. இதைக் கேளு.."

ஆனந்தி.. ஆதியோடு அந்தம் வரை.. அந்தக் கதையைச் சொல்லி முடித்தாள்..

"உன் ரோசக்கார பிரண்டிற்குத் திரும்பவும் ஆதித்யனுக்கு போன் பண்ண மனமில்லை.. இந்த உலகம் சுற்றும் வாலிபருக்கு.. வந்த மிஸ்டு கால் யார் பண்ணியதாக இருக்கும்ன்னு தெரிந்து கொள்ள நேரமில்லை.. இவர்கள்

இரண்டு பேரும் இந்த லட்சணத்தில் காதல் பண்ணி விட்டு.. எங்கள் மேல் பழியைப் போட்டு விட்டார்கள்.."

"ஓ... நான் கூட இதைச் சொன்னேன் ஆன்ட்டி.. அவள்தான் கேட்கவில்லை..."

"போனது போகட்டும்.. அவள் எங்கேயிருக்கிறாள்..?"

ஆனந்தி ஆவலுடன் கேட்டாள்.. லதா நந்தினியின் இருப்பிடத்தைச் சொன்னாள்..

"என்ன கம்பெனின்னு சொன்னீங்க..?" அவசரமாய்க் கேட்டான் ஆதித்யன்..

"வீனஸ் எக்ஸ்போர்ட் கம்பெனி..."

"அதன் எம்டி சௌம்யன்தானே.."

"ஆமாம்.. அது எப்படி உங்களுக்குத் தெரியும்..?"

"சௌம்யன்.. என் சித்தப்பாவின் மகன்... எனக்கு ஒன்று விட்ட தம்பி.. அக்கா.. இனி நந்தினியைப் பற்றிய கவலையை விடுங்கள்.. அவள் பாதுகாப்பான இடத்தில்தான் இருக்கிறாள்.."

ஆனந்திக்கு ஆச்சரியமாக இருந்தது.. சில நேரம் நாம் எதிர்பார்க்காமல் நன்மையான விசயங்கள் தொடர்ந்து நடப்பது எப்படி என்று அவளுக்குப் புரிபடவில்லை...

எது எப்படியாக இருந்தாலும்.. நந்தினி திரும்பக் கிடைத்து விட்டாள் என்ற நிம்மதி அவர்கள் இருவரின் மனதிலும் நிறைந்து இருந்தது...

# 35

ஆதித்யன்.. தன் பெட்டியோடு கிளம்பினான்.. ஆனந்தி அவசரமாய் மாடியேறி வந்தாள்..

"என்னக்கா.."

"என் வீட்டுக்காரரை ஹோட்டலில் இருந்து வரச் சொல்லியிருக்கிறேன் தம்பி.."

"எதற்காக அக்கா..."

"வீட்டில் எல்லோரிடமும் விசயத்தைச் சொல்லி விடுங்கள்.."

"இப்போதே சொல்ல வேண்டுமா...?"

"வீடு இருக்கும் நிலையைப் பார்த்தீங்களா.. எல்லோரும் இடிஞ்சு போய் இருக்காங்க.. இவங்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பு வர வேண்டாமா..? அது நீங்கள் சொல்லும் வார்த்தைகளில்தான் வரும்..."

ஆதித்யனுக்கு ஆனந்தி சொல்வதில் இருக்கும் அர்த்தம் புரிந்தது.. அவன் கீழே இறங்கி வந்தான்.. ஹால் சோபாவில் மகேந்திரன் தொய்வாக அமர்ந்திருந்தார்.. மலர்விழி ஒரு பக்கம் வெறிச்சோடிய பார்வையுடனிருக்க.. தெய்வேந்திரன்.. மண்ணோ.. பொண்ணோ.. என்பது போல் நிலம் அதிராமல் நடை நடந்து புதுமை போல் உள்ளே வந்தார்..

"என்னப்பா.. ஹோட்டலை விட்டுட்டு வந்திருக்க..?"

"ஆனந்தி வரச் சொன்னாண்ணா.."

"அப்படியா.. அப்போச் சரி.."

அதற்கு மேல் எதுவும் பேசாமல் மகேந்திரன் நிலம் பார்க்க. தெய்வேந்திரன் ஜன்னல் வழி தெரிந்த வானத்தைப் பார்த்தார்..

"இப்படித்தான்.. ஆளுக்கொரு திசையைப் பார்த்துக் கிட்டு சமைஞ்ச பொண்ணு போல உட்கார்ந்து விடு கிறாங்க.. இதிலிருந்து என்னைக் காப்பாற்றுங்க தம்பி.."

அந்தக் கவலையிலும் ஆனந்தி சொல்லியதைக் கேட்டுச் சிரித்து விட்டான் ஆதித்யன்...

"என்ன சார்.. அதுக்குள்ளே சென்னைக்குக் கிளம்பிட்டிங்களா..?"

கையில் பெட்டியோடு வந்த ஆதித்யனைப் பார்த்துக் கேட்டார் மகேந்திரன்.. தெய்வேந்திரன் அண்ணன் முன்னால் வாய் திறந்தால் முத்துக்கள் உதிர்ந்து விடும் என்று எண்ணியவர் போல்.. வாயை இறுக மூடிக் கொண்டார்..

"நான் சென்னைக்குப் போகவில்லை சார்..."

"அப்படியா..?"

"கன்யாகுமரிக்குப் போகிறேன்.."

"ஆகட்டும்.. ஆகட்டும்..."

"அங்கே எதற்குப் போகிறேன்னு நீங்க கேட்கவில்லையே.."

"என்ன சார் இது.. பொழுது போக்கவா போகப் போகிறீங்க..? உங்களுக்கு அதற்கெல்லாம் நேரம் இருக்காதே.. வேலை ஏதாவது இருக்கும்.."

"வேலைதான் சார்.. உங்கள் மகள் நந்தினியை என்னோடு அழைத்துக் கொண்டு வரும் வேலை..."

அவ்வளவுதான்.. அவன் வார்த்தைகள் கொளுத்திப் போட்ட சந்தோசத்தில் மத்தாப்பூ போல் அங்கிருந்தவர் களின் முகம் ஒளிர்ந்தது.. மலர்விழி அவசரமாய் எழுந்து அவர்களுக்கு அருகே வந்தாள்..

"என்ன சொன்னீங்க.. என் மகள் கன்யாகுமரியில் இருக்கிறாளா.. அது உங்களுக்குத் தெரியுமா...?"

"பதட்டப்படாதீங்க ஆன்ட்டி.. அவள் என் தம்பியின் கம்பெனியில்தான் வேலை பார்க்கிறாள்.."

"உங்களுக்குக் கோடிப் புண்ணியமாய்ப் போகும்.. என் மகளைப் பார்க்க.. என்னையும் உங்களோடு கூப்பிட்டுக் கொண்டு போங்க.."

"வேண்டாம் ஆன்ட்டி..."

"இல்லை.. உங்களுக்குத் தெரியாது.. அவளுக்கு என் மீதும் அவளுடைய அப்பா மீதும் கோபம்.. நாங்கள் போய் மன்னிப்புக் கேட்டால்தான் வருவாள்.. என்னங்க.. கிளம்புங்க.."

"சார், பொறுங்க.. நந்தினியின் கோபம் உங்கள் மீதல்ல.. என்மீது.. உங்களால் அவள் வீட்டை விட்டுப் போகவில்லை.. என்னால்தான் வீட்டை விட்டுப் போய் விட்டாள்.."

எதிர்பாராத இந்த திருப்பத்தைக் கேட்டு.. மகேந்திரன் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிய ஆதித்யனைப் பார்த்தார்.. ஆதித்யன் அமைதியான குரலில் நந்தினியைத் தான் சந்தித்த பொழுதை வாணித்தான்.. அவள் எப்படி

அவனுக்குள் தன்னம்பிக்கையை ஊட்டிச் சிந்திக்க வைத்தாள் என்பதை விவரித்தான்... அவர்கள் பிரியும் போது உணர்ந்த காதலைக் கூறினான்... தொழிலைக் காப்பாற்றும் பொறுப்பில் நந்தினியைப் பார்க்க வர முடியாத தனது நெருக்கடியைச் சொன்னான்..

"எல்லோருமே ஒரு விசயத்தில் அலட்சியமாக இருந்து விடுவோம் சார்.. அது கிணற்று நீரை ஆற்று வெள்ளமா கொண்டு போகப் போகிறது.. என்ற கணக்குத் தான்.. அது போல்தான்.. நானும் அலட்சியமாக இருந்து விட்டேன்.. நந்தினி என் கைப் பொருள்.. எப்போது வேண்டுமானாலும் அவளைப் போய்ப் பார்த்துக் கொள்ளலாம்னு நினைத்து விட்டேன்.. அது இவ்வளவு பெரிய துன்பத்தை என் நந்தினிக்குப் கொடுத்து விடுமென்று கனவிலும் நான் நினைத்துப் பார்க்கவில்லை.. நான் போய் நந்தினியைச் சமாதானப்படுத்திக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன்.. வந்த பின்னால் உங்களிடம் அவளை முறைப்படி பெண் கேட்பேன்.. நானும் நல்ல மாப்பிள்ளைதான் சார்.. என்னை நம்பி உங்கள் பெண்ணைக் கொடுப்பீங்களா..?"

ஆதித்யனின் கூப்பிய கரத்தை நெகிழ்ச்சியுடன் பிடித்துக் கொண்டார் மகேந்திரன்.. யாரைத் தொழில் செய்வதில் தன் மானசீகக் குருவாக நினைத்திருந்தாரோ.. அவனே அவரிடம் பெண் கேட்டு நிற்கிறான்.. இதை விட வரம் எதுவுமே இருக்க முடியாதென்று அவருக்குத் தோன்றியது...

# 36

வேட்டியை மடித்துக் கட்டி.. பனியனும்.. தலையில் தோளில் கிடந்த துண்டைக் கொண்டு கட்டப்பட்ட முண்டாசுடனும்.. தோட்டத்துச் செடிகளுக்கு.. ரப்பர் டியூப் மூலம் தண்ணீரை விட்டுக் கொண்டிருந்தார் நடராஜன்..

வாசலில் கார் ஹார்ன் சத்தத்தைத் தொடர்ந்து வாசல் கேட் திறக்கப்பட யாராக இருக்கும் என்ற நினைவோடு திரும்பிப் பார்த்தார்...

வழுக்கிக் கொண்டு வந்த காரைப் பார்த்ததுமே.. அது ஆதித்யனின் கார் என்று அடையாளம் கண்டு கொண்டவர்.. தோட்டக்காரனைக் கூப்பிட்டு நீர்க் குழாயைக் குடுத்து விட்டு காரருகே விரைந்தார்..

"சித்தப்பா.. நீங்களா.. முண்டாசும்.. பனியனுமாய் நிற்கவும் தோட்டக்காரன்னு நினைத்து விட்டேன்.." என்றபடி காரிலிருந்து இறங்கினான் ஆதித்யன்..

"என்னப்பா செய்வது.. வாசலில் செக்யூரிட்டி லீவு போட்டுட்டா செக்யூரிட்டி அவதாரம் எடுக்கணும்.. தோட்டக்காரன் செடிகளுக்கு ஒழுங்காய்த் தண்ணீர் விடலைன்னா.. தோட்டக்காரன் அவதாரம் எடுக்கணும்..."

"சமையல் ஆள் லீவு போட்டுட்டா.. சமைக்கிறதும் நீங்கள்தானா..? ஹா.. ஹா..."

"ஊஹும்.. அதுக்கு மட்டும் உங்க சித்தி விடவே மாட்டாள்.."

"ஏன்...?"

"நான் சமைத்தால் யார் சாப்பிடறதுன்னு கேட்பாள்.."

"அதுவும் சரிதான்.."

"உள்ளே வா.. இப்பத்தான் இங்கே வர வழி தெரிந்ததா..?"

"வேலை அதிகம் சித்தப்பா.."

"ம்ம்.. என்னதைச் சொல்ல.. என் அண்ணன் மகன் நீ.. உன் சந்தோசத்தையோ.. துக்கத்தையோ பகிர்ந்து கொள்ள எங்களை நீ தேடுவதில்லை.. தனியாகவே தாங்கிக் கொள்கிறாய்.."

அவர் சொன்னது காதில் விழாதது போல் மௌனமாக வீட்டுக்குள் நடந்தான் ஆதித்யன்.. அவனுக்குத் தெரியும், அவரின் பேச்சு வீட்டில் எடுபடாது என்று.. வீட்டில் எடுபடுவது சித்தி வைஜெயந்தியின் சட்டம் மட்டும்தான்..

வைஜெயந்தி சுயநலக்காரி.. ஆதித்யனின் பெற்றோர் இறந்த போது.. அவன் மனம் பாசத்தை நாடும் போதெல்லாம் அவன் கன்யாகுமரிக்கு வருவான்.. ஆனால் வைஜெயந்தி நடராஜனுடன் பேசக் கூட விடமாட்டாள்..

"உனக்கு இங்கே வரப் பொழுதிருக்கு.. ஆனால் எங்களுக்கு நின்னு பேசப் பொழுதில்லை.. ஆயிரம் வேலைகள் தலைக்கு மேல இருக்கு.." என்று பட்டுக் கத்தரிப்பாள்..

அவளது வார்த்தைகள் ஆதித்யனின் மனதைக் காயப்படுத்தும். வளர்ந்து வரும் தொழிலதிபதினான தன்னை.. தன் சித்தப்பாவின் மனைவி எளிதாக நினைக்கிறாள் என்பது மட்டும் அவனுக்குப் புரியும்.. அவன் உதட்டைக் கடித்துக் கொண்டு.. பேசாமல் திரும்பி விடுவான்..

சாதாரண நிலையில் இருந்த நடராஜன்.. பணக்கார வீட்டின் ஒரே பெண் வாரிசான வைஜெயந்தியைத் திருமணம் பண்ணிக் கொண்டதன் மூலம்.. அவளுடைய சொத்துக்களுக்குப் பெயரளவில் உரிமையாளர் ஆனார்...

ஆனால் அதன் பின் வாழ்க்கை முழுவதும் தன்னிச்சையாகச் சிந்திக்கக் கூட முடியாமல் மனைவியிடம் அடிமைப்பட்டுப் போனார்...

ஆதித்யனின் தந்தை தம்பி மனைவியின் அலட்சியம் கண்டுதான் சொந்தத் தொழிலையே ஆரம்பித்தார்..

"ம்ம்.. மாதச் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு முதலாளியின் கஷ்டம் எங்கே தெரியப் போகிறது.."

ஒரு முறை தெரியாத்தனமாகத் தன் கொழுந்தனாரிடம் கல்யாண வீடு ஒன்றில் பேசிக் கொண்டிருந்த போது...

"என்ன தம்பி.. அண்ணனும் அண்ணியும் இருக்கிறாங்க.. அன்பாய் நின்று ஒரு வார்த்தை கூடப் பேசாமல் ஓடிக் கொண்டு இருக்கிறீங்களே.." என்று ஆதித்யன் அம்மா கேட்டதற்கு வைஜெயந்தி சொன்ன பதிலைக் கேட்ட பின்தான் ஆதித்யனின் அப்பா தொழிலையே தொடங்கினார்..

"ம்ஹீம்.. மயிலைப் பார்த்து வான்கோழி ஆடிச்சாம்.. உயர உயரப் பறந்தாலும்.. ஊர்க் குருவி பருந்தாக முடியுமா..?" என்று வைஜெயந்தி கேலி பேசினாள்..

ஆனால்.. வான் கோழி மயிலானது.. அதைக் கண்ட வைஜெயந்தியின் மனம் பொறாமைத் தீயில் எரிந்தது...

"குப்பை மேடு கோபுரம் ஆக முடியுமா..?" என்று பொருமினாள்...

அவளது பொருமலுக்குப் பலன் போல ஆதித்யனின் தந்தை மறைந்து விட்டார்.. வைஜெயந்தி சந்தோசம் அடைந்தாள்.. துக்கம் கேட்கப் போன போது கணவனை அண்ணன் குடும்பத்துடன் ஒரு வார்த்தை கூடப் பேசவிடாமல் அடைகாத்தாள்.. கையோடு கணவனை இழுத்துக் கொண்டு திரும்பி விட்டாள்...

ஆனால் ஆதித்யன் எழுந்து நின்றான்.. தகப்பனைப் பின் பற்றித் தாயும் சென்ற பின்னும் அவன் தனித்து நின்று போராடி ஜெயித்தான்..

உயர உயரப் பறக்கும் பருந்தாகி விட்டவனின் அருகே நிற்கக் கூட வைஜெயந்திக்குத் தகுதி போதாமல் ஆகிப்போனது.. ஆனால் அந்த நிலைக்கு உயர்ந்த பின்னும் ஆதித்யனிடம் அவள் முகம் கொடுத்துப் பேசியதில்லை..

இப்படிப்பட்ட உறவுக்காரர்களை வரம் வாங்கிப் பெற்றிருக்கும் ஆதித்யன்.. மனம் உடைந்தால் சொல்லி அழ ஆளின்றித் தனிமைப் பட்டுத்தானே போவான்..?

அன்று மட்டும் அனைத்துமாக நந்தினி அவனை அரவணைத்து நின்றிருக்காவிட்டால் ஆதித்யன் என்னவாகி யிருப்பானோ..?

# 37

"யாரு... ஆதித்யனா.. என்னப்பா.. இந்தப் பக்கம் வந்திருக்கிற..?" வைஜெயந்தி கையில் காபிக் கோப்பையோடு அமர்ந்து கொண்டு பட்டுக் கொள்ளாமல் பேசினாள்..

"வேலையிருந்தது சித்தி.."

"ஓஹோ.. எந்த ஹோட்டலில் தங்கியிருக்கிற..?"

'ஹோட்டலில் தங்காமல்.. நம் வீட்டிலா வந்து தங்குவான்.. என் அண்ணன் மகன்.. மதியாதார் தலை வாசல் மிதிக்க மாட்டான்டி..' என்று சொல்ல நடராஜனுக்கு ஆசைதான்..

ஆனால் அதன் பின் ஆதித்யன் போய் விடுவான்.. அகப்பட்டுக் கொள்வது அவர்தானே.. அதனால் நாவை அடக்கிக் கொண்டார்..

தன் சிற்றப்பாவின் முகபாவனையைக் கொண்டே அவருடைய நிலையை உணர்ந்து கொண்ட ஆதித்யன்.. வள்ளுவர் 'நாவடக்கம்' பற்றிப் பாடி வைத்தது.. தன் சிற்றப்பாவைப் போன்ற ஆள்களுக்காகத்தான் என்ற முடிவிற்கு வந்தான்..

"காபி சாப்பிடுகிறாயா..?"

'என்ன ஒரு உபசரணை..!' என்று எரிச்சல் பட்ட ஆதித்யன், 'வேண்டாம்..' என்று சொல்ல வாய் திறந்த போது...

"அதெல்லாம் சாப்பிடுவான்.. காபி கூடச் சாப்பிட வில்லைன்னா இந்தச் சித்தப்பாவின் மனம் என்ன பாடுபடுங்கிறது அவனுக்குத் தெரியாதா என்ன..?" என்றபடி அவன் முன் காபிக் கோப்பையை நீட்டினார் நடராஜன்..

"இது என்ன சித்தப்பா.. காபியை நீங்கள்தான் கொண்டு வரணுமா..?"

'வேலையாள்கள் கொண்டு வந்தால் அவங்களுக்கு வேலை போய் விடாதா..?' என்று நினைத்துக் கொண்டார் நடராஜன்..

"ஹாய் ஆதி.." என்றபடி ஜாகிங் உடையுடன் உள்ளே வந்தான் சௌம்யன்..

"எப்படியிருக்கிற சௌம்யா..?"

"பைன்.. நீ எப்படியிருக்கிற..?"

"ஏன்டா சௌம்யா.. உன் பெரியப்பா மகன் உன்னை விட மூன்று வயது மூத்தவன். அவனைப் பெயர் சொல்லலாமா...?"

"அடப் போங்கம்மா, நீங்க வேற.. எனக்குப் பிறந்த திலிருந்து இப்படிப் பேசித்தான் பழக்கம்.."

தன்னால் முடியாதது தன் மகனால் மட்டும் எப்படி முடிகின்றது என்று எப்போதும் போல் இப்போதும் வைஜெயந்தியின் வார்த்தையை மறுத்துப் பேசும் மகனை.. ஆச்சரியத்துடன் பார்த்தார் நடராஜன்..

"எத்தனை நாள் தங்குவே ஆதி..."

"தெரியலை.. என் வேலை இன்றைக்கே முடிந்து விட்டால் இன்றைக்கே கூடக் கிளம்பிவிடுவேன்.. இல்லேன்னா ஒரு வருசம் ஆனாலும்.. காத்திருந்து முடித்துக் கொண்டு தான் போவேன்.."

"தட்ஸ்குட்... அப்பா கெஸ்ட் ரூம் தயாராய் இருக்கில்லையா..?"

"நோ.. சௌம்யா.. நான் ஹோட்டலில் ஸ்டே பண்ணியிருக்கிறேன்..."

"ச்சு.. இதுதான் உன்னிடம் எனக்குப் பிடிக்காத விசயம்.. நம் வீடு இருக்கும்போது.. நீ யாரோ ஒருவன் போல.. ஹோட்டலில் தங்கலாமா...?"

"ம்ம்.. ஐ நீட் பிரைவஸி சௌம்யா.."

சௌம்யன் எரிச்சலுடன் தாயை முறைத்தான்.. ஆதித்யன் தேடும் பிரைவஸி எதுவென்று அவனுக்குத் தெரியாதா என்ன..? வைஜெயந்தியின் நாக்குச் சுடாத இடம்தான்.. அவன் தேடும் பிரைவஸி...

"வா.. ஆதி.. நாம் என் ரூமில் போய்ப் பேசலாம்..."

அதற்காகவே காத்திருந்த ஆதித்யன் எழுந்து கொண்டான்.. அவர்கள் இருவரும் மாடியேறினர்.. சௌம்யனின் அறைக்குள் போய்க் கதவை மூடித்தாழிட்டதும்..

"சொல் சௌம்யா.. நந்தினி எப்படியிருக்கிறாள்..." என்று கேட்டான் ஆதித்யன்...

"அமைதியாய் இருக்கிறாள்.. பேசவே மாட்டாள்.. நீ போனில் சொன்ன நந்தினிக்கும்.. இவளுக்கும் வித்தியாசம் நிறைய இருக்கு..."

"பட்.. இது அவளுடைய இயல்பல்ல.. அவளுக்குப் பேசிக் கொண்டே இருக்கனும்.. பேச வாய் திறந்தால் மூடமாட்டாள்... ஓட்டை வாய்ன்னு அவளைக் கேலி பண்ணுவேன்.."

"நீ பெண்களைக் கேலி கூடப் பண்ணுவாயா...?"

"பெண்களைக் கேலி பண்ணவில்லைடா.. ஒரேயொரு பெண்ணைக் கேலி செய்வேன்.. அவள்தான் என் நந்தினி.."

"அவள் உன்னை இந்த அளவுக்குப் பாதித்திருக் கிறாளா...?"

"இல்லைடா.. அவள்தான் என்னைப் பாதிப்பிலிருந்து மீட்டாள்.."

"பென்டாஸ்டிக்.. ஆதி.. கோடி கோடியாய்ப் பணம் சம்பாதித்தாலும்.. உண்மையான நேசம் கிடைத்து விடாது.. அது கிடைக்க நாம் வரம் வாங்கி வந்திருக்க வேண்டும்.."

"அது என்ன 'நாம்' என்று உன்னையும் கூட்டுச் சேர்த்துக் கொள்கிற..?"

"அது சரி.. உனக்குத்தான் காதலி இருப்பாளா..? எனக்கு இருக்க மாட்டாளா...?"

"அடிசக்கை... யாருடா அது...?"

"இதுவும் லொடலொட கேஸ்தான்... அதில பாரு ஆதி.. நம்மால் பேச முடியாததை இந்தப் பெண்கள் பேசுவதாலேயே இவர்களிடம் விழுந்து விட்டோமோ..?"

"இருக்கும்.. இருக்கும்.."

"உனக்குப் பேச வீட்டில் ஆள் இல்லை..."

"உனக்கு வாயைத் திறக்காத அப்பா.. யாரையுமே வாயைத் திறக்க விடாத அம்மான்னு இருக்கிறாங்க.. உன்னாலும் பேச முடியாது.."

"நமக்கும் சேர்த்துப் பேசுவதால் இதுகளை நமக்கு இவ்வளவு பிடித்து விட்டது போல..."

"உன் ஆள் பெயர் என்ன..?"

"ம்ம்.. ஆஷா.. ஒன்று தெரியுமா...?"

"என்னடா...?"

"என் ஆளின் வீட்டில்தான் உன் ஆள் குடியிருக்கிறாள்.."

"அப்படியா...?"

ஆச்சரியத்துடன் கேட்டான் ஆதித்யன்..

# 38

வாழ்க்கைதான் எவ்வளவு அழகாக எல்லோரையும் இணைத்து வைக்கிறது.. ஒரு ரங்கோலிக் கோலம் போல்.. சென்னையில் பிறந்து வளர்ந்த ஆதித்யன்.. கொடைக் கானலுக்கு வந்து நந்தினியைச் சந்தித்தான்.. காதல் கொண்டான்.. நந்தினியோ.. காதலனின் உதவி சரியான நேரத்தில் கிடைக்காததால் கொடைக்கானலை விட்டு வெளியேறிக் கன்யாகுமரிக்குச் சென்றாள்.. அங்கே அவள் வேலைக்குச் சேர்ந்த கம்பெனியோ.. அவளது காதலனின் ஒன்று விட்ட தம்பியின் கம்பெனி.. அவள் தங்கியிருததோ.. அந்த ஒன்றுவிட்ட தம்பியின் காதலியின் வீட்டில்...

நமக்கும் மேலே ஒரு சக்தி இருந்து நம்மை ஆட்டிப் படைக்கிறது என்று ஆதித்யனுக்கும் அந்த நிமிடம் புரிந்தது..

"கால் கொண்டு ஆடும் பிள்ளை...

நூல் கொண்டு ஆடும் பொம்மை...

உன் கையில் அந்த நூலா..

நீ சொல்லு நந்த லாலா..."

பொம்மலாட்டத்தில் ஆடும் பொம்மைபோல் தன்னை உணர்ந்து இந்த வரிகளை மனதிற்குள் சொல்லிக் கொண்டான் ஆதித்யன்..

நந்தினி காலையில் எழுந்தபோது ஏனோ.. தன் மனம் லேசாக இருப்பதை உணர்ந்தாள்.. சில விடியல்களில் காரணமில்லாமல் மனதில் உற்சாகம் தோன்றும்.. இது அந்த மாதிரியான விடியல்... போல என்று நினைத்தபடி குளிக்கப் போனாள்..

"குட் மார்னிங் நந்தினி.."

"குட்மார்னிங் மல்லிகா.."

அமைதியாய்ப் பதில் வணக்கம் சொல்லிவிட்டு உள்ளே போகிறவளை ஆராய்ந்து பார்த்தாள் மல்லிகா..

நேர்த்தியான.. காட்டன் சுடிதார்.. நீண்ட பின்னல்.. அழகான முகம்.. அளவான புன்னகை...

என்ன மல்லிகா.. நந்தினியை அப்படிப்பார்க்கிற.. அவளுக்குத்தான் குட்மார்னிங் சொல்வியா..? எனக்குச் சொல்ல மாட்டாயா..? என்றபடி ஆஷா அவளருகில் வந்து நின்றாள்..

"இல்லை.. இவ்வளவு நேர்த்தியாய் டிரஸ் பண்ணிக் கொள்ளும் நந்தினி.. முதல் நாள் ஏன் அப்படி வந்து நின்றாள்..?"

"என்னவோ வந்து விட்டாள்.. இப்ப அதுவா பிரச்னை..?"

"வேறு எது பிரச்னை...?"

"நீ இன்னும் எனக்கு குட்மார்னிங் சொல்லவில்லை.. அதுதான் பிரச்னை..."

"ம்ம்.. பிரச்னை பண்ணித்தான் நீ குட்மார்னிங் வாங்குவாயா...?"

"உன்னை மாதிரி ஆள்களிடம் வேறு எப்படித்தான் அதை வாங்குவது...?"

"போடி.."

மல்லிகா செல்லமாய்த் தன் கர்ச்சீப்பால் ஆஷாவின் மேல் ஒரு அடி அடிக்க.. ஆஷா சிரித்துக் கொண்டே தன் சீட்டிற்குப் போனாள்...

நந்தினி கம்ப்யூட்டரில் ஆழ்ந்திருக்க... ஆஷா..

"நந்தினி.. ஏன் கம்ப்யூட்டருக்குள் தலையை நுழைத்து ஸ்கிரீனை உடைக்கப் பார்க்கிற..?" என்று கேட்டாள்..

நந்தினி லேசாக ஓர் பார்வை பார்த்துவிட்டு.. ஆஷாவின் பேச்சினால் பாதிக்கப்படாதவளாய்த் தன் வேலையைத் தொடர்ந்தாள்..

"ம்ஹும்.. உன் கூடப் பேசுவதற்கு.. நான் இந்தக் கம்ப்யூட்டருடன் பேசிவிடலாம்..."

ஆஷாவின் வார்த்தைகளைக் கண்டு கொள்ளாமல் நந்தினி வேலையைத் தொடர்ந்தாள்.. அவளது டேபிளில் இருந்த இன்டர்காம் ஒலித்தது.. எடுத்துப் பேசினாள்..

"நந்தினி.. என் கேபினுக்கு வந்துவிட்டுப் போங்க.." சௌம்யனின் குரல் ஒலித்தது..

"ஓகே சார்.." என்ற நந்தினி போனை வைத்துவிட்டு கம்ப்யூட்டரின் திரையில் இருந்து வெளிவந்தாள்..

"கெட்டிக்காரி நீ.. உன் பாஸ்வேர்ட்டில் வேறு யாரும் வேலை பார்த்துவிடக் கூடாதுன்னு இவ்வளவு கவனமாய் இருக்கிறாயே.. வெரிகுட்... ஆனாலும் உன் பக்கத்து சீட்டில் இருக்கும் என்மேல் உனக்கு இவ்வளவு சந்தேகம் இருக்கக் கூடாது..."

ஆஷாவின் பாராட்டுதல் போன்ற மனத்தாங்கலைக் கேட்டுக் கொண்டே நந்தினி சௌம்யனின் கேபின் நோக்கிச் சென்றாள்..

"யெஸ்... கமின்.." என்ற சௌம்யனின் குரலைக் கேட்டதும்.. அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள்..

அவளுக்கு முதுகு காட்டி ஆதித்யன் சௌம்யனின் எதிரே அமர்ந்திருந்தான்..

"மிஸ் நந்தினி.. இவர் என்னுடைய அண்ணன்.. உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்.." என்று சௌம்யன் கூறியதும் நந்தினிக்குக் குழப்பம் ஏற்பட்டது..

'எம்டியின் அண்ணன் எதற்கு என்னைப் பார்க்க வர வேண்டும்..?' என்ற நினைவோடு சேரில் அமர்ந்திருப் பவனைக் கண்டதும்.. நந்தினிக்குத் தூக்கி வாரிப் போட்டது..

"நந்தினி.." என்று ஆவலுடன் அழைத்தபடி.. ஆதித்யன் எழுந்து நின்றான்..

ஒரு நிமிடம் அவனை அள்ளிப் பருகுவது போல் பார்த்துக் கொண்டே நின்றாள் நந்தினி.. ஆதித்யனும் பார்வையை விலக்கிக் கொள்ளவில்லை.. ஒரு யுகம் போல் கழிந்த அந்த நிமிடத்தில் தன் தாபம் தீர அவனைப் பார்த்து விட்டவள்.. மறு நிமிடம் சுதாரித்துக் கொண்டாள்..

"யார்.. நீங்க..?" என்று அறிமுகமில்லாதவள் போல் வினவினாள்..

அவளுடைய ஒரு நிமிடப் பார்வையை அதுவரை பார்த்துக் கொண்டிருந்த சௌம்யனுக்கு அவள் கோபமாய் இருப்பது புரிந்து விட்டது.. மௌனச் சிரிப்புடன் தமையனைப் பார்த்தான்..

இதை எதிர்பாத்திருந்த ஆதித்யன் ஓர் நொடி பதில் சொல்லாமல் நந்தினியின் விழிகளை ஊடுருவிப் பார்த்தான்.. பின்..

"நான் யார்ன்னு உனக்குத் தெரியாதா..?" என்று ஆழ்ந்த குரலில் கேட்டான்..

அந்தக் குரல்.. நந்தினியின் மனதைக் தொட்டு எழுப்பியது.. அவள் மனம் குமுறினாள்..

# 39

"ஆமாம்.. நீங்கள் யார்ன்னு எனக்குத் தெரியாது.." நந்தினி உறுதியாகக் கூறினாள்..

அவள் மனம் அலைகடலாய்க் கொந்தளித்துக் கொண்டிருந்தது.. இவள் போன் பண்ணும்போது மட்டும்.. இவள் யாரென்று இவனுக்குத் தெரியாதாம்.. இப்போது சட்டமாய் வந்து 'நான் யாரென்று உனக்குத் தெரியாதா..?' என்று கேட்பானாம்.. உடனே நந்தினி மகிழ்ந்து போய்.. 'ஆஹா.. நீங்களா..?' என்று கேட்க வேண்டுமாம்..

தம்பி என்று சொன்னானே... கூடப் பிறந்தவர்கள் யாருமில்லையென்றுதானே.. இவனைப் பற்றி அவள் படித்திருக்கிறாள்.. இவனும் அப்படித்தானே கூறினான்.. இப்போது புதிதாய்த் தம்பி எங்கிருந்து வந்து குதித்தானாம்..?

சொந்தமென்று பார்க்க வந்திருப்பான்.. வந்த இடத்தில் நந்தினியைப் பார்த்திருப்பான்.. உடனே குசலம் விசாரிக்கிறான்.. இவன் நலம் விசாரிக்கவில்லையென்று இங்கே யார் அழுததாம்..

'நீ அழவில்லையா..?' என்று அவள் மனம் கேட்டது..

ஆதித்யனோ அவளையே உறுத்துப் பார்த்துக் கொண்டு நின்றான்..

'ஏன் இப்படிப் பார்க்கிறான்..?' என்று இருந்தது அவளுக்கு...

தம்பியைப் பார்க்க கன்யாகுமரிக்கு வர இவனுக்கு நேரம் இருக்கிறதாம்.. நந்தினியைப் பார்க்கக் கொடைக் கானல் வர அவனுக்கு நேரமில்லையாம்.. இவளே தேடிப் பிடித்துப் போன் பண்ணினாலும் போனைக் கட் பண்ணுவானாம்.. அவள் விழிகள் கலங்கின.. விழி நீரை இமைகளைச் சிமிட்டி அடக்கியபடி அவள் நிற்பதைப் பார்த்த ஆதித்யனின் மனம் தவித்தது..

'ஏன் இப்படி நிற்கிறாய்..? உன்னை நான் மறப்பேனா..? அது எனக்குச் சாத்தியம் ஆகுமா..? என்னைக் கூட நான் மறப்பேன்.. உன்னை மறக்கவே மாட்டேன்.. அது உனக்குத் தெரியாமல் போய் விட்டதே நந்தினி..'

"என்னை எப்படி உனக்குத் தெரியாமல் போகும் நந்தினி..? என்னைக் கைப் பிடித்து நிறுத்தி.. கைவிடாதேன்னு சொன்னவள் நீ.. என்னைச் சிரிக்க வைத்து.. சிந்திக்க வைத்தவளும் நீ.. வழி தெரியாமல் நின்ற எனக்கு வழியைக் காட்டியவளும் நீ.. போய் வான்னு சொல்லிப் போராட அனுப்பி வைத்தவளும் நீ.. இத்தனையும் எனக்குச் செய்து விட்டு.. என்னை யார்ன்னு தெரியாதுன்னு எப்படிச் சொல்கிறாய் நந்தினி..." இறைஞ்சும் குரலில் கேட்டான் ஆதித்யன்..

அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவளது மனதில் இறங்கின.. அவனது முகம் பார்த்தால்.. எங்கே அவன் தோள் தழுவி.. மார்பில் முகம் புதைத்து விடுவோமோ.. என்ற பயத்துடன் அவன் முகம் பார்க்காமல் வேறு திக்கில் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் நந்தினி..

"பேசு.. நந்தினி.. பதில் பேசு.. இப்படிப் பேசா மடந்தையாக நிற்க உன்னால் எப்படி முடிகின்றது..? உண்ணாவிரதம் கூட இருப்பேன்.. மௌன விரதம் இருக்க மாட்டேனென்று சொல்லிய வாய் ஏன் மௌனமாகி விட்டது..? என்னோடு பேசப் பிடிக்கலையா..? இல்லை.. என்னையே பிடிக்கலையா...?"

அவளது விழிகளில் கலக்கம் வந்தது.. ஆதித்யனின் விழி அதைக் கண்டு கொண்டது.. அவனது இதயம்

திருப்தியானது..

"சார்.. நான் போகனும்..." நந்தினி ஆதித்யனைத் தவிர்த்துச் சௌம்யனிடம் பேசினாள்..

"சௌம்யா.. அவளுடன் நான் பேசனும்.."

"சார்.. எனக்கு அறிமுகமில்லாதவர்களிடம் பேசிப் பழக்கமில்லை.."

"அப்படியா..? முன்னே பின்னே தெரியாத என் கையைப் பிடித்து இவள் ஏன் இழுத்தாள்னு கேட்டுச் சொல்லுடா..."

நந்தினியின் முகம் சிவப்பதை ஆச்சரியத்துடன் சௌம்யன் பார்க்க.. ஆசையுடன் ஆதித்யன் பார்த்தான்..

'இவன் ஒருவன்.. இவனை நான் கையைப் பிடித்து இழுத்தேன்னு பட்டம் கட்டிக் கொண்டே இருக்கிறான்..'

"சார்.. தேவையில்லாமல் பேச வேண்டாம்னு சொல்லுங்க.."

"இல்லாததை நான் பேசினேனான்னு நீயும் கேளுடா.."

"எதுவும் இருப்பதாக எனக்கு நினைவில்லை சார்.."

"ஏன் மறந்தாள்னு கேளுடா..."

நந்தினி திரும்பி ஆதித்யனைப் பார்த்து முறைத்தாள்.. அவனைத் தெரியாது என்று சொல்லிக் கொண்டிருந்ததை மறந்துவிட்டு.. அனல் பறக்கப் பேசினாள்..

"மறந்தது யார்...? நீங்களா.. இல்லை, நானா..? மிஸ்டர் ஆதித்யன்.. உங்களுக்கு நான் ஒரு நாள் போன் பண்ணினேன்.. அது தெரியுமா உங்களுக்கு...?"

"தெரியாது... உண்மையிலேயே தெரியாது..."

"தெரியாமலா என் காலை கட் பண்ணினீங்க...?"

"அது உன் போன் நம்பர்ன்னு எனக்குத் தெரியாது நந்தினி.. நான் முக்கியமான பிஸினஸ் லன்ச்சில் இருந்தேன்.. அப்போது பார்த்து உன் போன் வந்தது.. அதனால்தான்.."

"என் நம்பரைக் கட் பண்ணினீங்க.. நல்லது மிஸ்டர் ஆதித்யன்.. நீங்கள் மிகச் சிறந்த பிஸினஸ் மேன் என்பதை எனக்கு உணர்த்தி விட்டீங்க.. நான் யார்ன்னு உங்களுக்கு உணர்த்த வேண்டாமா...?"

"நீ என் உயிர்..."

"ச்சு.. இதெல்லாம் காலம் கடந்த பேச்சு.. அந்த போன் காலைப் பண்ணும்போது நான் எந்தளவுக்கு நெருக்கடியான நிலையில் இருந்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா..?"

"தெரியும்.. உன் சித்தி சொன்னாங்க.."

"சித்தியா..? அவங்களை எங்கே பார்த்தீங்க.."

"எங்கேயும் பார்க்கவில்லை.. உன் வீட்டில்தான் பார்த்தேன்..."

நந்தினி புருவங்கள் முடிச்சிட ஆதித்யனைப் பார்த்தாள்...

'இவன் என்ன சொல்கிறான்...?'

# 40

"என்ன அப்படிப் பார்க்கிறாய்... நீ சொல்லியது போல் ஒரு செங்கலாவது மிச்சம் இருக்குமா.. என்று தான் என் கம்பெனிக்குப் போனேன்.. என் கம்பெனியே மிச்சமாகி விட்டது.. என் ஆதித்யா குரூப் கம்பெனிஸ் அத்தனை யையும் காப்பாற்றி விட்டேன்.. இதை ஒரு நாளில் நான் செய்து முடிக்க முடியுமா..? நீயே சொல்..."

நந்தினி முகம் திருப்பிக் கொண்டாள்...

"உன்னைப் பார்க்கக் கொடைக்கானல் வரனும்னு ஆறு மாத காலமாக நான் டிரை பண்ணிக் கொண்டிருக் கிறேன்னு சொன்னால்.. நீ நம்புவாயா..?"

நந்தினி அமைதியாக நின்றாள்...

"போன வாரம்தான் எனக்கு நேரம் கிடைத்தது.. உடனே உன்னைத் தேடிக் கொண்டு கொடைக்கானலுக்கு வந்தேன்.. அங்கே நீயில்லை.. உன் சித்தி விவரம் சொன்னாங்க.. அவங்க அடையாளம் சொல்லிய பின்தான்.. எனக்குப் போன் பண்ணியது நீ என்றே எனக்குத் தெரியும்.."

'என் செல் நம்பர் கூடத் தெரியாமல் இருந்தாயா..? உனக்காக நான் ஊரை விட்டு ஓடிவந்திருக்கிறேன்.. நீ

உன்னை நியாயப்படுத்திக் கொண்டு இருக்கிறாய்...'

"என் மேல் தவறில்லை.. நான் அன்று இருந்த நிலைமை உனக்கே தெரியும்.. உயிர் வாழ ஒரு வாரம் டைம் எடுத்துக் கொண்டேன்... அந்த ஒரு வாரத்தில் நான் வாழ்க்கையில் அதுவரை அனுபவிக்காத சந்தோசம் அனைத்தையும் என்னை உணர வைத்தாய்.. நான் திரும்பவும் தற்கொலை செய்து கொள்ளக் கிளம்பிய நேரத்தில்.. நீ என் பாதையை மாற்றி நடக்க வைத்தாய்.. அந்த நிலையில் உன் செல்போன் நம்பரை வாங்கும் நினைவு எனக்கு இருக்குமா..?"

ஆதித்யன் தன்னிலை விளக்கம் சொன்னான்..

"எனக்கு மட்டும் எப்படி உங்கள் செல் நம்பரை என் போனில் பதிவு பண்ணிக் கொள்ள வேண்டும்ன்னு தோன்றியது...?"

"அது தோன்றாமல் போனது எனது தவறுதான்.. அதற்காக என்னை நீ வெறுத்து விடுவாயா...?"

"நான் யார் உங்களை வெறுக்க..?"

"நீ என்னை விரும்பியவள்.."

"ஆனால்.. நீங்கள் என்னை விரும்பவில்லையே..."

"விருப்பமில்லாமலா உன்னைப் பார்க்க ஓடி வந்தேன்..?"

நந்தினிக்கு அங்கு நிற்க முடியவில்லை.. நின்றால் அவனது தன்னிலை விளக்கம் மனதில் ஏறிவிடும் என்று தோன்ற.. வேகமாய் வெளியேறி விட்டாள்...

"என்ன ஆதி.. இப்படிப் போகிறாங்க.."

"எங்கே போய்விடப் போகிறாள்.. இனி அவளது நிழலைக்கூட என்னை விட்டு விலக விட மாட்டேன்.. சௌம்யா..! உன் ஆளின் பெயர் என்னன்னு சொன்ன..?"

"ஆஷா.. ஆனால்.. அவளிடம் நான் இன்னும் என் காதலைச் சொல்லவில்லை..."

"சொல்லிவிடு சௌம்யா.. என்போல் உணர்வால் உணர்ந்தேன்.. வாய் விட்டுச் சொல்லவில்லைன்னு கோட்டை விட்டு விடாதே..."

"என்ன ஆதி.. இப்படிப் பயமுறுத்துகிற..."

"இப்போது உன் கண் முன்னால்தானே அவளிடம் அத்தனை தன்னிலை விளக்கமும் சொன்னேன்.. அவள் கொஞ்சமாவது இளகி வந்தாளா...?"

"ஆமாம்.. நீ சொல்வதும் சரிதான்.."

"எதையும் மனதில் வைத்துக் கொண்டிருக்காமல் சீக்கிரம் சொல்லிவிடு.. இந்தப் பெண்களுக்குக் கோபமும்.. ரோஷமும் வந்தால்.. நம்மால் தாங்கிக் கொள்ள முடியாது.."

"நிஜம்தான்..."

"உன் ஆளைக் கொஞ்சம் வரச் சொல்லி.. என்னை அவள் வீட்டில் கெஸ்டாகத் தங்க வைத்துக் கொள்ளச் சொல்லேன்.."

"ஓ.. நீ வீட்டில் முகாமிடப் போகிறாயா..?"

"வேறு வழி..."

சௌம்யன் ஆஷாவை வரச் சொன்னான்.. அவளும் வந்தாள்.. சௌம்யனின் முன்னால் அமர்ந்திருந்த ஆதித்யன்.. அவளைப் பக்கவாட்டில் திரும்பி.. எப்படி யிருக்கிறாள் என்று பார்த்து வைக்க..

"ஏன் சார்.. பார்க்கணும்னு நினைத்தால்.. நன்றாகத் திரும்பிப் பாருங்களேன்.. இப்படிப் பார்த்தால்.. கழுத்து சுளுக்கி விடாதா..?" என்று அவள் கேட்டு வைத்தாள்..

"சௌம்யா...!" என்றான் ஆதித்யன் ஆச்சரியத்துடன்..

"நான் சொன்னேனா... இல்லையா...?"

"ஆமாம்டா.. அப்படியே சர வெடிதான்.."

"எப்படி.. ஒகே தானா...?"

"டபுள் கூட இல்லை.. டிரிபிள் ஓகே..."

ஆஷாவிற்கு ஒன்றும் விளங்கவில்லை.. வழக்கமாய் அவள்தான் மற்றவர்களைப் பார்த்து கமென்ட் அடிப்பாள்.. இவர்கள் இருவரும் என்னடாவென்றால் இவளைப் பார்த்தே கமென்ட் அடிக்கிறார்களே.. 'திருநெல்வேலிக்கே அல்வா..? இதைச் சும்மா விடக்கூடாது..'

"சார்... நீங்க கூப்பிட்டிங்களே..."

"ஆமாம்..."

"எதற்கு.. சார்..?"

"இப்போது இவன் உன்னைக் கழுத்துச் சுளுக்கிக் கொள்வது போலத் திரும்பிப் பார்த்தானே.. அதற்குத்தான்.."

"ஏன் சார்.. இவர் பார்வையிட நானா கிடைத்தேன்...?"

"என்ன செய்வது.. எனக்கு நீதானே கிடைத் திருக்கிற..."

"வாட்...?"

"எதற்கு இவ்வளவு அதிர்ச்சி...? லுக் ஆஷா.. இவன் என் பெரியப்பா மகன்.. அண்ணன்.. நான் ஆஷா.. ஆஷா என்கிற பெண்ணைக் காதலிக்கிறேன்னு சொன்னேன்.. தம்பிக்குப் பெண்டாட்டியாக வரப் போகிறவளைப் பார்க்கணுமின்னு சொன்னான்.. உன்னை வரச் சொன்னேன்.. இவனும் பார்த்துவிட்டு ட்ரிபிள் ஓகேன்னு சொல்லி விட்டான்.. போதுமா...?"

'போதாது....' என்று கூவ வேண்டும் போல அவளுக்கு இருந்தது.. திருநெல்வேலி, அல்வாவிடம் மயங்கி விட்டது..

# 41

நந்தினி வீட்டுப்படியேறி.. அவளது மாடி போர்ஷனில் கதவைத் திறந்த போது...

"நந்தினி..." என்றவாறு ஆஷா வந்தாள்...

"ம்ம்..."

"என் மாமா மகன் வந்திருக்கிறார்.. இங்கேதான் கொஞ்ச நாள் தங்கப் போகிறார்... உனக்கு அறிமுகப்படுத்தலாம்ன்னு கூப்பிட்டு வந்தேன்.."

ஆஷாவின் மாமன் மகன் வந்தான்.. வணக்கம் சொன்னான்.. நந்தினியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன...

'இவனுக்கு ஊரெல்லாம் உறவா..? அன்றைக்கு என்னவோ ஆள் துணையில்லாத அநாதைன்னு கதை அளந்தானே...'

ஆதித்யன் நந்தினியின் நிழலாகத் தொடர்ந்தான்.. ஆஷாவின் மூலம் கதை கேட்டுவிட்ட அவளது பாட்டியும் அம்மா அகிலாண்டமும் ஆதித்யனுக்கு முழு ஆதரவு கொடுத்தனர்.. தாய்க்குலத்தின் ஏகோபித்த ஆதரவுடன்.. நந்தினியைக் கரைக்க முயன்றான் அவன்..

"கடலையே ஏன் பார்த்துக்கிட்டிருக்கே நந்தினி..."

"ஆவேசமாய்ச் சுழன்றடித்து வரும் அலை.. தோற்றுப் போய்த் திரும்புவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.."

ஆதித்யனுக்கு மனம் வலித்தது.. தோல்விச் சிந்தனையில் அவனது நந்தினியா..?

மற்றொரு நாளில் அவளிடம் நெருங்கினான்..

"என் பக்கமிருக்கும் நியாயத்தை ஒரே ஒரு தடவை நினைத்துப் பார்க்க மாட்டாயா..?"

"நான் மட்டும் ஊரைவிட்டும்.. வீட்டை விட்டும் ஓடி வராமல் இருந்திருந்தால்.. இந்நேரம் நான் இன்னொருவனுக்கு மனைவியாகி இருப்பேன்.. அதை நீங்கள் நினைத்துப் பார்த்தீங்களா...?"

ஆதித்யன் வாயடைத்துப் போனான்.. அவளது கேள்வியில் இருந்த உண்மை அவன் மனதைச் சுட்டது..

சில நாள்கள் கழிந்தபின்.. கடற்கரையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தவளுடன் சேர்ந்து நடந்தபடி பேச்சுக் கொடுத்தான்...

"நீ என்னைப் பற்றி உன் வீட்டில் சொல்லி யிருக்கலாமே.."

"என்னவென்று சொல்வது...?"

"நான் உனக்கு என்னவோ.. அதைச் சொல்ல வேண்டியதுதானே.."

"எப்படி...? என்னிடம் வாய் வார்த்தையாய் உறுதி சொல்லிவிட்டுப் போனீங்களா..? எந்த நம்பிக்கையில் நான் உங்கள் பெயரை வீட்டில் சொல்வேன்...?"

"எந்த நம்பிக்கையில் நீ எனக்குப் போன் பண்ணின..?"

"அந்த நம்பிக்கைதான் பொய்த்து விட்டதே..."

"நான் பொய்த்து விட்டேனா.. என் காதல் பொய்த்து விட்டதா...?"

நந்தினி சட்டென்று நின்று அவனைப் பார்த்தாள்.. ஆதித்யனின் உணர்ச்சி மயமான முகத்தைக் கண்டதும் அவளுக்குப் பேச வாய் வரவில்லை.. வீட்டிற்கு விரைந்து விட்டாள்..

பௌர்ணமி நாளின் முழு நிலவொளியில்.. மொட்டை மாடியில் தனியே நின்று கொண்டிருந்தாள் நந்தினி.. மனம் ஆதித்யன் பிரிந்து சென்ற அந்த நாளின் நினைவில் நனைந்து கொண்டிருந்தது.. அன்றும் இதேபோல் மொட்டை மாடியில்தான் அவள் கைப்பிடித்து.. பின்.. பிரிந்து சென்றான்...

காலடியோசை கேட்டது.. திரும்பிப் பார்த்தாள்.. ஆதித்யன் நின்று கொண்டிருந்தான்.. அவன் முகமும்.. அவளது நினைவையே அவனும் நினைத்துக் கொண்டிருப்பதை உணர்த்தியது.. மெல்ல அவளருகில் வந்தான்.. மென்மையான குரலில் பேசினான்..

"இது நீ கொடுத்த உயிர் நந்தினி.. நீ அதை விடச் சொன்னால் விட்டு விடுகிறேன்.."

"ஐயோ..."

அவள் பதட்டத்துடன் அவனது வாயை மூடினாள்.. ஆதித்யனின் கரம் அவளது தோளைத் தொட்டது.. அவள் விம்மலுடன் அவன் மார்பில் முகம் புதைத்தாள்.. ஆதித்யனின் கரம் அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டது.. அவனது நந்தினி அவனிடம் வந்து விட்டாள்.. என்ற நிம்மதியுடன் அவன் விழி மூடிக் கொண்டான்..

பௌர்ணமி நிலவு குளிர்ச்சியை அவர்கள் மீது வீசி நகர்ந்தது...

# 42

சென்னையின் மிகப் பெரிய திருமண மண்டபம் அது.. வரவேற்பில் நின்றிருந்த மல்லிகாவும்.. ஆஷாவும்

வருபவர்களைப் பற்றித் தங்களுக்குள் பேசி ரகசியமாய்ச் சிரித்துக் கொண்டே அவர்களை வரவேற்றனர்...

என்ன சொல்லியும் கேட்காமல் மகன் ஒரு மிடில் கிளாஸ் பெண்ணைத் தனக்கு மருமகளாகத் தேர்ந்தெடுத்து விட்டானே என்ற ஆற்றாமையுடன் அடிக்கடி ஆஷாவின் பக்கம் திரும்பி முறைத்த வண்ணம் வைஜெயந்தி.. இங்கும்.. அங்கும் நடந்து கொண்டிருந்தாள்...

ஆதித்யனின் பெற்றோர் ஸ்தானத்தில் நிற்பதற்கு மனைவி சம்மதித்து விட்ட மகிழ்ச்சியில் நடராஜன் கால்கள் தரையில் பரவாமல் அலைந்து கொண்டிருந்தார்...

வருணும்.. தருணும்.. மண்டபத்தை இரண்டு பண்ணிக் கொண்டு ஓடி விளையாடிக் கொண்டிருந்தனர்..

ஆனந்திக்கு நிற்க நேரமில்லை.. வந்தவர்களை உபசரிப்பதோடு.. திருமணப் பெண் தயாராகி விட்டாளா என்று கவனித்துக் கொள்ளும் பொறுப்பும் அவளுக்கு இருந்ததால்.. ஓர் இடத்தில் நிற்காமல் ஓடி ஓடி வேலை செய்து கொண்டிருந்தாள்..

மகேந்திரன் தன் மருமகனின் பெருமையைப் பற்றி உறவினர்களிடம் பேசிக் கொண்டிருக்க.. தெய்வேந்திரன் அதை ஆமோதித்துத் தலையாட்டிக் கொண்டிருந்தார்...

மலர்விழி மணமகளின் அறையில் அமர்ந்து மகளைப் பார்ப்பதும் கண்களைத் துடைத்துக் கொள்வதுமாக இருந்தாள்..

சுப முகூர்த்த நேரத்தில் ஆதித்யன்.. நந்தினியின் கழுத்தில் தாலி கட்ட.. ஆனந்தி நெகிழ்ச்சியுடன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்..

மாலை வரவேற்பில் ஆதித்யன் நந்தினியின் காதருகே குனிந்து எதையோ சொல்லி அவளின் கன்னத்தைச் சிவக்க வைத்துக் கொண்டிருந்த போது.. ஆஷா அவர்களின் அருகே வந்தாள்..

"ம்ம்.. இப்படியெல்லாம் கூட உனக்கு ரகசியம் பேசத் தெரியுமா நந்தினி..."

"ஏய்.. போடி..."

"போகிறேன்.. போகிறேன்.. என் வுட்பியையும் உன் ஆள்போல என்னிடம் சரண்டராக வைக்க வேண்டாமா..? அந்த வித்தையை எனக்குச் சொல்.. போய் விடுகிறேன்.."

"உன்னை..."

நந்தினி இன்னும் அதிகமாய் முகம் சிவந்தாள்.. ஆதித்யன் அதை ரசித்தான்..

இரவின்.. இதமான அமைதியில்.. ஆதித்யன் அறையின் மூலையில் நின்று கொண்டிருந்தான்.. அறைக்குள் வந்த நந்தினி அவனைப் பார்த்துத் திகைத்தாள்..

"ஏன் அங்கே நிற்கறீங்க..?"

"என் கையைப் பிடித்து நீ இழுத்து.. கடைசியில் கல்யாணமும் பண்ணிக் கொண்டு விட்டாய்.."

"ச்சு.. இப்படியே பட்டம் கட்டுங்கள்.."

"இப்போது என் கைப் பிடித்து நீ இழுத்தால்தான் நான் அங்கே வருவேன்.."

"ஆதித்யன்..! என்ன இது...?"

அவன் முரண்டு பிடித்தான்.. அவள் வளைந்து கொடுத்தாள்.. அவன் கைப் பிடித்து அவள் இழுக்க முயன்ற அதே நேரம் அவள் கைப் பிடித்து அவன் இழுக்க.. அவன் மேல் விழுந்தாள்.. அவன் அவளது இடுப்பில் கை கொடுத்துத் தூக்கிக் கொண்டு கட்டிலை அடைந்தான்.. அவளை வென்றான்..

அந்த வார இறுதியில் கொடைக்கானலுக்கு அவர்கள் மறுவீட்டு விருந்திற்குச் சென்றார்கள்.. முதன் முதலாய்.. ஆதித்யனின் கைப் பிடித்து இழுத்து நிறுத்திய அந்த இடத்தைப் பார்த்தார்கள்.. திரும்பி.. வாழ்வுப் பாதையில் வாழ்வதற்காக இணைந்து நடந்தார்கள்...

சில சந்திப்புக்கள் இனிதானவை..!

...முற்றும்...